ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளும் வைணவமும்





**தேவப்பெருமாள்** (காஞ்சி)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளும் வைணவமும்




ஆசிரியர்:

ஸ்ரீமான் கோ. க. அ. ரங்கராஜன்

பி. காம்., எம். ஏ

திருப்பதி



சுக்ல ஆனி சுவாதி

1989

முதற்பதிப்பு : 1989
பிரதிகள் : 1000
உரிமை : ஆசிரியருக்கு

This book is Published with the financial assistance of Thirumala Tirupati Devasthanams under their scheme "Aid to publish Religious Books"

விலை ரூ. பத்து

புத்தகம் கிடைக்குமிடம்:
ஸ்ரீ K. K. A. ரங்கராஜுலு
146, G. S. தெரு,
திருப்பதி - 517 501.

அச்சிட்டோர் :
குரு அச்சகம்
19, இருசப்ப கிராமணி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.
போன் : 844371

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# முன்னுரை

**உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்**
**அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்**
**துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.**

உயர்வற வுயர்நலமுடைய திருநாரணன் இப்பூமண்டலத்தில் ஆழ்வார்களைத் தோற்றுவித்து அவ்வாழ்வார்களுக்கு மயர்வற மதிநலமருளி அவர்களால் வைணவம் என்னும் ஆலமரத்தை நன்கு தழைத்தோங்கச் செய்தான். ஆழ்வார்களுக்குப் பின் தோன்றிய வழிக்குரவர்களான ஆசாரியர்கள் அந்த ஆலமரத்தின் கிளைகளாகவும் விழுதுகளாகவும் விளங்கி, 'திராவிட வேத ஸாகர' மென்னும் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தத்திற்கு உரைகளை எழுப்பி வைணவ ஆலமரத்தை மேலும் மிக்க வளர்ச்சி பெறச் செய்தனர். பூருவாசாரியர்களான நாதமுனிகள் தொடக்கமானோர் ஓராண்வழியாகத் திவ்வியப்பிரபந்தத்தின் பொருளாட்சிகளை வாய்மொழியாகப் பரவச் செய்தனர். இராமானுசர் தோன்றி 'ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறு'மென்று அந்த ஓராண் வழியாகிய வரம்பை அறுத்து, தமக்கு முன் தோன்றிய பூருவாசாரியர்களின் பெருமைகளையும் வெளியுலகுக்குப் புலப்படுத்தினர். இராமானுசருக்குப் பிறகும் பல ஆசாரியர்கள் தொடர்ச்சியாகத் தோன்றினர். அவ்வாசாரிய பரம்பரை மணவாளமாமுனிகளுடன் நிறைவு பெறுகிறது.

இராமானுசர், மணவாளமாமுனிகள் ஆகியோரின் மறு அவதாரமான ஸ்ரீகாஞ்சீஸ்வாமி என்றழைக்கப்படும் **பத்ம விபூஷண, மகாமஹோபாத்யாய, மஹாவித்வான், ஸ்ரீமான் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமி** தோன்றி, வைணவ உலகுக்குப் பல தொண்டுகள் செய்து இந்த இருபதாம் நூற்றாண்டை '**அண்ணங்கராசாரியரின் நூற்றாண்டு**' என உலகோர் கொண்டாடும்படிச் செய்தார்.

இளம்வயதில் எனக்கு ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியிடம் நெருங்கிய பழக்கம் இருந்துவந்தது. சிறுவர்களைக் கண்டால் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார். அவரிடம் திருவந்தாதிகள், பெரியதிருமொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களைக் கற்றுக்கொண்டேன். 50 ஆண்டுகளுக்கு மேல் ஸ்ரீகாஞ்சீ வரதராஜப்பெருமாளைச் 'சுற்றி நாம் வலஞ்செய்ய நம் துயர் கெடுங்கடிதே' என்னும் திருவாய்மொழித் தொடங்க அவர் விடியற்காலை வேளையில் நடத்திவந்த 'ப்ரதக்ஷிணம்,

என்னும் 'விதி சுற்றி வருதலில் நான் கலந்து கொண்டு தோத்திரப் பாடங்களைச் சொல்லி வந்துள்ளேன். என்னுடன் வேடிக்கையாக அவ்வப்போது பேசுவார். இப்போது அவரைப் பற்றி நான் எழுதத் துணிந்ததற்குக் காரணம் அந்த ஸ்வாமியின் திருவருளே என்பது என்னுடைய உறுதிமொழியாகும்.

என்னுடைய முதுகலைப் பட்டத்திற்குப் பிறகு **திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் பொன். சௌரிராசனுர்** அவர்கள் என்னை ஆய்வுத்துறையில் ஈடுபடுமாறு ஊக்குவித்தார். ஆய்வுக்கான தலைப்பைத் தேர்ந்தெடுக்க என்னுடைய அத்திம்பேர் (அக்காவின் கணவர்) ஸ்ரீமான் உ. வே. கடாம்பி ஸ்ரீநிவாஸவரதாசாரியசுவாமியை (வைகுண்டவாசி) அணுகுமாறு பணித்தார். அச்சமயம் ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி பரமபதித்து சில நாட்களே ஆகியிருந்தன. சுவாமியின் நினைவாகவும், அந்நினைவை மெய்ப்பிக்கும் வகையில் அவருக்கு நாம் செய்த தொண்டாகவும் இருக்குமென்று என்னுடைய அத்திம்பேர் எண்ணங்கொண்டு, அவர் (சுவாமி) பணித்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்த **'திவ்யார்த்த தீபிகை'** என்னும் உரைமீது ஆய்வு நடத்துமாறு ஆலோசனை கூறினர். அவ்வண்ணமே திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் ஆய்வுக்குரிய பதிவு செய்யப்பட்டது. இதற்கு அங்கமாக ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியைப் பற்றி எழுதி ஒரு புத்தகத்தை அறிவிலியான அடியேன் வாயிலாக வெளியிடவேண்டுமென்று பேராசிரியர் அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். அடியேனை ஊக்குவித்த இப்பெரியாரே இந்தப் புத்தகத்திற்கு அணிந்துரையும் அளித்து அடியேனைப் பெருமை படுத்தியதற்கு என் உளங்கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் முதற்கண் இப் பெரியார்க்குச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

வைணவ மரபுப்படி ஞானசிரியராக இருந்து ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த காலக்ஷேபங்களைத் தாய்ப் பறவை தன் குஞ்சுவிற்கு இரையைச் சிறிது சிறிதாக எவ்வாறு ஊட்டுமோ அவ்வாறு முறைப்படி ரகஸ்யத்ரயம், திருப்பாவை, ஸ்தோத்ர ரத்நம் முதலானவற்றின் வ்யாக்யானங்களைக் கால க்ஷேபமாக நடத்தியவர் - **நியாய சிரோமணி, தமிழ் வித்வான் ஸ்ரீமான் உ. வே. தி. அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி** "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி ஆட்கொண்டார். இம்மகான் ஸ்ரீ காஞ்சி ஸ்வாமியின் தேக ஸம்பந்தமும் உடையவர். ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியைப் பற்றி இம்மகானுக்குத் தெரிந்த அளவு மற்ற எவர்க்கும் தெரியாது என்பது என் திடநம்பிக்கை. இப்பெருந்தகையை அணுகி ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியைப் பற்றிகேட்டபோது சுவாமியின் **'தானே எழுதிய தன் சரிதை'**

என்னும் புத்தகத்தை அடியேனிடம் கொடுத்து உதவினர். பிறகு அடியேனுடைய கைப்பிரதியை அவரிடமே கொடுத்து திருத்து மாறுக் கேட்டுக் கொண்டேன். அங்ஙனமே அவர் எவ்விதத் தாமதமுமின்றித் திருத்திக் கொடுத்தார். அடியேனுடைய இந்தத் புத்தகத்திற்கு மதிப்புரையும் அளித்த இப்பெருந்தகைக்குத் 'தலையல்லால் கைம்மாறிலேனே' என்பதைத் தவிர வேறொன்று மறிகிலேன்.

அடியேனுடைய இளம் வயதிலிருந்து அடியேனுக்குக் கல்வி புகட்டி அடியேனை இச்சமூகத்தில் ஒருவனாக ஆக்கிய பெருமை அடியேனுடைய அத்திம்பேர் **நியாய சிரோமணி ஸ்ரீமான் உ. வே. கடாம்பி ஸ்ரீநிவாஸ வரதாசாரிய ஸுவாமி**யைச் சாரும். முதுநிலைப் பட்டப் படிப்பு வரை கற்பதற்குத் துணையாயிருந்த இவர் என் ஆய்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். இப் பெரியவருக்கும் அடியேனுடைய பிரணாமங்கள் உரித்தாகுக.

முதுநிலைப் படிப்பில் அடியேனுடன் படித்த **ஸ்ரீமான் உ. வே. டாக்டர் மா. வரதராஜன்** அவர்கள் எல்லா விதத்திலும் உதவி செய்தார். அவருக்கும் அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கற்பகத் தருவான 'வட திருவேங்கடந் தெந்தை'யின் அருளால் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் இப்புத்தக வெளியீட்டுக்குப் பண உதவி தந்தமைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியின் திருவருளை மிகப் பெற்ற **ஸ்ரீமான் உ. வே டாக்டர் M. A. வேங்கட கிருஷ்ணன்** அவர்கள் அடியேனு டைய கைப் பிரதியைப் பார்த்து காலி ஃப்ரூபைத் திருத்திக் கொடுத்து, ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியின் அருளைப் பெற்ற **குரு அச்சக** உரிமையாளர் திரு. **இ. வ. கிருஷ்ணன்** அச்சிட்டுக் கொடுக்குமாறு பரிந்துரை செய்தார். அவர்களுக்கும், திருவாளர் கிருஷ்ணன் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இப்புத்தகத்தை வெளியிட மற்றும் பல பெரியார்கள் பண உதவி செய்தனர். அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

என்னுடைய இந்த முதல் புத்தகத்தில் குறைகள் இருப்பின் அவற்றைக் களைந்து, என்னை மேலும் ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு
**கோ. க. அ ரங்கராஜன்.**

# பண உதவி செய்தவர்கள்

1. பரஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய சிறிய கேள்வி
திருவேங்கட ராமானுஜ ஜீயர் ஸ்வாமி, திருப்பதி

2. வைசாளி மாதவய்ய செட்டி ட்ரஸ்ட், சென்னை

3. T. V. சுந்தரம் சாரிடிஸ், சென்னை

4. ஸ்ரீமான் காளஹஸ்தி ஸ்ரீநிவாஸாசாரியர் திருப்பதி

5. Dr. M. V. ஜயராமன் பெங்களூர்

6. ஸ்ரீ K. V. ரங்கநாதன் (ரகு) (Bhimas) திருப்பதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# மதிப்புரை

## ஸ்ரீமான் உ. வே. ந்யாய சிரோமணி, தமிழ் வித்வான்
## தி. அ. கிருஷ்ணமாசார்ய சுவாமி
## திருப்பதி

ஸ்ரீமான் K.K.A. ரங்கராஜன், M.A. அவர்கள்-மஹாமஹோபாத்யாய, பத்ம விபூஷண, வ்யாக்யான வாசஸ்பதி, மஹா வித்வான், ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி முதலான பொருள் பெற்ற பல விருதுகளைப் பெற்ற ஸ்ரீ உ.வே. காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையுரையைப் பற்றி, 'திவ்யார்த்த தீபிகை ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஓர் ஆராய்ச்சி நூலை இயற்ற புகுந்தவர், அதற்கு முன்பாக, அவ்வுரையாசிரியரின் பெருமையைப் பகர்கின்ற 'ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளும் வைணவமும்' என்னுமிந் நூலை எழுதி வெளியிடுகிறார்கள். இனி வரப்போகும் ஆராய்ச்சி நூல் வெளியீடாகிய சூரியோதயத்திற்கு இந்நூல் வெளியீடு அருணோதயமென்னலாம். திவ்யார்த்த தீபிகையைப் பற்றிய ஆராய்ச்சி நூல் நன்கமைய வேண்டுமானால் அவ்வுரையை அளித்த பெருவள்ளலான ஸ்ரீ ஸ்வாமிகளின் பெருமையைச் சிறிது பேசியே தீர வேண்டுமென்ற இவர்தம் மனவுறுதி வரவேற்கத் தக்கதேயன்றோ?

இவர்தம் தகப்பனார் ஸ்ரீ. உ. வே. K. K. A. ராகவாசார்ய ஸ்வாமி (வேத பாட, ஜடப்ரோல் ராஜகுரு) ஸ்ரீ P. B. A. ஸ்வாமிகளோடு கூடவே வேதாத்யயனம் செய்து அவரிடம் மிக்க மதிப்புக் கொண்டு அவர்தம் நிறுவிய வேத வேதாந்த வைஜயந்தி பாடசாலையில் வெகுநாட்கள் உபாத்யாய பதவியை அலங்கரித்தவர். இவர்தம் பாட்டனார் ஸ்ரீ. உ. வே. K.K.A. திருவேங்கடாசார்ய ஸ்வாமி ஸ்ரீ.P.B.A. ஸவாமிகள் திறத்தில் பேரன்பு பூண்டொழுகியவர். இங்ஙனம் தம்முடைய முன்னோரிவரும் ஸ்ரீ. உ. வே. காஞ்சீ சுவாமிகளிடம் செலுத்திய அன்பும் மதிப்பும் தமக்குப் பரம்பரைச் சொத்தாகக் கிடைக்கப் பெற்று, தாமும்

நேராக ஸ்ரீ ஸ்வாமிகளிடம் பழகியதனுல் ஸம்பாதித்துக்கொண்ட பக்தியும் சேர்ந்து தூண்ட, அதனுல் இவர் தாம் இந்நூலை எழுதியிருக்கிருரென்ருல் இதில் சிறிதும் அதிசயோக்தி இல்லை.

இந்நூலின்கண் இவர் பல தலைப்புகளில் ஸ்ரீ P.B.A. ஸ்வாமிகளின் பெருமையை நன்ருக விளக்கிக் காட்டியிருக்கிருர். பல நூல்களைப் படித்து அறிய வேண்டிய ஸ்ரீ ஸ்வாமிகளின் பெருமைகளை ஸாரமாக அறிந்து கொள்வதற்கு இந்நூல் மிக மிக உதவி புரியும். இந்நூலைப் படிப்பவர் ஒவ்வொருவரும் ஸ்ரீ காஞ்சீ P.B.A. ஸ்வாமிகளைப் போலவே நாமும் இருக்க வேண்டுமென்னும் திடமான எண்ணமுடையவராவரென்பது அடியேனுடைய திடமான நம்பிக்கை. இப்புத்தகத்தை எல்லாரும் வாங்கிப் படித்து இன்புறுவார்களாக.

பெருமாள் கோயில் இங்ஙனம்
3—6—89 தி. அ. கிருஷ்ண தாஸன்

# அணிந்துரை

**பேராசிரியர் பொன். சௌரிராசன் M.A., Ph.D.**
**தமிழ்த்துறை, திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி**

**கச்சிநகர் வந்துதித்த கலிப்பெருமான் வாழியே**
**கற்பவர்தம் மனமுருகக் கருத்துரைப்போன் வாழியே**
**சிச்சன் தன்னுருவினை சேமிப்போன் வாழியே**
**சீர்வசன பூடணத்தின் சிறப்புரைப்போன் வாழியே**
**இச்சையுடனுசார்பனிதய மீந்தோன் வாழியே**
**எழிற்கலைகள் திருநாவில் இலங்க நின்றுன் வாழியே**
**அச்சுதன் தாளிணை பணிந்தே அருள்பெற்றுன் வாழியே**
**அண்ணங்கராரியன்தன் அடியிணைகள் வாழியே.**

வாழ்க்கையை ஒரு வித்தையாகச் சொல்லுகிருர் திருவள்ளுவர்' அந்த வித்தைகளில் வல்லவர்களே வாழ்வில் வெற்றிபெற இயலும் என்று அவர் தெளிவு செய்கிருர். வாழ்வில் எத்தனையோ வருகின்றன; போகின்றன. பிறப்பு வளர்ப்பு, இறப்பு இந்த வட்டம் காலம் எனும் நியதிக்குள் இடையருது சுழன்று கொண்டிருக்கிறது. இளமை, முதுமை என்னும் மாறுதல்களும் தவிர்க்க முடியாதன. இந்தத் தெளிவு பெற்ற வாழ்வு வல்லார்கள் காலச் சுழற்சியை உணர்ந்து, மாறும் நிலையாமையைத் தெளிந்து இவற்றுக்கு இடையே மாருத மெய்ப்பொருளைக் கண்டு அழியாப் பெருவாழ்வு அடைகின்றனர். அத்தகைய வித்தகர்கள் ஒரு சிலருள் ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியசுவாமிகளும் ஒருவர்.

இவர்தம் வாழ்வும், பணியும், வாழ்வோர்க்கு வழிகாட்ட வல்லன. வாழ்வில் வளமும் நலமும் சேர்ப்பிக்க வல்லன. ஏறக் குறைய ஒரு நூருண்டு (94 ஆண்டுகள்) வாழ்ந்த பெரியார் இவர். இதனுலேயே இவர்தம் ஒழுக்கமும், உள்ளத்து உயர்வும் நன்கு உணரப்படும். நல்ல மகனுக, வழி நடத்தும் குடும்பத் தலைவனுக, வாழ்நாளெல்லாம் கற்கும் உயர் மனிதனுக, பேரருளாளனையே

நெஞ்சில் நினைந்து போற்றும் வைணவச் சீலராக, தமிழ், வடமொழி மறைகளை எழுத்தாலும், சொற்பொழிவாலும் இம்மண்ணுலகிற்கு வழங்கும் தெய்வத்திரு எழுத்தாளராக சுவாமிகள் இந்த நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் விளங்கி உலகுக்கெல்லாம் திருமால் சீரினைப் பொலியச் செய்து வந்துள்ளார்கள்.

இத்தகு சான்றோர் ஒருவரைப் பற்றி வளர்கின்ற குழந்தைகளும், வாழ்கின்ற மனிதர்களும் அறிந்து, வாழ்வில் உய்யவேண்டும் என்னும் பேராவலால் இந்த நூலாசிரியர் திரு. ரங்கராஜன் இந்த நூலை எழுதி உள்ளார். இவர் ஸ்ரீ வைணவ நெறியினைச் சிந்தையிலும் செயலிலும் கொண்டு வாழ்ந்து வருபவர். இது இந்நூல் எழுதுவதற்குரிய இவர்தம் தகுதி ஆகும்.

மேலும் சுவாமிகளுடைய கல்வியின் ஆழத்தையும் அகலத்தையும், பக்தியையும், பாங்கையும் புலப்படுத்தும் திவ்யார்த்த தீபிகையில் இவர் பி. எச் டி. ஆராய்ச்சி செய்து வருகிறார். அறிவாராய்ச்சியும் இந்நூல் எழுதும் தகுதியை இவருக்கு வழங்கியுள்ளது எனலாம்.

சான்றோர் வாழ்வைக் காட்டும் இந்நூலை அனைவரும் கற்று உயரவேண்டும், உய்யவேண்டும் என்பதே இந்நூலாசிரியர்தம் ஆர்வம். இந்த நல்ல ஆர்வம் நிறைவுறுமாறு தமிழ்க் கூறும் நல்லுலகம் இதனை ஏற்று, போற்றி நலம் பெறுமாறு வாழ்த்துகிறேன்.

திருப்பதி
1—6—89

இங்ஙனம்
பொன். சௌரிராசன்

# ஸமர்ப்பணம்



எனது தகப்பனாரும், ஆசார்யரும்

ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியுடன் வேதாத்யயனம் செய்தவருமாகிய

**வேதரத்ந ஜடப்ரோல் ராஜகுரு ஸ்ரீமான் உ. வே**

**கோ. க. அண்ணன் ராகவாசாரியஸ்வாமிக்கு**

**இப்புத்தகம் ஸமர்ப்பணம்**

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளும் வைணவமும்

**ஸ்ரீமான் உபயவேதாந்த மஹாவித்வான் அண்ணங்கராசாரிய சுவாமியின் சிறந்த பரம்பரைத் தனியன்**

**काञ्ची सौम्यवरोपयन्तृयमिराट् कारुण्यसंपादित**
**श्रीमद्द्राविड वेदभाष्य विशदज्ञानामृतास्वादनम् ।**
**वात्स्य श्रीमदनन्त देशिककृपा संप्राप्त भाष्यामृतं**
**वन्दे वादिभयङ्करार्यकुलजं हस्त्यद्रिनाथं गुरुम् ॥**

காஞ்சீமாநகரில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமிகளுடைய தயையாலே ஸம்பாதிக்கப்பட்ட, மங்களகரமான தமிழ் வேதமாகிய திவ்யப்ரபந்தங்களுடைய பாஷ்யத்தில் (பேருரைகளில்) தெளிவான ஞானமாகிற அம்ருதத்தைச் சுவைக்கப் பெற்றவரும், ஸ்ரீவத்ஸ குலத்தில் தோன்றிய (ப்ரதிவாதி பயங்கரம் காதி) அநந்தாசாரிய ஸ்வாமியினுடைய கிருபையாலே ஸ்ரீபாஷ்யமாகிற அம்ருதத்தை அடையப் பெற்றவரும், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவின் குலத்தில் உதித்தவருமான ஹஸ்த்யத்ரி நாதர் (அண்ணங்கராசார்ய ஸ்வாமி) என்கிற திருநாமத்தையுடைய ஆசாரியரை வணங்கித் துதிக்கிறேன்.

**தெருளுற்ற வாழ்வார்கள் சீர்மை யறிவாரார்**
**அருளிச் செயலையறி வாரார் — அருள்பெற்ற**
**நாதமுனி முதலாம் நம்தேசிகரை யல்லால்**
**பேதைமன மேயுண்டோ பேசு.**

**(உபதேசரத்தினமாலை 36)**

திருமகள் நாதனை திருநாராயணனின் படைப்பில் பல பெரியோர்கள் தோன்றினர். அவர்களைக் கொண்டு இந்நிலவுலகின்

சன் ஆன்மிகம் தழைக்கப் பெற்றது. ஒவ்வொரு சமயத்திலும் அவ்வாறு பெரியோர் பலர் தோன்றியுள்ளனர். வைணவ சமயம் அப்பெரியோர்களை 'ஆசாரியர்கள்' என்றும் தமிழுலகம் 'வழிக் குரவர்கள்' என்றும் அழைக்கின்றன. ஆசாரியர்கள் பக்தியைப் பற்றி முப்பத்திரண்டு வகையாக வருணிப்பர்.

காலப்போக்கில் ஜீவான்மாவினுடைய பக்தி குறைந்து வந்தது. 'ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடையனான குரு'வைச் சீவான்மா அடைந்து அதன் மூலமாகத் திருமாலை அடைகிறான் என்பது வைணவ மரபு.

வைணவ உலகில் 'அருள்பெற்ற நாதமுனி முதலாம்' ஆசாரியர்கள் முன்பே தோன்றினும் அனைத்துலகும் வாழப்பிறந்த நம் இராமானுசன் தோன்றிய பின்பே அவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் பெருமைகளும் வெளியுலகுக்குத் தெரியவந்தன.

இராமானுசர் தம் வைணவக் கோட்பாடுகளை, ஒரு பெரிய ஏரியின் நீரைப் பல மதகுகளின் வழியாக வெளிப்படுத்தி அந்நீரின் பயனை உலகமடைவதுபோல, இவ்வுலகில் எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளின் (தம் சீடர்களின்) வாயிலாக உலகோர் மேன்மேலும் அறியும் வண்ணம் செய்தருளினர்,

அவ்வெழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர் முடும்பை நம்பி என்பார். இவருடைய வழித்தோன்றலாகப் பரம ரகஸ்யமான (மறைபொருள்) சிறந்த பொருள்களை (விசேஷ அர்த்தங்களை) ஏற்படுத்திய லோகாசாரியர் என்பவருடைய சிற்றப்பாவின் (சிறிய தகப்பனாரின்) பேரனாய்த் தோன்றியவர் ஹஸ்திகிரி (அத்திகிரி) அண்ணா என்றழைக்கப்படும் பிரதிவாதி பயங்கரம் அண்ணன் என்பவர். இவர் காஞ்சியில் திருத்தண்கா[1] என்னும் ஓர் பகுதியில் அவதரித்தவர். திருவேங்கடமலையப்பனின் திருமணியின் அவதாரமாகத் தோன்றிய வேதாந்தாசாரியர் எனும் பெரிய ஆசாரியருடைய புதல்வரான நயன வரதாசாரிய சுவாமிகளின் திருவருளுக்கு இவர் இலக்காகி விசிஷ்டாத்துவைத வேதாந்தத்தை அறக்கற்று, திவ்யப்ரபந்த-ரகஸ்ய ஸத்ஸம்ப்ரதாய ஸாரப்பொருள்களை நன்கு அறியவேண்டித் திருவரங்கத்தில்

---

1. விளக்கொளி எம்பெருமான் (தீபப்ரகாசர்) எழுந்தருளியுள்ள தலம். 108 திவ்யதேசங்களில் ஒன்று.

வீற்றிருந்த மணவாளமாமுனிகளின் திருவடிகளில் அடிபணிந்து எல்லா விசேஷார்த்தங்களையுமுணர்ந்து உய்ந்தார்.

இதற்கிடையில் மாயாவாதியான 'ந்ருஸிம்ஹமிச்ரன் என்பான் வாதப்போரில் வெற்றிபெற நினைத்து 'பெருமாள் கோயில்' என அழைக்கப்படும் காஞ்சிபுரத்திற்கு வட நாட்டினின்றும் வந்தான். அவ்வமயம் நயன வரதாசாரிய சுவாமி சித்தாந்தத்தில் கரைகண்டவராக வீற்றிருப்பதையறிந்து 'வல்லீராகில் என்னை வென்று சித்தாந்தத்தை ஸ்தாபித்துக் கொள்ளும் பார்ப்போம்'[2] என்று ஒரு தூதுவன் வாயிலாகத் தெரிவித்தான் அம்மாயாவாதி. 'வாதப் போரில் தோற்பவன் வெற்றி பெற்றவர்க்குச் சீடனாகக் கடவன்'[3] என்று தான்கொண்ட நிபந்தனையையும் தெரிவித்தான். அப்போது நயன வரதாசாரியர் தம் சீடர்களை நோக்கினார். குறிப்பறிந்து அண்ணா எழுந்து நின்று 'இக்காரியத்தை அடியேனுக்கு நியமித்தருளவேணும்; ஸ்வாமியின் திருவருளால் குறையொன்றும் வாராது'[4] என்று விண்ணப்பம் செய்தார். நயன வரதாசாரிய சுவாமிகள் அண்ணாவை வாரிப் பிடித்து அணைத்து சீடர்களை நோக்கி ('முன்பு நம் தேசிகனார் நமக்கருளிய வரத்தின்படியே இன்று நமக்கு ஜ்ஞாந புத்திரன் வாய்த்தான் காண்மின்; உலகம் நிறைந்த புகழை உண்டாக்குமவனாய்த்து இவன் நமக்கு'[5] என்று திருவாய்மலர்ந்தருளி, அண்ணாவைப் பலவாறாகக் கொண்டாடி ஆசிகள் கூறி ஒரு வெற்றிலையில் ஹயக்ரீவ பீஜாக்ஷரத்தையெழுதி உட்கொள்வித்து, 'நம் இராமானுசனுடைய தரிசனம் தழைத்தோங்கும்படி இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சென்று அந்த மாயாவாதியை வென்று வாரும்'[6] என்று நியமித்து அனுப்பினார். ஆசாரியரின் அருளைப் பெற்று அம்மாயாவாதியை வாதப்போரில் வென்று அந்த ந்ருஸிம்ஹமிச்ரனையும் கைப்பிடித்தழைத்துக்கொண்டு ஆசாரியர் திருமாளிகை அடைந்தார். முன்னமே செய்திகளையறிந்த நயன வரதாசாரிய சுவாமிகள் அண்ணாவை அன்புடன் எதிர் கொண்டழைத்து அணைத்துக்கொண்டு அனைவரையும் திருவோலக்கமாக அமர்த்தி உள்ளுருகித் தழுதழுத்த குரலுடன் அண்ணாவை நோக்கி, 'இப்போது நம் ராமானுஜ தர்சநம் உம்மால் ஸம்ரக்ஷிக்கப்பட்டதனால் உமது புகழ், உலகம் நிறைந்த தாயிற்று; இது முதலாக உமக்கு, 'பிரதிவாதி பயங்கரர்' என்ற

---

2. ஸ்ரீவாதிபீகரார்ய ஸூக்தி மாலிகா (முதல் பாகம் ரக்தாக்ஷி ஆடிப்பூசம் (27-7-84) ப. 4

3, 4, 5, 6 ஷை

வீருது நீரூழி விளங்கக்கடவது இனி இந்த நருஸிம்ஹமிச்ரன் உமக்கு வலக்கை போன்று அந்தரங்க சிஷ்யனுயிருந்து உசாத் துணையாகக் கடவன், நானே 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே' என்னவேண்டும்படி போரவும் தளர்ந்தேனுகையால் இனி நீரே தர்சன நிர்வாஹகராகக் கடவீர்; இன்றளவும் ஸ்ரீமந் நாத யாமுந யதிவராதிகளால் ஸுரக்ஷிதமாய் வந்த இத்தர்சனம் இனி உம்மால் விசேஷமாகத் தழைத்தோங்கக் கடவது" என்று சோதிவாய் திறந்து நியமித்தருளினர்.

## காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியசுவாமிகளின் தோற்றம்

**प्रसिद्धः परगोष्ठीषु प्रतिवादि भयङ्करः**
**श्रीवैष्णवानां गोष्ठीषु तद्दास इति विश्रुतः**

**ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரதிவாதி பயங்கர:**
**ஸ்ரீவைஷ்ணவானாம் கோஷ்டீஷு தத்தாஸ இதி விச்ருத:**

"புறச்சமயிகளுடைய கோஷ்டிகளில் (ப்ரதிவாதி பயங்கரன் பிரதிவாதிகளுக்குப் பயத்தை அளிப்பவன் என்கிற புகழை யுடையவன் அடியேன், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரள்களிலோ வெனில் (ஸ்ரீவைஷ்ணவதாஸன்) 'ஸ்ரீவைஷ்ணவர்களுடைய தாஸன்' என்று பிரசித்தியுடையவனுகிறேன்" என்று அண்ணு தாமே கூறியபடியே பெரும் புகழையுடைய பிரதிவாதி பயங்கரம் அண்ணு என்னும் பெரியவருடைய குடியில் தோன்றிய ஸ்ரீமான் அண்ணு ரங்கநாதாசாரிய சுவாமிக்கும், ஸ்ரீமான் சஷ்டி வரதாசாரிய சுவாமியின்* புதல்வியான அலர்மேல் மங்கை அம்மாவுக்கும் மகனுக,

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் றோன்றுமை நன்று** (திருக்குறள்-236)

என்னும் பொய்யா மொழிக் கிணங்க விக்ருதி ஆண்டு (கி. பி. 891) பங்குனித் திங்கள் விசாக நக்ஷத்ரத்தில் பிரதிவாதிபயங்கரம்

---

* இவர் பின்னர் துறவறம் பூண்டு அழகிய மணவாளச் சீயர் என்ற பெயர் பெற்று ஸ்ரீகாஞ்சி மடத்துக்கு அதிபதியானர்.

7. ஸ்ரீவாதிபீகரார்ய ஸூக்தி மாலிகா ப. 5, 6

அண்ணங்கராசாரியர் தோன்றினார். இவருடன் நான்கு சகோதரிகள் பிறந்தனர், அக்குடும்பத்தில் இவர் ஒருவரே ஆண் பிள்ளை.

## இளமைக் கல்வி

ஸ்ரீமான் அண்ணா ரங்கநாதாசாரிய சுவாமிக்கு இவர் ஒரே ஒரு மகனாகத் தோன்றியதால் இவரை மிகவும் அருமையாக இவர் தந்தை வளர்த்து வந்தார். வைணவ மரபின்படி அண்ணங்கராசாரியருக்கு உபநயனம்—பூணூல் அணிவித்தல்—முதலிய வைதிகச் சடங்குகள் தக்கவயதிலேயே அவர்தம் பெற்றோரால் செய்விக்கப்பட்டன. இவர்தம் தந்தை மகனின் நலனையே கருத்திற் கொள்ளுபவராயினார்.

> **மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை**
> **என்நோற்றான் கொல்லெனும் சொல்** (திருக்குறள்-70)

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்பத் தம் மகனுக்கு இளமையிலேயே வடமொழியில் நன்றாகப் பேசவும் எழுதவும் வல்லமை ஏற்படுமாறு செய்தார்.

அண்ணங்கராசாரியர் இளமையில் தந்தையாரிடத்தும், தாய்வழிப் பாட்டனாரிடத்தும் முறையே வடமொழியும் தென் மொழியும் கற்றார். பவணந்தி முனிவரின் நன்னூல், கம்பர்தம் இராமாயணம், பிள்ளைப்பெருமாள்அய்யங்காரின் அஷ்டப் பிரபந்தம் முதலிய பல தமிழ் நூல்களைச்[1] சந்தையாகவே சொல்லி இவரது மனத்தில் தேக்கி வைத்தார் 'ஜீயர் தாத்தா'. அண்ணா ரங்கநாதாசாரிய சுவாமிக்குத் தாய் மாமனை (மாதுலர்) கடாம்பி கிருஷ்ணமாசாரியசுவாமி என்பவர் பன்மொழிப் புலவராக விளங்கி வந்தார். அவர் அண்ணங்கராசாரியருக்குத் தமிழ், தெலுங்கு, கிரந்தம், நாகரி, ஆங்கிலம் முதலிய பலமொழி எழுத்துக்களைப் பயில்வித்தார். பயிற்சியும் அதிகமாகவே இருந்து வந்தது.

அக்காலத்தில் காஞ்சீபுரம் காசியைப் போலப் புகழ்பெற்ற கல்விக் கூடமாகத் திகழ்ந்து விளங்கியது. ஸ்ரீவரதராஜப்

---

1. சந்தை[1]—வேதம் முதலியவற்றை ஆசான் சொல்ல மாணாக்கன் இரண்டு அல்லது மூன்று முறை அவற்றைத் திரும்பச் சொல்வது — Tamil Lexicon, P. 1273, Vol. III part I, 1928, Univ of Madras

பெருமாள் சந்நிதித் தெருவிலுள்ள **வானமாமலை மடத்தில்** பெரிய தொரு **பாடசாலையும்** கோயிலுள்ள வசந்த மண்டபத்தில் **சடகோப நிலயம்** என்றொரு **பாடசாலையும்** நடந்து வந்தன. இவற்றிற்குப் பின்னர் **வேதாந்த வைஜயந்தீ** என்ற **பாடசாலை** யொன்று பிரதிவாதி பயங்கரம் அண்ணன் சந்நிதியி (**கோயிலி**)ல் ஜகத்குரு காதி அனந்தாசாரிய சுவாமிகளால் நிறுவப்பட்டது. இது தவிர பல விற்பன்னர்கள் அவரவர்கள் வீட்டிலும் குருகுல முறைப்படி மாணவர்களுக்குக் கல்வி பயில்வித்து வந்தனர்.

அண்ணங்கராசாரியர் (சுவாமி) தம் தகப்பனாரிடம் கற்ற ஆரம்பப் (பால) பாடங்கள் ஒருபுறமிருக்க வானமாமலை மடத்துப் பாடசாலையிலும், வைஜயந்தீ பாடசாலையிலும், அவர்தம் தகப்பனார் ஆசிரியராக இருந்ததனால் காவியம், நாடகங் கள் போன்ற நடுநிலைக் கல்வியும் தம் தகப்பனாரிடமே கற்றார். சுவாமியின் தகப்பனார் ''ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம்'' **श्रीरामायणसंग्रहः**, 'ஸமாஸகுஸுமாவளி **समास कुसुमावलिः** முதலிய பாடங்களைக் கற்பிக்கும்போது எந்த வார்த்தையையும் வட மொழியிலேயே சொல்ல வேண்டுமென்று சுவாமிக்குக் கட்டளை யிட்டார். இதன் பயனாக சுவாமியின் வடமொழிப் புலமை சிறந்தோங்கியது.

இவர் தம் தகப்பனார் பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த தனால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் அவர்தம் இல்லத்திற்கே வந்து கல்விபயின்றனர். முதல்வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்னும் முறைப்படிப் பாடம் நடந்து கொண்டிருந் தாலும் அனைத்து வகுப்புப் பாடங்களையும் இரண்டே ஆண்டு களுக்குள் சுவாமி பயின்றது மிகவும் அதிசயிக்கத்தக்கது. 'சிசுபால வத காவியம்' 'நைஷதம்' 'அநர்க்க ராகவம்' (முராரியின் நாடகம்) முதலான கிரந்தங்(நூல்)களைப் படிப்படியாகப் பயிலாமல் ஒரே சமயத்தில் அறிந்துகொண்டது தகப்பனாரின் போதிக்கும் ஆற்றலையும் (போதனசக்தி) பிள்ளையின் (சுவாமி) புரிந்துகொள்ளுமாற்றலையும் (க்ரஹணதாரண சக்தி) புலப்படுத்த வல்லன.

அக்காலத்தில் 'பிரதம பாடம்' (**प्रथम पाठ**): (ஆரம்பப்பயிற்சி) என்றும் 'கதா ஸப்ததி (**कथा सप्ततिः**) என்றும் சிறுபுத்தகங்கள் வடமொழியிலிருந்தன. இவ்விரண்டு புத்தகங்களிலும் முறையே முப்பத்திரண்டு, எழுபது கதைகள் இருந்தன. அவை வடமொழிப் பயிற்சிக்கு மிகவும் சிறந்தனவாம். அப்புத்தகங்களிலுள்ள பாடங்

களை சுவாமிகள் கற்றதனுலேயே அவர்க்குத் தம் இளம்வயதில் வடமொழிக் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் அதிகமாயிற்று. சுவாமி தம் பதினைந்தாம் வயதிலேயே 'ஆசார்ய ஹ்ருதயம், என்னும் ரஹஸ்யத்தில் மிகவும் ஆழ்ந்த ஞானத்தைப் பெற்றிருந்தார்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை 'சின்னகலியன் ஜீயர்ஸ்வாமி என்னும் பெருந்தகை, சுவாமியின் கத்யபத்யரசனைகளை வட மொழிப் பத்திரிகைகளின் மூலமாக அறிந்து வைத்திருந்தார். ஒருமுறை திருநின்றவூரில் யாத்திரையாக எழுந்தருளியபோது ஜீயர் சுவாமிகள் சுவாமியை அருகிலழைத்து 'அண்ணு இந்த ரசநா ஸாமர்த்தியத்தை நீர் திவ்யப்ரபந்தங்களிலும் ரஹஸ்ய க்ரந்தங் களிலும் உபயோகப்படுத்தினுல் வடநாட்டுக்கு மஹோபகாரம் செய்ததாகுமே''[9] என்று நியமித்தபடியே சுவாமியும் ஆசார்ய ஹ்ருதய சூர்ணையாகிய ''போக்ய பாகத்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்'' என்பதைச் சுலோகமாக்கி ஜீயர் சுவாமியிடம் சமர்ப்பித்தார். அந்த சுலோகத்தைக் கீழே காணலாம்.

**भोग्यभूत शठकोपयोगिनो भक्तिपाकविषयां त्वरां हरिः ।**
**वक्ति सन्निहितमन्दिरत्रये तल्पशाय्युपविशंश्च तस्थिवान् ॥**

**போக்யபூத சடகோப யோகிநோ பக்திபாக விஷயாம் த்வராம் ஹரி: |**
**வக்தி ஸந்நிஹித மந்திரத்ரயே தல்பசாய்யுபவிசம்ச்ச தஸ்திவாந் ॥[10]**

என்பது. அந்தச் சூர்ணையுடன் ஆழ்வார் பாசுரங்களிரண்டையும் சுலோகமாக்கியதில் முதற்பாசுரம் பெரியாழ்வார் திருமொழி (3.8.4.)

**'ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டு போனுன்**
**பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற வசோதை**
**மருமகளைக் கண்டுகந்து மணுட்டுப்புறம் செய்யுங்கொலோ**

இப்பாசுரத்திற்கு வடமொழியின் மொழி பெயர்ப்பைக் கீழே காணலாம்.

9. தானே எழுதிய தன் சரிதை ப. 85, 1956
10. ஷெ ப. 86,

एकामेव सुतामजीजनमहं त्रैलोक्यपूर्णप्रथां
पुण्यामिमां रमामिव अहरहिमां रक्तान्तनेत्रस्स्वयम्
गाम्भीर्याढ्यकुटुम्बिनी जनितसत्पुत्रा यशोदाह्वया
दृष्ट्वा हृष्टमनाः स्नुषां, वितनुयाद्वैवाहिकं वा क्रमम्॥

**ஏகாமேவ ஸுதாம் அஜீஜநமஹம் த்ரைலோக்ய பூர்ண ப்ரதாம்**
**புண்யாமிமாம் ரமாமிவ, அஹரஹிமாம் ரக்தாந்த நேத்ரஸ்ஸ்வயம்**
**காம்பீர்யாட்ய குடும்பினீ ஜநித ஸத்புத்ரா யசோதாஹ்வயா**
**த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமநா: ஸ்நுஷாம், விதநுயாத் வைவாஹிகம்**
**வாக்ரமம் ॥** [11]

மற்றொரு பாசுரத்தையும் சுவாமி (பெரியாழ்வார் திருமொழி 5-3-6) இவ்விதமாக மொழிபெயர்த்துள்ளார்.

ஸ்ரீவானமாமலையின் ஆஸ்தான வித்வானொருவர் "கலையும் கரியும் பரிமாவும்" என்கிற திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி 1-5-1) பாசுரத்தை அதே இசை வடிவில் மொழி பெயர்க்க முடியுமா என்று கேட்டதற்கு உடனே மடை திறந்து விட்டாற்போல் மொழி பெயர்த்துத் தந்தார்.

**கலையும் கரியும் பரிமாவும் திரியுங்கானம் கடந்து போய்**
**சிலையுங்கணையும் துணையாகச் சென்றான் வென்றிச் செருக்களத்து**
**மலைகொண்டலை நீரணைகட்டி மதிள் நீரிலங்கை வாளரக்கர்**
**தலைவன் தலைபத்தறுத் துகந்தான் சாளக்கிராம மடைநெஞ்சே**

## மொழிபெயர்ப்பு

हरिणैः करिभिस्तुरगैश्च व्याप्तामटवीमतियन् सन्
धनुषा विशिखैस्ससहायो गतवान् जयदां रणभूमिम् ।
गिरिभिर्जलधौ कृतसेतुः दशवक्त्रशिरांसि दश व्यलुनात्
भगवान् स हि यत्र विराजति तं सालग्रामं भज चित्त॥

**ஹரிணை: கரிபிஸ் துரகைச்ச வ்யாப்தா மடவீம் அதியந்ஸந்**
**தநுஷா விசிகைஸ் ஸஸஹாயோ கதவாந் ஜயதாம் ரணபூமிம்**
**கிரிபிர் ஜலதௌ க்ருதஸேது: தசவக்த்ர சிராம்ஸி தசவ்யலுநாத்**
**பகவாந் ஸஹி யத்ர விராஜதி தம் ஸாலக்ராமம் பஜ சித்த** [12]

---

11. தானே எழுதிய தன் சரிதை
12. தானே எழுதிய தன்சரிதை ப. 86,

என்பது. இவ்வாறு ஸ்ரீவசனபூஷணம், தத்வத்ரயம் என்னும் ரஹஸ்யங்களுக்கும் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார் சுவாமி. விரிவிற் பெருகும்.

'ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம்' என்னும் நூலையொட்டி மணிப்பிரவாள நடையில் அதே தலைப்பில் ஒரு சிறுநூலை அப்போதே சுவாமிகள் எழுதினார். அந்த மணிப்பிரவாள சுலோகம் பின்வருமாறு :

**ஸீதாராம பதாப்ஜானி வணங்கித் துதிசெய்கிறேன்**
**கிமர்த்த மென்னுல் மந்த்ரந்த பூர்த்தயேதான் அஹர்நிசம்**
**அயோத்யாம் நாம நகரீம் ராஜா வொருவராண்டனர்**
**அவர்பெயர் தானென்னென்னில் ஆஹ ஈசரதம் ஜனா :**[13]

இதுபோன்ற இருநூறு சுலோகங்களினுல் அப்போது இராமாயணச் சுருக்கத்தை சுவாமி எழுதினார். பல இதிகாச புராணக் கதைகளையும் வடமொழியில் எழுதினார். வடமொழியில் வினவிடையாகவும் சுலோகங்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

அக்காலத்தில் கேரள நாட்டில் **பட்டாம்பி** என்னுமூரிலிருந்து விஞ்ஞான சிந்தாமணி **(विज्ञान चिन्तामणिः)** என்கிற வடமொழி வார இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. அவ்விதழுக்குத் தம் பன்னிரண்டு வயதிலிருந்தே கட்டுரைகளை **சுவாமிகள்** எழுதி அனுப்பிக்கொண்டிருந்தார். அவருடைய இருபத்தைந்து பிராயம் வரை வெளிவந்துகொண்டிருந்த அவ்விதழில் வினு எழுதி அனுப்புவது, பதில் எழுதுவது, யுக்தி வினுவிடை கொடுப்பது, பிறர் எழுதும் யுக்தி வினுவுக்கு விடையிறுப்பது போன்ற செயலில் சுவாமிகள் மிகவும் விருப்பங்கொண்டிருந்தார். இவர் தம் தகப்பனுர் ஒரு மறைக்குரிய பொருள்பற்றிய வினுவைச் சொல்லி அதற்கு விடையளிக்கும்படி நியமித்தார். அவ்வினுவை மூன்று சுலோகங்களாக இயற்றி ஒரு சுலோகத்தினுல் விடையிறுத்தார் சுவாமிகள். அவையாவன :

**शुकाः केचित् कस्मिंश्चन सरसि पाथोजकुसुमेषु**
**अवस्थानं प्राप्तं सकुतुक मुपागत्य सरसीम् ।**
**पृथक् चैकैकस्मिन्नपि कमल एकैक शुक इति**
**अमी सङ्कल्प्यैवं पृथगुपविशन्तिस्म सहसा ॥**

---

13. தானே எழுதிய தன் சரிதை ப. 6

ततश्चैकं कीरं कमलकुसुमालाभज शुका
विषण्णं वीक्ष्यैते सरभसमथोत्थाय सकलाः।
त्यजित्वा प्रत्यब्जं शुकयुगलरीत्या तदनु भो
अभूदेकं पद्मं शुकचरण विन्यास विधुरम्॥

अयि भोस्सुहृदो ब्रूत कति कीरास्समागताः?
कमलानि च सन्तिस्म कियन्ति कमलाकरे?

சுகா: கேசித் கஸ்மிம்ச்சந ஸரஸிஜோத்தோஜ்ஜ குலா-மேவ-
அவஸ்தாநம் ப்ராப்தும் லகுதுக முபாகத்ய ஸரஸீம் |
ப்ருதக் சைகைகஸ்மிந்நபி கமல ஏகைக சுக இதி
அமீ ஸங்கல்ப்யைவம் ப்ருதகுபவிசந்திஸ்ம ஸஹஸா |

ததச் சைகம் கீரம் கமல குஸுமாலாபஜசுகா
விஷண்ணாம் வீக்ஷ்யைதே ஸரபஸமதோத்தாய ஸகலா:
த்யஜித்வா ப்ரத்யப்ஜம் சுகயுகள ரீத்யா ததநுபோ
அபூதேகம் பத்மம் சுகசரண விந்யாஸவிதுரம்

அயிபோஸ் ஸுஹ்ருதோ ப்ருத கதி கீராஸ் ஸமாகதா?
கமலானி ச ஸந்திஸ்ம கியந்தி கமலாகரே?

மேற்கண்ட விஞக்களுக்கு ஒரு சுலோகத்தில் விடையிறுத்த விதம்:

शुकाश्चत्वार आयाताः कमलत्रितयं स्थितम्।
इत्येवमुत्तरं साधु द्रष्टव्य मिह पण्डितैः॥

சுகாச் சத்வார ஆயாதா: கமலத்ரிதயம் ஸ்திதம்,
இத்யேவமுத்தரம் ஸாது த்ரஷ்டவ்யமிஹ பண்டிதை:[14]

இவற்றின் கருத்தாவது: ''ஒரு குளத்தில் சில தாமரைகள் மலர்ந்திருந்தன. அவற்றில் உட்காருவதற்குச் சில கிளிகள் ஆவலோடு வந்து சேர்ந்தன. ஒவ்வொரு மலரில் தனித்தனியாக அக்கிளிகள் உட்கார, ஒரு கிளி மட்டும் தாமரைப்பூ கிடைக்காமல் வருந்திக் கிடந்தது. அதைக் கண்ட மற்ற கிளிகள் உடனே ஒவ்வொரு மலரில் இரண்டு கிளிகள் வீதம் உட்கார்ந்தன. இப்போது ஒரு தாமரைப்பூ கிளி உட்காராததனுல் மிச்சப்பட்டு விட்டது. அப்படியானுல் எத்தனைக் கிளிகள் வந்தன? குளத்தில் எத்தனை மலர்கள் இருந்தன? என்பது விஞ. இவ்விஞவிற்குவிடை: நான்கு கிளிகள் வந்தன; மூன்று மலர்கள் இருந்தன'' என்பதாகும்

14. தானே எழுதிய தன் சரிதை, ப.7

இவ்வாறு பல வினா விடைகளை வடமொழி இதழ்களில் வெளியிட்டுவந்தார் சுவாமிகள்.

வடமொழியிலுள்ள காவியம், நாடகம், அலங்காரம் முதலியவற்றை நன்கு தம் தகப்பனாரிடத்தில் கற்றதோடல்லாமல் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் மூவாயிரம் பாசுரங்களையும் தம் தகப்பனாரிடமே கற்றார். தம்முடைய பதின்மூன்றாம் வயதில் தகப்பனாரிடத்தில் வைணவ முறைப்படி திருவிலச்சினை* பெற்றபின் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களையும் தம் தகப்பனார் நோய்வாய்ப்பட்டிருந்ததனால் வேறொருவரிடம் பயின்றார்.

சுவாமி தம் கல்வியைப் பலபெரியோர்களிடம் பயின்றார். அவர்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் சுவாமியின் தகப்பனார் அண்ணா ரங்கநாதாசாரிய சுவாமிகள், ஜகத்குரு காஞ்சி அனந்தாசாரிய சுவாமிகள், தம்முடைய பாட்டனாரான சந்நிதி வரதாசாரிய சுவாமிகள் என்னும் ஜீயர் சுவாமிகள், தமிழ்த்தாயின் செல்வமான வை. மு. சடகோப ராமானுஜாசாரிய சுவாமிகள், மாம்பள்ளம் ஸுதர்சனாசாரியசுவாமிகள் (வேத வாத்தியார்), ராமசந்திராசார், வித்யாசார் (மாத்வர்கள்) என்போர் பலர் இவர்களைத் தவிர தமது இல்லத்திற்கு வருகை தரும் ஒவ்வொரு மகா வித்துவான்களிடத்தும் பலவகைக் கோணங்களில் கல்வியைப் பயின்றார். அதனாலேயே சுவாமிகள் பன்மொழிப் புலமையோடு விளங்கினார்.

## இளம்வயதில் பெற்ற பரிசு

சுவாமியின் இல்லத்தில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, என்னும் முறைப்படி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனால் அவர் அனைத்து வகுப்புகளுக்கும் சென்று அங்குக் கற்பித்தும் பாடங்களைக் கேட்டுக் கொண்டிருப்பார். இதன் விளைவாக சுவாமி இரண்டாண்டுகளில் கற்கவேண்டிய கல்வியைச் சில மாதங்களிலேயே கற்றார். இவ்விதமாகத் தம் கல்வியைத் தாமே உயர்த்திக் கொண்டார். தேர்வுக் காலம் நெருங்கியது. பாடசாலையின் தலைமையாசிரியர்முன் தேர்வு ஆணையர் கேட்கும் கேள்விகளுக்குப் பெரிய மாணவர் சொல்லத் தெரியாது நின்று கொண்டிருந்த

* வைணவ மரபில் பஞ்ச ஸம்ஸ்காரம் என்று திருமாலின் முக்கிய ஆயுதங்களான சங்குச் சக்கரங்களைத் தோள்களில் தரிப்பது (பெறுவது)

போது சுவாமி 'நான் சொல்லுகிறேன்' என்றார். தலைமை ஆசிரியர் அவரை உட்காரச் சொன்னார். ஆனால் தேர்வாளர் சீமான் பண்டித ரத்னம் கஸ்தூரி ரங்காசாரிய சுவாமிகள் 'சொல்லப்பா! பார்ப் போம்' என்று சொல்ல சுவாமி உடனே எழுந்து அக்கேள்விக் குண்டான சுலோகத்தை முழுவதும் சொல்லிப் பொருளும். தாற்பரியமும் (கருத்து) விரிவாகச் சொன்னதோடு நில்லாமல் அச்சுலோகத்திற்குச் சொல்ல வேண்டிய இலக்கணச் சூத்திரத்தின் (வியாகரண ஸூத்ரம்) அமைப்பையும் சொல்லி முடித்தார், சுவாமி தம் பன்னிரண்டு வயதில் ஏழெட்டு வயதினராகக் காட்சிக்குப் புலப்படுவராதலின் 'பரமாணு' வென்றே சிலரால் அழைக்கப்பட்டார், "சிறுமா மனிசரா யென்னை ஆண்டார்" (திருவாய் மொழி 8-10-3) என்னும் பாசுரத்திற்சேற்ப சுவாமி பரமாணுவாயிருந்ததால் தேர்வாளர் கஸ்தூரி சுவாமிகளுக்கு ஒரு விதமான ஈர்ப்புத் தன்மை ஏற்பட்டது. 'காவிய பாடம் வாசிக்கிற வுனக்கு இந்த சுலோகம் எப்படித் தெரிந்தது?' என வினவிய தேர்வாளருக்கு'என் க்ருஹத்தில் எனது தகப்பனாரிடத்தில் பலபேர் கள் வாசிக்கிறார்கள்; அவர்களில் முராரி நாடகம் வாசிப்பவர் களுமுண்டு; அவர்கள் வாசிக்கும்போது நான் கூடவிருந்து கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம்; அதனால் தெரிந்தது'[15] என்று கூறினார். மேலும் அத்தேர்வாளர் 'அவரவர்கள் வாசிக்கிற எல்லாக்கிரந்தங் களிலும் நீ பரிக்ஷை சொல்லுவாயா?' என்றதற்கு நிச்சயமாகச் சொல்ல முடியாது; அநேகமாய்ச் சொல்லுவேன்; கேட்டுப் பார்க்கலாமே' என்றார் சுவாமி. மற்ற மாணவர்களை விட்டு சுவாமியை மட்டுமே அதிகமாகக் கேள்விகள் கேட்டனர் தேர் வாளர். இவரும் தேர்வாளர் மனநிறைவு ஏற்படுமளவுக்கு விடை அளித்தார். தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசாக ரூபாய் ஒன்று, இரண்டு, மூன்று, புத்தகம், உத்தரீயம் முதலியன முறையாகக் கொடுப்பது வழக்கமாக இருந்தது. இப்பரிசு மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் உண்டாகவே பெரும்பாலும் கொடுத்து வந்தனர், அக்காலத்தவர். அச்சமயம் சுவாமிகளுக்கு மட்டும் இரண்டு பவுன் கொண்ட தங்கப் பதக்கம் (டாலர்) ஒன்றைக் கொடுத்தார்கள். அவருடைய பெற்றோர் அதைக் காப்பாக அணிவித்தனர். அதுமுதல் அனைவரும் சுவாமியைத் 'தங்கக் காப்பு அண்ணா'[16] என்றே அழைத்து வந்தனர். அதைத் தம்முடைய இருபத்தேழு வயது வரை அணிந்து கொண்டிருந் தார். தமது சிறிய வயதில் முதன்முதலாகப் பெற்ற பரிசு இதுவே ஆகும்.

15. தானே எழுதிய தன் சரிதை, ப. 12
16. ஷெ ப, 13

சுவாமியின் தகப்பனார், அவர் தம் பதினைந்து வயது வரைக்குமே ஜீவித்திருந்த போதிலும் அவரிடம் கேட்ட பாடங்கள் பல. 'பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட (4-8-2) என்ற திருவாய்மொழியில் நம்மாழ்வார் அருளிச் செய்தபடி திருத்திப் பணிகொள்ளப்பட்டார் சுவாமி. 'என்னெய்க் குடந்தையுருட்டி இளம்பிள்ளை கிள்ளியெழுப்பி (பெரியாழ் திரு. 2-4-6) என்றும் 'கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திட்டால்' (பெரியாழ் திரு. 2-4-2) என்றும் 'திருவுடைப்பிள்ளை தான் தீயவாறு தேக்கமொன்றுமிலன் தேசுடையன், உருகவைத்த குடத்தொடு வெண்ணெய் உறிஞ்சி யுடைத்திட்டுப் போந்து நின்றான்' (2-9-3) என்றும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்களில் சொல்லப்பட்ட கண்ணபிரானுடைய இளம்பிள்ளையின் குறும்புச் செயலுக்கு இணையாக சுவாமிகளும் தம்முடைய பிள்ளைப் பருவத்தில் குறும்பு பல செய்தார். அக் குறும்புச் செயல்களுக்குத் தம் தகப்பனாரிடம் பெற்ற தண்டனையும் எண்ணற்றவை. கண்ணபிரான் உரலோடு கட்டுண்டிருந்தான் ஆனால் சுவாமியோ தாம்பினால் கட்டிக் கிணற்றினுள் தோய்க்கப் பெற்றார். 'செல்வத்தினால் வளர்பிள்ளாய்' (பெரியாழ். திரு 2-8-8) என்கிறபடியே அன்பினால் வளர்க்கப்பட்ட பெருமைக்கும் குறை யில்லை. சுவாமிகள் கற்றுக்கொண்ட ஸ்தோத்ர பாடங்கள் எண்ணிறந்தவை. முதன் முதலில் வேதாந்ததேசிகனருளிய ஸ்தோத்ரங்களை அவர்தம் தகப்பனாரிடம் கற்றார். அதன்பின் ஆளவந்தார், கூரத்தாழ்வான், பட்டர் முதலான எல்லா ஆசார்யர்களுடைய ஸ்தோத்ரங்களையும் கற்றார். இவற்றை விடியற்காலையிலும் இரவிலுமே அவர்தம் தகப்பனார் கற்றுக் கொடுப்பார்.[17]

## சூர்க்கத்தித் தேர்வு

திருவல்லிக்கேணி (சென்னை)யில் 'வேத வேதாந்த வர்த்திநீ' என்று ஒரு சபை ஏற்பட்டு இன்றைக்கு 115 ஆண்டுகள் ஆகின்றன. எண்பதாண்டுகளுக்கு முன் அச்சபை நல்ல உயர்ந்த நிலையில் ஓங்கி யிருந்தது. அங்கு வடமொழி இலக்கண இலக்கியங்களிலும், வேதங் களிலும், ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களிலும் தேர்வுகள் ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். அத்தேர்வுக்கு 50, 60 மாணவர்களுக்கு மேல் தென்நாட்டிலிருந்தும் மைசூரி லிருந்தும் வருவார்கள். தேர்வில் வெற்றிகண்ட மாணவர்களுக்கு முறையாகப் பரிசுகள் வழங்குவது வழக்கம். சுவாமி, தம் சிறு

17. தானே எழுதிய தன் சரிதை, ப. 14

பிராயத்திலேயே திவ்யப்பிரபந்தங்களைப் பேருரை (வியாக்கியானங்)களோடும் பயிற்சி பெற்று மூலத்திலும் பேருரைகளிலும் சூர்க்கத்திப் பரீக்ஷை (தேர்வு) கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சூளுரை விடுத்தார்.

'சூர்க்கத்தித் தேர்வு'[18] என்பது, கத்தியைத் தீட்டி எதிரே வைத்துக்கொண்டு 'பரீக்ஷை செய்யுங்கள்; பரீக்ஷையில் தப்பினால் அந்தக் கத்தியினால் நாக்கையறுத்திடுங்கள்' என்று சூளுரைத்துத் தேர்வு கொடுப்பதாகும். சுவாமி தமது பத்தொன்பதாவது வயதில் அச் சபையில் அத்தகைய தேர்வு கொடுக்கச் சென்று வெற்றிகண்டதோடு நில்லாமல் மீண்டும் அச்சபைக்குத் தேர்வாளராகச் சென்றார். 1980-ஆம் ஆண்டு வர்த்திநீ சபையின் நூற்றுப் பதினொன்றாவது ஆண்டுவிழாவில் சுவாமி தமது உடல்நலக் குறைவையும் பாராது கலந்துகொண்டது, அச்சபையின்கண் அவருக்குள்ள அளவில்லாத அன்பையும் பெருமதிப்பையும் காட்டுகின்றது.

ஆங்கிலமொழியை சுவாமி கற்றதும் ஒருவித அற்புதமே. அவர்தம் தகப்பனாருக்கு உடல்நலக் குறைவு மிகவும் அதிகமாக இருந்த சமயத்தில் தஞ்சாவூரிலிருந்து ஒரு முதலியார் வந்து மருத்துவம் செய்து கொண்டிருந்தார். அவரை 'விவகாரம்' என்று தான் அழைப்பது. ஒவ்வொரு வார்த்தைக்கும் 'விவகாரம்' என்ற சொல்லைக் கூறுவது அம்மருத்துவரின் வழக்கம். அவர் ஆங்கிலத்தில் மிகவும் புலமை பெற்றவர். சுவாமியின் தமப்பனார் தமது உடல்நிலை தேறாது என உறுதிகொண்டு 'வைத்யரே! உம்முடைய சிகித்ஸையினால் எனக்கு யாதொரு பலனும் ஏற்படப் போகிறதில்லை; பையனுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்த பெருமையையாவது நீர் அடையவேணும்'[19] என்று அடிக்கடி அம் மருத்துவரிடம் கூறுவர். இவ்வாறு நாலைந்து மாதங்களில் ஆங்கில மொழியை சுவாமி பயின்றார். சுவாமியின் எந்தமொழி எழுத்தும் மிகவும் அழகாக இருப்பதுடன் ஒரு அடித்தலோ திருத்தலோ இராது. சுவாமி ஆங்கிலத்தில் எழுதுவதைக் காண்பவர் இவர் பி.ஏ. (B.A) அல்லது எம்.ஏ. (M.A.) தேர்ச்சி பெற்றாரா என நினைத்து அவ்வண்ணமே கேட்பதுமுண்டு. சுவாமி தம்தகப்பனாரால் எல்லாவிதங்களிலும் சிறந்தப்பணி கொள்ளப் பெற்றவர், என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவற்றில் ஓரிரு சான்றுகளைக் கீழே காணலாம்.

18. தானே எழுதிய தன் சரிதை, ப. 81, 2-ஆம் பகுதி.
19. ஷெ ப. 18, முதல் பகுதி.

1. பொதுவாகச் சிறுநீர் கழித்தபின் நீரால் வாய்க் கொப்பளித்துக் கால்களையும் கழுவுதல் மரபு. இரவு வேளைகளிலும் அவ்வாறு செய்த பின்தான் படுக்கைக்குச் செல்ல வேண்டும். ஓரிரவு சுவாமி அவ்வாறு செய்யாது சிறுநீர் கழித்துவிட்டு உடனே படுக்கைக்குச் சென்றுவிட்டார். இச் செயலை அவர்தம் தகப்பனார் அறிந்துகொண்டு 'பையா; வாய்க் கொப்பளித்தாயா?' என்று கேட்டதற்கு வாய்க் கொப்பளித்ததாக சுவாமி சொல்லிவிட்டார். தம்முடைய மகனின் சொல்லை நம்பாமல் வெளியில் படுத்துக்கொண்டிருப்பவரில் ஒருவரை அழைத்து வீட்டு வாயிலில் வாய்க் கொப்பளித்ததற்கு அடையாளமாக ஈரம் உள்ளதாவென்று பார்த்து வரச்சொன்னார் சுவாமியின் தந்தை. அப்போது அம் மனிதர் வெளியில் சென்று ஈரமான இடம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இல்லையென்று பதில் கூறினார். இதைக் கேட்டுவிட்டு இரவுபோது ஒன்றும் சொல்லாது காலையில் எழுந்தவுடன் புறக்கடையிலுள்ள தாழ்வாரத்தில் தம்மகனை உட்காரவைத்து உணவை மூன்று நாட்கள் உண்ணச் செய்வித்தார் சுவாமியின் தந்தை. நான்காம் நாள் காலை சுவாமி நீராடிய பின் 'ஸ்ரீபாததீர்த்தம்' (திருமாலடியார் பாதங்களை அலம்பிய நீர்) இவரைப்பெறச் செய்து அதன்பின்பே உள்ளே புகச் செய்தார். இவ்வாறு பல தண்டனைகளை சுவாமி அனுபவித்தார்.

2. மற்றொரு சமயம் திருவரங்கத்திலிருந்து பத்தராவி சுவாமி என்பவர் காஞ்சிக்கு வருகை தந்திருந்தார். சுவாமியின் தந்தைக்கு அப்பெரியார் மிகவும் நெருங்கிய நண்பர். அவர் காஞ்சி வரதராஜப் பெருமாளைத் தொழ மிகவும் விருப்பம் கொண்டிருந்தமையால் தம் மகனை அனுப்பிக் கோயிலில் என்ன சமயம் என்பதை அறிந்து வரச் சொன்னார். சுவாமிகளும் கோயிலுக்கு சென்று அங்கிருந்த மணியக்காரரைப் பார்த்து அங்கு நிலவிய நிலைமையைப் பற்றிக்கேட்க மணியகாரரும் 'ஆராதனம் ஆகப் போகிறது' என்றார். அவ்வார்த்தையை அப்படியே தம் தகப்பனாரிடம் சொன்னவுடன் மின்னல் வேகத்தில் ஓரடி விழுந்தது. 'ஆராதனம்' என்று சொல்வதுகூடாது; 'திரு' என்னும் சொல்லைச் சேர்த்துத் 'திருவாராதனம்' என்று சொல்ல வேண்டுமென்பது வைணவக் கொள்கை. அக்கொள்கையின்படி சுவாமி சொல்லாதது தவறு என்று சுவாமியின் தந்தை அவரை அடித்தார். இதைக் கண்ணுற்ற பத்தராவி சுவாமி 'லகுவான அபராதத்திற்கு (சிறிய தவறு) இவ்வளவு குருவான சிக்ஷையா?

(பலத்த தண்டனை) என்று வியந்தார். அவ்வூரில் அப் பெருந்தகை நாலைந்து நாட்கள் தங்கியிருந்ததனால் அவரிடம் '**கத்ய த்ரயம்** என்னும் இராமானுசர் இயற்றிய நூலை சுவாமி கற்றுக் கொண்டார். காஞ்சியில் ஈச்சம்பாடி நரசிம்மாசாரிய சுவாமி என்பவரிடம் **ஆறாயிரப்படி** என்னும் **குருபரம்பரா ப்ரபாவம்** என்னும் ஆசாரிய (வழிக்குரவர்) **களின்** வரலாற்றுத் தொகுப்பைச் செவிமடுத்துக் கேட்கும் வாய்ப்பு சுவாமிகட்கு ஏற்பட்டது.

## அண்ணங்கராசாரிய சுவாமியின் சொற்பொழிவுகள்

சிறிய வயதிலேயே சுவாமிகள்

**'கற்க கசடறக் கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'** (திருக்குறள்-391)

என்றும் முதுமொழிக் கேற்ப அனைத்துக் கல்வியும் கற்றுத் தெளிந்து பதினாறு வயதில் சொற்பொழிவுகளை அருவிபோல் பொழிந்தார். ஆந்திர மாநிலத்தின் தலைநகராகிய ஹைதராபாத்தில் 'ஸீதாராம் பாக்' என்னும் தோட்டத்தில் தேவப் பெருமாள் கோயிலை, ஆத்ய அனந்தாசாரிய சுவாமி நிருமித்து இற்றைக்கும் பூசைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நூறாண்டுகளுக்கு முன்பே இக்கோயில் சமைக்கப்பட்டது. சுவாமிகள் ஓராண்டு காலம் காதி அனந்தாசாரிய சுவாமிகளுடன் இருக்க வேண்டியிருந்தது. அப்போது வைணவ நூல்களான 'திருமந்த்ரார்த்தம்' 'கீதாபாஷ்யம்' முதலானவற்றில் காலக்ஷேபம் செய்ய வாய்ப்பு கிட்டியது. அவ்வமயம் அங்கு வருகிறவர்களுடன் இந்தியிலும் தெலுங்கிலும் பேசுகின்ற வாய்ப்பும் ஏற்பட்டது, அதன் பயனாக இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் அறிமுகம் சுவாமிக்கு உண்டாயிற்று.

முதன்முதலாக அக்கோயிலில் **'எம்பெருமானார் வைபவம்'** என்னும் தலைப்பில் சொற்பொழிவு (உபன்யாஸம்) ஆற்றினார் சுவாமிகள். இதையே இந்தியிலும் ஒருமணி நேரம் செய்ய நேர்ந்தது. அது முதற் கொண்டு உபன்யாஸங்களை அவர் அடிக்கடிச் செய்யலானார்.

சுவாமி ஐதராபாத் நகரிலிருந்து மீண்டும் காஞ்சீ வந்தபின் அவர்தம் பாட்டனார் தமிழிலும் வடமொழியிலும் மிக்க புலமை பெற்றவராயிருந்ததனால் அவரிடம் வைணவ நூல்களை கற்றார்.

அவர்தம் பாட்டனுர் துறவி (அழகிய மணவாளச் சீயர்) யானை யால் தம்மடத்தில் சுவாமியை இருக்கச் செய்து தமிழிலும் மிக்க புலமை பெறும் வண்ணம் அருள்பாலித்தார். சீயரின் சீடர்கள் தம் மடத்திற்கு வரும்போது 'அண்ணு! நீ ஏதாவது சொல்லு, என்று கூறியதும் சுவாமி ஒரு பாசுரத்தையோ அல்லது ஒரு சுலோகத்தையோ தலைப்பாகக் கொண்டு உபந்யாஸம் செய்வார். அண்ணங்கராசாரிய சுவாமிகள் பகலில் பெரும்பாலும் மடத்தி லேயே இருந்து வந்ததனுல் அவரை "ஜீயர் பேரன்" என்றே யாவரும் அழைப்பர்.

ஜீயர் சுவாமிகள் ஒரு சமயம் காஞ்சிவரதராஜப் பெருமாள் கோயிலிலுள்ள நூற்றுங்கால் மண்டபத்தில் 'திவ்ய ப்ரபந்த வைபவம்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றினுர். மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச்செயலை வேதத்தோடு (வடமொழி மறையோடு) பலவிடங்களில் ஒப்புமை காட்டி விளக்கி வந்தார் ஜீயர் சுவாமிகள். சிலர் அங்கேயே எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அதனைச் சிறிதும் கருத்திற் கொள்ளாது மேலும் தகுந்த சான்றுகளுடன் இன்னும் அதிக மாகவே சொல்லிவந்தார். அதைச்செவியுற்ற சுவாமியும் அதைப் புத்தக வடிவில் சமைக்க விருப்பங்கொண்டு கிரந்த எழுத்தில் முதன்முதலாகத் திவ்யப்ரபந்த வைபவ விவேக: (दिव्यप्रबन्ध वैभवविवेक:) என்கிற தலைப்பில் வடமொழியில் அச்சிட்டு வெளியிட்டார்.

## வாதப் பிரதிவாதப் புத்தகங்களும் மற்ற பதிப்புகளும்

திருக்குடந்தையிலிருந்த ஒருவரால் வாதப் பிரதிவாதப் புத்தகங்களை எழுதவேண்டிய நிலைமை சுவாமிக்கு ஏற்பட்டது. 'சத ஸம்வாத கண்டனம்' என்ற தலைப்பின் கீழ் எட்டுப்பக்க அளவில் வாதப் பிரதிவாதங்களை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பின் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கிரந்தங்கள் (மரபு நூல்கள்) பல அக்காலத்திலே அச்சாகாமலே இருந்தன. "ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை" என்ற சபை கராலபாடி ஆழ்வாரய்யா என்பவரால் நிறுவப்பட்டிருந்தது. இதன் வாயிலாக நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களின் பேருரைகள் யாவும் முதன்முதலாகத் தமிழில் அச்சிட்டு வெளியிட ஆர்வமும் ஊக்கமும் மிகக்கொண்ட சுவாமிகள் 'ஸம்ப்ரதாய சந்திரிகா' (सम्प्रदाय चन्द्रिका). 'புருஷகார மீமாம்ஸை' (पुरुषकार मीमांसा), ரஹஸ்ய த்ரய காரிகாவளி(रहस्यत्रय

कारिकावलि ), ரஹஸ்ய விவேகம் (रहस्य विवेकः) முதலியவற்றைத் தெலுங்கு எழுத்தில் அச்சிட்டு வெளியிட்டார். 'ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம்' (रहस्यत्रय मीमांसा भाष्यम्) முதலிய நூல்களை அப்போது சென்னை மயிலையில் புகழ்பெற்ற வழக்கறிஞர் எஸ். கோபால்சுவாமி அய்யங்கார் என்பவரின் உதவியால் அச்சிட்டு வெளியிட்டார். அவ்வழக்கறிஞர் ஆங்கிலத்தில் மட்டும் மிகுந்த புலமை பெற்றவளவோடு நில்லாது வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றிருந்ததனால் அது மேலும் பால ஸரஸ்வதியின் 'தாத்பர்ய தீபிகை' 'சரமச்லோகடிப் பணி'[22] முதலிய உயர்ந்த நூல்களை அச்சிட உதவியாயிருந்தது. ஸ்ரீமான் கோபாலசுவாமி அய்யங்கார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி சுவாமியால் அனைத்துப் பூருவாசாரிய தோத்திரங்களும், அவற்றிற்கு விரிவான உரைகளும் மேற்சொன்ன சபையின் வாயிலாகவே அச்சிடப்பட்டு வெளிவந்தன. ஸம்ப்ரதாய (மரபு) நூல்களை மணிப்பிரவாள நடையில் தெலுங்கு எழுத்தில் சுவாமி அச்சிட்டு வெளியிட்டுள்ளார். 'ஆசார்ய ஹ்ருதயம்' என்னும் நூலுக்கு தாத்பர்ய ஸாரமென்ற உரையையும்[23] சுவாமி எழுதியுள்ளார். இவை அனைத்தும் மாணவ வயதிலேயே அவரால் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றோடு நில்லாது சுவாமி தம்முடைய வடமொழிக் கட்டுரைகளை 'மஞ்ஜுபாஷிணீ' (मञ्जुभाषिणी) 'ஸம்ஸ்க்ருத சந்திரிகா, (संस्कृत चन्द्रिका) 'ஸூந்ருத வாதிநீ' (सूनृत वादिनी) 'மித்ரகோஷ்டி, (मित्रगोष्ठी) 'விஜ்ஞாந சிந்தாமணி' (विज्ञान चिन्तामणि) முதலிய வடமொழிப் பத்திரிகைகளில் வெளிவரச் செய்தார். சுவாமி தம் பதினெட்டாவது வயதில் மஞ்ஜுபாஷிணி என்னும் இதழுக்கு ஆசிரியராக இருந்து ஏறக்குறைய இருபதாண்டுகள் நிருவாகம் செய்து வந்தார். மேற்படி கட்டுரைகள் 'மஹாசாந்த: (महाशान्तः) என்னும் புனைப்பெயரில் வெளி வந்து கொண்டிருந்தன.

இவ்வாறு வடமொழிக் கட்டுரைகள் வெளி வந்த சமயம் அத்தங்கி கவிபூஷணம் சுவாமிகள் சென்னையைச் சேர்ந்த திருவல்லிக்கேணியில் சுவாமியை, ஆயுர்வேதம், சோதிடம் ஆகிய கலைகளில் வல்லுநரான நீலகண்ட சர்மா என்பவருக்கு அறிமுகம்

22 தானே எழுதிய தன் சரிதை பக் 54
23. ௸ 24. ௸ ப - 55

செய்துவைத்தார். சர்மா அவர்கள் வடமொழியிலும் மிக்க புலமை பெற்றவர். 'விஞ்ஞான சிந்தாமணி' என்னும் வடமொழி இதழை நெடுங்காலம் நடத்தி வந்தார். கவிபூஷணம் சுவாமிகளுக்குச் சர்மா அவர்கள் மிகவும் நெருங்கிய நண்பர். ஆகவே அவருடைய இதழில் சுவாமியின் கட்டுரைகளைப் பிரசுரிக்கப் பரிந்துரை செய்தார். அந்நாள் தொடங்கி சுவாமிகளுக்கு சர்மா அவர்கள் மிக்க நெருங்கிய நண்பரானார். சர்மா அவர்கள் மலையாள நாட்டைச் சேர்ந்த பெருமுடியூர் என்னுமூரைச் சேர்ந்தவர். அவருடன் பேசிப் பழகியதில் சுவாமிக்கு மலையாள மொழியிலும் ஓர் அறிமுகம் ஏற்பட அரிய வாய்ப்புக் கிட்டியது.

## சுவாமி வேதம் பயிலுதல்

குழந்தைப் பருவத்திலிருந்து தக்க பருவம் வந்ததும் வைதிக முறைப்படி பூணூல் அணிந்த உடனேயே வேதமோதுவது வழக்கம் ஆனால் சுவாமிக்குத் தம் இளமைப் பருவத்தில் வேதமோதும் வாய்ப்புக்கிட்டவில்லை. ஏனெனில் அவர்தம் தகப்பனார் வேதத்தில் சில பகுதிகளையே கற்றிருந்தார். ஆனால் இவர்தம் தம்பி—சிறிய தாயாரின் மகன்—(சுவாமிக்குச் சிற்றப்பா) இளமையில் வேதமோதி மிகவும் புலமை பெற்றிருந்தார் அவர் பெயர் 'சுட்டி மாமா பிள்ளை நரஸிம்மாசாரியார்' என்பது. ஒரு பாடசாலையை அழகிய மணவாளச்சீயர் மடத்தில் ஏற்படுத்தி அப்பாடசாலையில் நரஸிம்மாசாரியரை வேதத்திற்கு ஆசிரியராக நியமித்தார். அக் கல்விக்கூடத்தில் ஏழெட்டு மாணவர்களே இருந்தனர். அவர்களோடு சுவாமியும் சேர்ந்து வேதமோதினார். அப்பாடசாலை வெகுகாலம் நீடிக்கவில்லை.

சுவாமி தம் இருபத்திரண்டாவது வயதில் ஒரு முறை திருமலை உத்ஸவத்திற்கு வந்திருந்தபோது ஸ்ரீமான் திருமலை விஞ்சிமூர் மாம்பள்ளம் ஸுதர்சனாசாரிய சுவாமிகளைச் சந்திக்க சேர்ந்தது. அப்பெரியார் வேதம், அதன் பாஷ்யங்கள் மற்றும் ரஹஸ்யம் முதலான நூல்களையும் கசடறக் கற்று விற்பன்னராயிருந்தார். அவர் திருமலையில் நிலையாகத் தங்கித் திருவேங்கடவனுக்கு 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா வடிமை' (திரு 3-3-1) செய்து கொண்டிருந்தார் திருமலையப்பனின் உத்ஸவத்தில் அப்பெருந்தகை வேதமோதிக் கொண்டு திருவேங்கடவனின் பின் சென்று கொண்டிருந்தார். அவருடைய இனிமையான குரல் சுவாமியின் செவிக்கினிய விருந்தாகி மனத்தையும் கவர்ந்தது. அக்கணமே சுவாமியின் மனதில் ஒரு புத்துணர்ச்சி உண்டாகி எப்படியாகிலும் பல மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு வேத

யோத வேண்டுமென்று உறுதி மனப்பான்மை ஏற்பட்டது. எனவே சுவாமி அப்பெருந்தகையை அணுகித் தெண்டனிட்டுத் தம்முடைய பாரிப்பை அவரிடம் தெரிவிக்க, அவரும் மிகவும் மனமகிழ்ந்து 'அப்படியே செய்வது; இப்போதே புறப்படுவது' என்று சொல்லி மறுநாள் சுவாமியோடு அவர் புறப்பட்டு காஞ்சியில் 'நித்ய வாசம்' செய்ய விழைந்து வந்தார். சுவாமியும் ஒரு நிலையான பாடசாலையையும் நிறுவ வழிதேடப் பேரரு ளாளனும் பெருந்தேவித் தாயாரும் பரிபூர்ணமாக அருள்கூர்ந்து நன்கொடை ஈந்தருளும் மகான்களை ஏற்படுத்தினர். அவர்களின் மாத நன்கொடையினால் அப்பாடசாலை சிறிதுகாலத்திற்கு அழகிய மணவாளச்சீயர் மடத்தை நிலயமாக்கிக் கொண்டு இயங்கி வந்தது. காதி அனந்தாசாரிய சுவாமி வடதேசயாத் திரையில் இருந்துவந்தார். இச்செய்தி அவருக்குத் தெரிந்து மிகவும் மகிழ்ச்சி கொண்டு பாராட்டினர். 'அண்ணா' சந்நிதியில் நடந்து வந்த 'வேதாந்த வைஜயந்தீ' பாடசாலையின் பெயரை இதற்கு வைக்குமாறு தெரிவித்தார். தம் குமாரரான காதி கிருஷ்ணமாசாரிய சுவாமியை அப்பாடசாலையில் சேர்ப்பித்தார். வேதத்திற்கு முதலிடம் கொடுக்க எண்ணி அப்பாடசாலை 'வேத வேதாந்த வைஜயந்தீ' பாடசாலை என்ற பெயர் சூட்டப்பட்டது. கோவர்த்தனம் ரங்காசாரிய சுவாமி என்னும் மகானுக்கு வட தேசத்தில் அநேக சீடர்களிருந்ததனால் அவர்களிடம் இப்பாட சாலையைப் பற்றி எடுத்துரைத்து நிரந்தரமாக நன்கொடை கொடுக்க ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீமன்ஸுதர்சனாசாரிய சுவாமியின் வேதமோதுவிக்கும் பாங்கு தனிப்பட்டதாகும். பொதுவாக மூலம் அசீதி என்னும் பகுதியுடன் சொல்லி முடித்த பின்பே பதம்,க்ரமம் முதலியன ஓது வதுவழக்கம் ஆனால் கோவில்களில் வீதிப்புறப்பாடுகளிலும் மற்ற சமயங்களிலும் வேதபாராயணம் பதக்ரமங்களோடு செய்வதே முறை. இதை நன்குணர்ந்த அப்பெருந்தகை முதல் காண்டத்தி லிருந்து பதக்ரமங்களோடு ஸம்ஹிதையையும் பிறகுப்ராஹ்மணத் தையும் அதிகரிப்பித்தார். சுவாமி இவ்வாறு தமது இருபத்திரண் டாவது வயதில் முறையாக வேதத்தைக் கற்கத் தொடங்கினர்.

அனைத்துக் கல்வியும் கடசறக் கற்பித்த சுவாமியின் தந்தை தாம் வேதத்தைக் கற்பிக்க முடியாமற் போனமைக்கு வருந்திக் கொண்டிருந்தார். அவரே சொல்லிக் கொடுக்க இயலாமலே இருந்தது. தம் மகனாவது வேதத்தை முழுவதும் ஓதவேண்டும் என்ற பாரிப்பை அதிகமாகவே கொண்டிருந்தார். இப்பாரிப்பை

நிறைவேற்றுவதன் பொருட்டு சுவாமி வேதத்தைக் கற்றார். இதுவே முதல் காரணமாகும்.

இருபத்திரண்டு வயதிற்குமேல் வேதமோத ஆரம்பித்தபோது பலர் சுவாமியை இகழ்ந்தனர். அதைக் கருத்திற்கொள்ளாது பேரருளாளனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டுமென்றதையே மனதிற்கொண்டு வேதமோத ஆரம்பித்தார் அவர். காஞ்சீபுரத்தைச் சுற்றிப் பல திவ்யதேசங்கள் உள்ளன. பேரருளாளனைவரதராஜப் பெருமாளைப் போல மற்ற கோயில்களிலும் அக்காலத்தில் உத்ஸவங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. அக்கோயில்களில் ''வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை'' (திரு8-3-3) என ஆழ்வார் வருந்திய வருத்தந்தீரச் ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்'' (திரு. 6-5-11) என்கிறபடியே ஆழ்வாரின் கைங்கர்ய பாரிப்பையும் நிறைவேற்றினார் சுவாமி சுவாமி வேதமோத இது இரண்டாவது காரணமாகும் இவரை இகழ்ந்த பலரும் உன்மத்தர் போன்று ஊமையாகி வெள்கித் தலைகுனிந்தனர். இந்நிலைமைக்குக் காரணம் ''வேதவாத்தியார்'' மாம்பள்ளம் ஸ்ரீ ஸுதர்சனாசாரியசுவாமிகளே ஆவர்.[25]

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ''உபயவேதாந்த ப்ரவர்த்தகர்'' என்பது ஒரு அடைமொழி. அவர்களின் திருநாமத்தின் முன்பு ''உ. வே.'' என்பதைச் சேர்த்து அழைப்பது வழக்கம். இதற்குக் காரணம் ஸ்ரீவைஷ்ணவர் வடமொழி வேதத்தையும் தமிழ் வேதத்தையும் இரு கண்களாகக் கருதி வந்தமையே காரணம். இவ்வடைமொழி நிலை பெற்றிருக்க ஸ்ரீமான் மாம்பள்ளம் ஸுதர்சனாசாரிய சுவாமி வடமொழி வேதம், தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்யப்பிரபந்தம், ஆசாரிய திவ்ய ஸ்ரீஸூக்திகள், ஸம்ஸ்கிருத சாகித்யம் முதலியவற்றைப் பலருக்குப் போதித்தார்.

சுவாமிகளுக்குப் பிரமாதீச ஆண்டு ஆவணித் திங்கள் திருவாதிரை நக்ஷத்திரத்தில் வேதாத்யயனம் ஆரம்பமாயிற்று. இவர் வேதமோதின வரலாற்றையே ஒரு புத்தகமாக வெளியிடலாம். விரிவுக்கஞ்சி நிற்கிறேன். வேதத்தில் ஒவ்வொரு பதத்தையும் எடுத்துக் கொண்டு ஆராய்ச்சியும் செய்யலானார் சுவாமி.

சிறிதுகாலம் மடத்தை இருப்பிடமாகக் கொண்டது அவ்வேத வேதாந்த வைஜயந்தி பாடசாலை. சீயர் சுவாமிகள் திருமேனிப்

25. தானே எழுதிய தன் சரிதை, ப. 102

* இன்றைக்கும் அங்கு நகராட்சிப் பள்ளிக்கூடம் நடைபெற்று வருகிறது.

பாங்குக் குறைய ஆரம்பித்ததனால் விடியற்காலை சியர் சுவாமிக்கு இடையூறாக இருந்தது. எனவே சாத்துப்படி ஆராவமுதய்யங்காருடைய திருமாளிகை வாசல் திண்ணையில் பந்தற்கீழ் இரண்டொரு ஆண்டுகள் வேதபாடசாலை நடைபெற்றுவந்தது. அதன்பின் ஜடப்ரோல் கோ. க. அ. திருவேங்கடாசாரிய சுவாமியின் திருமாளிகை (வடவண்டை மாடவீதியின் கீழ்க்கோடி)'யில் ஓராண்டு காலம்'' வேதம் நடைபெற்றது. பிறகு ஒரு நிலையான இடம் இருக்கவேண்டுமென்று கீழண்டை மாடவீதியின் முனையிலிருந்த இரண்டு வீடுகளை விலைக்கு வாங்கி ஒன்றைப் பாடசாலையாகவும், இன்னொன்றை விடுதியாகவும் 1916-18 ஆம் ஆண்டுகளில் நிருமாணித்தார். [6]

பேரருளாளன் கோயிலைச் சுற்றி இருவேளைகளிலும் அதாவது விடியற்காலையில் 4 மணிக்கும், மாலை 6 மணிக்கும் வீதியில் அடியார் குழாங்களுடன் கூடிவேத வொலியுடன் வலமாக வருவதைவழக்கமாகக் கொண்டார் சுவாமி. ஆழ்வாரின் திருவாக்குப் படி ''சுற்றி நாம் வலம் செய்ய நம் துயர் கெடும் கடிதே' (திரு 10-4-6) என்று எண்ணி இந்த ''நித்ய ப்ரதக்ஷிணத்தைக்'' கைங்கர்யமாக நடத்தி வந்தார். இதன் பயனாக சுவாமிக்கு வேதம் நன்றாகமனப் பாடமாக ஆயிற்று பிறகு நாளடைவில் ஒரு வேளையாக மாறிற்று இந்த 'நித்ய ப்ரதக்ஷிணம்'' சுவாமியின் எண்பத்திரண்டு வயதுவரை ஒருவித இடையுறுமின்றி நடந்துவந்தது

## அண்ணங்கராசாரிய சுவாமிகளின் எழுதும் ஆற்றல்

மண்ணுய்ய, மண்ணுலகிலுள்ள மனிசருய்யத் தம் இளமையிலிருந்தே பல நற்செயல்களை சுவாமிகள் செய்துவந்தார். அவற்றில் ஒன்று, நூல்கள் பலவற்றை எழுதிப் பதிப்பித்தது. ஆயிரம் பக்கங்களுள்ள நூல்களும், நானூறு, ஐந்நூறு பக்கங்களுள்ள நூல்களும் இவற்றிற்கு சற்று குறைவான பக்கங்களுள்ள நூல்களும் சுவாமி எழுதியுள்ளார் ''விம்சத்யப்தே விச்ருதகாநாவித வித்ய:'' என்று வேதாந்த தேசிகன் பணித்தபடியே ம் இருபதாம் வயதிலிருந்து உலகுக்கு உதவ ஆரம்பித்தார். இன்னும் இளமையில் எழுதியவை பல; அவை கிடைக்காமல் போயின. அவருடைய எழுதும் ஆற்றல் வாயினால் சொல்லவும், எழுத்தினால் எழுதவும் இயலாதது எனத் திடமாகக் கூறலாம். அவர் தம் தனிப்

26. தானே எழுதிய தன் சரிதை. ப 114
27 ஷை ப 119

பட்ட அனுபவத்தைத் தம் சரிதையில் குறிப்பிடுகிறார். "ஒவ்வொரு நாளும் 'புல்ஸ்கேப்' காகிதத்தில் ஐம்பது ஷீட், எண்பது ஷீட் என்றிப்படி யெழுதுவேன்; எழுதுவதில் அடித்தெழுவதென்பது இளமையிலிருந்தே கிடையாது. ......ஐம்பது பக்கங்களுக்குக் குறைவாக எழுதின நாளே என் நினைவுக்கு வரவில்லை" என்கிறார். வெளியூர்களுக்குப் போக நேர்ந்தாலும் எங்கும் எழுதுகிற வேலையைத் தவிர வேறு வேலையில் மனதை நாடவிடமாட்டார். புகைவண்டியில் பயணத்தின் போதும் ஒரு நொடியும் வீணுக்காது எழுதிவந்தார். அவர் தம் "தானே எழுதிய தன் சரிதை"ம் வெளிப்பயணத்திலேயே எழுதப்பட்டது. சில நேரங்களில் இடையூறின்றி எழுதுவதற்கென்றே வெளியூர் செல்வதுமுண்டு. இருக்குமிடத்தை விட வேறு இடங்களில் தான் சுவாமிக்கு எழுதும் வசதி அதிகம். அவர் எழுதிய நூல்களில் பாதிக்குமேல் வேறு இடங்களில் எழுதியவையே தபால் கட்டுகிற சமயம் வரை எழுதுவதும், எழுதியவற்றை உடனே 'புக்போஸ்டு' மூலம் அச்சுக் கூடங்களுக்கு அனுப்புவதும், முன் அனுப்பப்பட்டவை மூன்றும் நாளே அச்சாகி வருவதுமான வழக்கம் தொடர்ச்சியாக சுவாமிதம் வாழ்க்கையில் ஒரு பகுதியாக நடைபெற்று வந்தது. ஒரு புத்தகத்தைப் பல அச்சுக்கூடங்களில் அச்சடிக்கக் கொடுத்து ஒரே நாளில் புத்தகத்தை வெளியிடும் திறமையும் சுவாமி ஒருவருக்கே உண்டு. திவ்வியார்த்த தீபிகை உரை இவ்விதமாக வெளியூர்களில் எழுதிப் பல அச்சுக்கூடங்களிலும் பதிப்பித்து மிகவும் குறுகிய காலத்தில் வெளியிட்டது மிகவும் வியக்கத்தக்கது.

சார்வரி (1902) ஆண்டிற்கும் குரோதி (1906) ஆண்டிற்கும் (தம் பதினொன்றாவது வயது முதல் பதினைந்தாவது வயதிற்குள்) இடைப்பட்ட காலத்தில் காஞ்சி தேவப் பெருமாள் பெருந்தேவித் தாயார், திருவேங்கடமுடையான், திருவரங்கத்திலுள்ள ரங்க நாதன் ஆகிய எம்பெருமான்களைப் பற்றிய துதிப்பாடல்கள் பலவற்றை சுவாமி எழுதினார். இவ்வாறு பதினன்கு வயதிலேலே பல துதிப்பாடல்களை சுவாமி எழுதி வெளியிட்டார். கால் அனந்தாசாரியர் சுவாமி ஒருமுறை தீபாவளி பண்டிகையின் போது சுவாமிக்குப் பட்டாசுக்காகக் காசு கொடுக்க, 'எனக்குப் பட்டாசு வாங்கப் பணம் கொடுப்பது இருக்கட்டும்; நானெழுது கிற நூல்கள் உமக்குப் பிடித்தால் அச்சுப்போட்டுக் கொடுமே" என்று பயமறியாது அப்பெரியாரைக் கேட்டார். அவர்தம் இளமையிலிருந்து நூல்களை எழுத எழுத அவருடைய எழுத்தில் மாணிக்க ஒளி போன்று மிளிரும் தன்மை ஏற்பட்டது.

ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய இந்நான்கு மொழிகளிலும் நூல்களை அச்சிட்டுள்ளார். அவை பன்னிரண்டு துறைகளில் தோன்றியுள்ளன. அவையாவன:[8]

1. பூருவாசாரியர் பெருமையுரைத்தல்
2. இதிஹாஸ புராண சரித்திரமுரைத்தல்
3. உபந்யாஸகர்களுக்கு உதவியான உபந்யாஸங்கள் வரைதல்
4. வேதாந்த விளக்க நூல்களிடுதல்
5. திவ்வியப் பிரபந்தங்கக்கு உரையிடு
6. ஆசாரியர்களின் தமிழ்நூல்களுக்கு உரையிடுதல்
7. ரகஸ்யார்த்த விளக்க நூல்களிடுதல்
8. ஸ்தோத்ர நூல்களுக்கு உரையிடுதல்
9. வேத லக்ஷண விசார நூல்களிடுதல்
10. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்களிடுதல்
11. லோகாபிராம நூல்களை யெழுதுதல்
12. பரபக்ஷ ப்ரதிபக்ஷ நூல்களிடுதல்

எழுத்திலோ, சொல்லாற்றலிலோ அவருக்கு ஈடு இணை யாருமில்லை என்பது திண்ணம். இவை போலவே ஒருவேலையை நிருமாணிக்க ஆட்சி செய்வதோ அதிலும் மிக்கத் திறமை வாய்ந்தவர் சுவாமி. இவற்றிற்கு எடுத்துக் காட்டாகப் பலவற்றை கூறலாம். ஈண்டு ஓரிரு நிர்வாகப் பொறுப்பைக் காண்போம்:

முதலாவதாக ' வேத வேதாந்த வைஜயந்தி பாடசாலை''யின் தோற்றம் இதுமுன்னம் தெரிவிக்கப் பட்டது. இரண்டாவதாக நம்பிள்ளை சந்நிதியின் நிருவாகம்.

நம்மாழ்வாரருளிய திருவாய்மொழிக்கு முதன்முதலாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்னும் ஆசாரியருக்கு ஓருரையை எழுத எம்பெருமானுர் கட்டளையிட்டார். இதை உபதேசரத்தினமாலையில் (41) மணவாள மாமுனிகள்,

> **''தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப் பிரான்**
> **பிள்ளான் எதிராசர் பேரருளால்''**

என்கிறுர். திருக்குருகைப் பிரான் என்பவரிடமிருந்து படிப்படியாகத் திருவாய் மொழிக்கு உரைகள் வளர்ந்து வந்தன. அவ்வழியில் நம்பிள்ளை என்னும் மகானின் முப்பத்நாருயிரப்படி என்னும் வியாக்யானம் அமுதென்றும் தேனென்றும் கூறும்படியாக இருந்தது. பலகோணங்களில் நம்பிள்ளையின் உரை

8. தானே எழுதிய தன் சரிதை பக் 281

சுவாமியை ஈர்த்தது. அதன் பயனுக நம்பிள்ளையின் உரையில்நன்கு மூழ்கிக் கடலிலிருந்து முத்தை எடுப்பது போல "திவ்வியார்த்த தீபிகை" என்னும் உரையைத் தோற்றுவித்தார். அவர்பால் மிக்க அன்பும், மிக்க பெருமையும் அண்ணங்கராசாரிய சுவாமி கொண்டிருந்தார். அன்பும் பெருமையும் கரை காணவொண்ணுது மடைதிறந்து விட்டாற் போன்று நம்பிள்ளைக்கு ஒரு கோயிலைச் சமைக்க வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டு, அதன்பின் ஒரு கோயிலை அமைத்து நம்பிள்ளையின் மூலவிக்ரஹமும் உத்ஸவ விக்ரஹமும் எழுந்தருளச் செய்தார் சுவாமி. நம்பிள்ளையின் சீடர்களான வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை என்னும் மகான்களின் உருவமையும், அவர்கள் வழிபடு தெய்வங்களான திருவரங்கன், திருவேங்கடமுடையான், கண்ணபிரான் முதலான எம்பெருமான்களையும் அக்கோயிலில் எழுந்தருளச் செய்து நாலாயிரப் பிரபந்தங்களை அக்கோயிலில் பாராயணம் செய்யும்படி நியமித்தார். இது இன்றைக்கும் அவ்வாறே நடைபெற்று வருகிறது. இப்படிப் பட்ட ஒரு நிருவாகத்திற்கு ஆளும் திறமை மிகவும் தேவையேயாகும். திருமாலடியார்களை விருந்தோம்புதல் தனித்தன்மை வாய்ந்தது. விருந்தோம்பலில் சுவாமியுடன் சுவாமியின் மருமகனும் (இளைய மாப்பிள்ளை) — ஸ்ரீமான் மணவாள திருமலாசாரியர்—இவருடைய குமாரரும் — ஸ்ரீமான் ரங்கநாதாசாரியர் — (சுவாமியின் பேரனுர் அதாவது சுவாமியின் சுவீகார புத்திரர்) பங்கேற்று இனிதே செய்துவந்தனர். இன்றைக்கும் இத்ததீயாராதனம் பல சமயங்களில் நடைபெறுகிறது.

மூன்ருவதாக கிரந்தமாலா காரியாலயத்தின் நிருவாகம். சுவாமிகளின் பதிப்புக்கள் கணக்கற்றவை. இக்காரியாலயத்தின் வேலைகளை சுவாமியின் மூத்த மருமகனும் (ஸ்ரீமான் அக்காரக்கனி சம்பத்குமாராசாரியர்) இளைய மருமகனும் துணையாக இருந்துக் கவனித்து வந்தனர். வடமொழி பதிப்புக்களும் இந்திப் பதிப்புக்களும் மூத்த மருமகனுர் வசம் ஒப்படைக்கப்பட்டு வந்தன. தெலுங்குப் பதிப்புக்கள் மற்றும் தமிழ்ப் பதிப்புக்கள் இளைய மருமகனுர் வசம் ஒப்படைக்கப்பட்டு வந்தன. மற்ற மொழிகளிலுள்ள பதிப்புக்களைத் தாமே கவனித்து வந்தார் சுவாமி.

இவ்வாறு சுவாமியின் திறமை பலவிதங்களிலும் புலப்பட்டு உலகுக்குப் பயனளித்து வருகின்றன.

## **சுவாமியின் குடும்ப நலவாழ்வு**

சுவாமியின் முன்னோர் வேதநாவலராக இருந்ததனால் அக்கால ஆற்காடு நவாபு மன்னர் ஒருவர் வடாற்காடு மாவட்டத்திலுள்ள **திருவடிராயபுரம்** என்னும் சிற்றூரைத் தானமாகக் கொடுத்திருந்தார். இவ்வூருக்கருகிலுள்ள **சித்தாத்தூர்** என்னும் அக்கிரகாரத்தில் ஒரு வீடும் கொடுத்திருந்தார். நாளடைவில் அவை இரண்டும் 'இனும்' ஒழிப்புச்சட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமாயின.

சுவாமி இல்லறத்தைத் தமது இருபதாவது வயதில் ஆரம்பித்து இல்லற நெறியையும் கடைப்பிடித்து இருமகளிரைப் பெற்றார். இரு மகளிரையும் தக்கபருவத்தில் நல்ல விற்பன்னர் குடும்பங்களில் வாழ்க்கைப் படுமாறு செய்தார். சுவாமியின் துணைவியார், திருமதி கோமளம்மாள் என்பவர். இவர்களுடைய இல்லற வாழ்க்கை நெடுகிச் செல்லவில்லை. சுவாமி தம் நடு வயதிலேயே தம் இல்லறத்துணைவியாரை இழக்க நேர்ந்தது மிகவும் வருந்தத்தக்கது.

## **சுவாமியின் நூல்கள்**

சுவாமிகள் தம் வாழ்நாட்களில் அரும்பாடுபட்டுச் சிறந்த நூல்களை இயற்றி அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டு உலகில் பரவிய நூல்கள் ஆயிரத்து இருநூற்று எழுபத்தாறு (1276) எனக் கணக்கிட்டுள்ளனர். முன்னம் தெரிவித்ததுபோல் பன்னிரண்டு வகைகளாக அவை அமைந்துள்ளன. 21.4.1986 அன்று (சுவாமியின் மறைவுக்குப் பின்) முன்னமே ஒலிபரப்பப் பட்டது — வானொலித் தொகுப்பில் சுவாமி கூறியதாவது, அவருடைய நூல்கள் பதினாறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். மற்ற நான்கு பகுதிகளைக் கீழே குறிக்கப் பட்டுள்ளன.

1. பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் அஷ்டப்பிரபந்தத்திற்கு உரை.

2. அருளாளப் பெருமாள் எம்பெருமானாரின் ஞானஸார, பிரமேய ஸாரத்திற்கு உரை.

3, மணவாள மாமுனிகள் திருப்பேரனார் இயற்றிய **நக்ஷத்ர மாலிகா** என்னும் நூலுக்கு (தோத்திரத்திற்கு) உரை.

4. ஸ்ரீராமாயண மொழி பெயர்ப்பு என்பன. இவற்றில் மணி மகுடமாகத் திகழ்வது "பூருவாசாரிய கிரந்த (பிரபாவ) நூல்கள் பற்றிய விளக்கமாகும்.

## நூல்களைப் பற்றிய சிறுகுறிப்புக்கள்

1. பூருவாசார்யர்கள் என்றழைக்கப்படும் வழிக்குரவர்களின் வரலாற்றை நூல்களாக இயற்றியுள்ளார். கூரத்தாழ்வான் வைபவம், ஸ்ரீராமானுஜர் வைபவம் என்றிவ்வாருகப் பல சான்றுகளுடன் ஆசாரியர்களின் வரலாற்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

2. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிஹாஸ புராணக் காப்பியங்களில் வரும் சிறு கதைகளையும், நிகழ்ச்சிகளையும், குறிப்புக்களையும் தொகுத்து ஆங்காங்கு வெளிப்படுத்தியுள்ளார் திருமாலின் பத்து அவதாரங்களின் பெருமைகளையும் இவர் தெள்ளிய நடையில் எழுதியுள்ளார். ஆழ்வார்களருளிய திவ்வியப்பிரபந்தங்களில் ஆளப்படும் இதிஹாஸக்கதைகளையும் புராண வரலாறுகளையும் பாசுரத்தின் இலக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். அந்நூலிற்கு "பகவத்கதாம்ருதம்" என்று பெயர்.

3. "உபந்யாஸ நூல்கள்" என்ற தலைப்பில் பல சொற்பொழிவுகளை அச்சிட்டு உலகுக்குப் புலப்படுத்தியுள்ளார்;

சுவாமி தம்முடைய சொற்பொழிவாற்றும் திறமையை 'ஸ்ரீராமானுஜன்' என்னும் மாத இதழ் வாயிலாக அல்லாது தனித் தனிப் புத்தகங்களாகவும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். உபந்யாஸ நூல்களை விசேஷார்த்த ரத்னநிதி, பெரும்பூதூர் மாமுனியின் பெருமையநுபவம், ஸ்ரீராமகுணநுபவம். உபந்யாஸ ஸௌபாக்யம் என்று பலவிதமான தலைப்புக்களிட்டு உலகிற்கு உதவியுள்ளார்.

"உபந்யாஸ ஸௌபாக்யம்" என்னும் தலைப்பின்கீழ் ஐந்நூறு சொற்பொழிவுகளுக்குக் குறையாமல் சுவாமிகள் வெளியிட்டுள்ளார். இவ்விதமான பணியை வடமொழியில் "அதிமாநுஷக்ருத்யம்" என்பர். அதாவது "ஒரு மனிதனால் தன் வாழ்நாளில் செய்யமுடியாத வேலை" என்றபடி.

4. மறைப்பொருளி(வேதங்களி)ன் உள்ளுறை பொருள் நயப்பொருள், உவமைப் பொருள் முதலியவற்றோடு புனைந்து எழுதுவது சுவாமிகளின் எழுதும் ஆற்றலின் தனிச்சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. வடமொழியிலும் தமிழ் மொழியிலு மாக உரைகளையும் தத்துவப் பொருள்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

5. ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய ''அருளிச்செயல்'' என அழைக்கப்படும் 'திவ்வியப் பிரபந்தங்களுக்கு எளிய தெள்ளிய நடையுடன் கூடிய உரைகளிட்டு அவற்றிற்குப் பொது வாகத் ''திவ்யார்த்த தீபிகை'' உரை எனப் பெயரிட்டார் சுவாமிகள். பூருவாசாரியர்கள் பணித்த உரைகளைத் தழுவியே இவ்வுரை எழுப்பப்பட்டிருப்பினும் சுவாமி தம்முடைய தனித் திறமையினை அவர்தம் உரையில் வெளிப்படுத்தியுள்ளார். ஆங் காங்குத் தம்முடைய எண்ணங்களையும் புலப்படுத்துகின்றார். திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை காண்பதோடு நில்லாது ''ஆழ் வார்கள் உகந்த இராமன்'' ''ஆழ்வார்கள் உகந்த கண்ணன்'. என்னும் தலைப்பில் நூல்களும் திவ்வியப் பிரபந்தங்களின் துணை கொண்டு எழுதியுள்ளார் சுவாமிகள். ''அண்ணா—கண்ணா'' என்னும் தலைப்பின்கீழ் வேத விசாரம், திவ்வியப் பிரபந்தங்களி லுள்ள திரண்ட கருத்துக்கள் அடங்கிய உரையாடல் பகுதிகள் மிகவும் நகைச்சுவையுடன் சிறந்த அறிவைக் கொடுக்குமவையா கத் திகழ்கின்றன.

திவ்யப்ரபந்த ஸாரத்திரட்டு, திவ்யப்ரபந்த ஸாராம்ருதம், திவ்ய ப்ரபந்தக் கண்ணாடி, திவ்யப்ரபந்தத் திருநாம மாலை, அருளிச் செயலராய்ச்சி, அருளிச் செயல் பாகவதம் முதலியன இப்பிரிவில் அடங்கும்.

6, ஆசாரியர்கள் இயற்றிய தமிழ் நூல்களான உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம், ஞான ஸாரம், பிரமேய ஸாரம், ஸப்த காதை, ஆகிய வற்றிற்கு உரைகள் எழுதிவைத்தார். கம்பரின்பக் கவித்திரட்டு என்னும் நூலும் இப்பிரிவில் அடங்கும்.

7. முமுக்ஷுப்படி ஸாரம், தத்வத்ரய ஸாரம், ஸ்ரீவசந பூஷண ஸாரம், ஆசார்ய ஹ்ருதயஸாரம் போன்ற ரகஸ்யங்களுக்கு விளக்கமான உரைகள் சுவாமியால் எழுந்தன.

8. நூற்றுக்கணக்கான வடமொழித் தோத்திரங்களுக்கு உரைகள் கண்டார். தாமே இயற்றிய வடமொழி நூல்களுக்கும் உரைகள் எழுதியுள்ளார் சுவாமிகள்.

9. வேதங்களில் வரும் தத்வார்த்தங்களுக்கு நூல்களியற்றி உரைகளும் எழுதியுள்ளார்.

10. வைணவ மரபின்படி தோன்றிய நூல்கள் ஸத்ஸம்ப்ரதாயார்த்த நூல்கள் எனப்படும். அவற்றிற்கு விரிவாக விளக்க நூல்களை சுவாமிகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

11. சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை, ஆராய்ச்சிமணிமாலை, உபதேச ரஸாயனம், க்ஷேத்ர தீர்த்த யாத்திரை விளக்கு, செந்தமிழாராய்ச்சி போன்ற நூல்களைப் பொதுவுலகுக்கும் பயன்படும் நிலையில் வெளியிட்டுள்ளார்.

12 சுவாமிகள் வீணுக எந்த வாதத்திற்கும் போக மாட்டார்: ஆனால் தம்மிடம் வரும் வாதத்திற்கு ஆணித்தரமான, தகுந்த ஆதாரங்களுடன் பிரதிவாதம் செய்யாது உறங்கவும் மாட்டார். இராமபிரானைப் பற்றியருளிச் செய்கிற நம்மாழ்வார் திருவாய்மொழியில் (10-1-8) ''வல்லரக்கர் புக்கழுந்த தயரதன் பெற்ற மரகத மணித்தடம்'' என்றார். கண்ணபிரானைப் பற்றியருளிச் செய்கிற பெரியாழ்வார் தம் திருமொழியில் (3-6-4)

**தேனுகன் பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்**

**பூடுகளடங்க வுழக்கி......**

என்றார். இவற்றைக் காணும் போது இராமபிரானும் கண்ணபிரானும் வீணுகப் போரிட்டு அசுரர்களையும் அரக்கர்களையும் ஒழிக்கவில்லை; அவர்கள் தாமே இடுக்குண்டு அகப்பட்டுப்போரில் மாய்ந்தார்கள். அவ்வகையிலேயே சுவாமிகள் வாதங்களுக்குத் தாமே போகாமலிருந்த போதே அவற்றிற்குத் தகுந்த பிரதிவாதங்களும் எழுந்தன.

''பரபக்ஷ பிரதிக்ஷேபம்'' சுவாமியின் வாழ்க்கையில் கண்கூடாக அவர்தம் குடிப்பெயருக்குத் தகுந்தாற்போல் அமைந்துள்ளது. ஸ்ரீமான் காரப்பங்காடு சிங்கப் பெருமாள் சுவாமி என்னும் பெரியார் கணித்த சோதிடத்தின்படி இவர் வாழ்க்கை

யில் நடக்கப் போவதையும் நடந்ததையும் இங்குக் காண்போம். அப்பெரியாரின் வாக்கு;

"பிரதிவாதி பயங்கரரென்கிற குடிப்பெயர் உமக்கு அக்வர்த்தமாக (பொருளுடன் கூடியதாக) இருக்கும்; உலகத்திலுள்ள வித்வான்கள் யாவரும் தாமாகவே வந்து உம்முடைய வாக்கில் மாட்டிக் கொள்வார்கள். இதைப் பரீக்ஷையாகப் பார்க்கலாம். வேண்டிய வர்கள் வேண்டாதவர்கள் என்கிற வாசியில்லாமல் பெரும்பாலும் எல்லோருமே வந்து உம்மிடம் சிக்கிக் கொள்வார்கள். சிக்கிக் கொள்வதோடு நிற்கமாட்டார்கள்; திக்குமுக்கலாடி நிற்பர்கள். சனிக்கிழமையைச் செவ்வாய்க்கிழமையாக நீர் சொல்லி விட்டாலும் அது செவ்வாய்க்கிழமை ஆய்விடும். இத்தால் நீர் விதண்டாவாதம் செய்வீரென்றதாகாது; எத்தனை வித்வான்கள் திரண்டு போராடினாலும் உம்முடைய வாதந்தான் ஸித்தாந்த மாக நிற்கும்" என்று சொல்லியிருந்தார்.

அப்பெரியாரின் வாக்கு அவர் முன்பே பலித்தது. இதற்கு இலக்கான பெரியார் அக்காலத்து அஹோபில மடத்தின் ஆஸ்தாந வித்துவான் ஆவார். தெருவில் சென்று கொண்டிருந்த சுவாமியை அப்பெரியார் அழைத்து விசாரித்தார். சுவாமி அங்குச் சென்ற போது வேதாந்த தேசிகரின் "யாதவாப்யுதய" பாடம் நடந்து கொண்டிருந்தது. அப்பாடத்தில் சொற் பொருள் காரணமாக விவாதம் இருவரிடையே வந்தது. பிறகும் அது வளர்ந்து கொண்டேயிருந்தது. "ரக்ஷா விலோசந பாவப்ரகாசிகை" "நமஸ் கார தத்வ விஜய த்வஜம்" முதலான புத்தகங்களும் அப் பெரியார்க்கு எதிராகத் தோன்றின.

இந்நிகழ்ச்சி பற்றி சிங்கப் பெருமாள் சுவாமி கேள்விப்பட்டு உடனே சுவாமியைத் தேடிக் கொண்டு வந்து "நான் சொன்னது எப்படி?" என்று கேட்டார். எந்த விவாத நூல்களும் பயனுள்ளன வாகவே இருக்கின்றன. தத்துவங்கள் அடங்கிய கருத்துக்கள் இல்லாத விவாத நூல்களே இல்லை.

ஆக, சுவாமிகள் தம்முடைய வாழ் நாட்களை வீணே கழித் திருந்தால் இவ்விதமான ஆயிரக் கணக்கான நூல்கள் வெளிவந் திராது. உடலில் வலிமை குறைந்தாலும் உள்ளத்தில் உறுதியும், எண்ணத்தில் எப்போதும் வலிமையும் குறையாது அவருடைய

இறுதி நாட்கள் வரை எழுதும் ஆற்றலுக்கு ஒரு புத்துணர்ச்சி அவ்வபோது மிளிர்ந்து கொண்டே வந்தது.

## திவ்யார்த்த தீபிகையின் தோற்றமும் சிறப்பியல்புகளும்.

எந்நூலை எழுத முற்படும் போதும் நன்கு ஆராய்ந்து, கருப் பொருளை நழுவவிடாது, அதன்பின் இலக்கண இலக்கிய மரபு முரணாகாது ஒருவிதத்திருத்தமும் மீண்டும் யோசிக்கும் எண்ணமும் இல்லாது ஒரு நாளுக்கு முழுப்பக்கஅளவில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமல் தங்கு தடையின்றி ஆற்று வெள்ளம் போல சுவாமி எழுதிச்செல்வார். இவ்வண்ணமாக எழுதுமாற்றல் சுவாமியிடம் தவிர நாம் வேறு எவரிடமும் காண இயலாது என்பது திண்ணம். சுவாமி ஒருநாளில் பதினெட்டு மணிநேரம் இத்தகைய பெருந் தொண்டில் ஈடுபட்டு வந்தார். தமது தொண்ணூறுவது வயது முதல் அவருடைய திருமேனியின் (உடலின்) தளர்ச்சியினால் பதினைந்து மணிநேரம் பணி புரிந்து வந்தார், அவர் ஒரு நாளில் ஒரு மணி நேரம் தான் தூங்குவது.

மயர்வற மதிநல மருளப் பெற்ற ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கட்குப் பூருவாசாரியர்களின் வியாக்கியா னங்கள் (உரைகள்) தேனும் பாலும் அமுதுமாயிருப்பினும் நன்கு கற்றவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அவை பயன்படாமல் இருந்தன. ஆகவே சுவாமி அவ்வாசாரியர்களைப் பின்பற்றி, (அவர்களைத்தழுவித்) தம் புலமையையும் புகுத்தி எல்லார்கட்கும் இன்பம் பயக்குமாறு எளிய நடையில் தெள்ளிய ஒருரையை எழுதி, அதற்குத் 'திவ்யார்த்த தீபிகை' உரை எனப்பெயர் வைத்தார். இந்தத் தீபிகையுரையைத் தமது பத்தொன்பதாவது வயதில் எழுத ஆசைகொண்டு முதன்முதலாக **இராமானுச நூற்றந்தாதி** என்னும் பிரபந்தத்திற்கு உரையை எழுதி வெளியிட் டார். இவ்விதமாக இந்தத் தீபிகை உரை தோன்றியது. மேலும் இவ்வுரையின் வளர்ச்சியை இங்குக் காண்போம்.

இராமானுச நூற்றந்தாதிக்கு எழுந்த உரையினைக் கண்ணுற்ற பெரியார்கள்அனைவரும் மகவும் புகழ்ந்து மேலும்மற்றப்பிரபந்தங் களுக்கும் தீபிகையுரை எழுதவேண்டுமாறு கேட்டுக் கொண்டனர், அதன் பயனாகத் திருப்பல்லாண்டு தொடக்கமாக எல்லாத் திவ்யப் பிரபந்தங்களுக்கும் படிப்படியாக சுவாமி உரையை எழுதி மாத

இதழாக வெளிவரச் செய்தார். முதன் முதலில் பதவுரையும் பொழிப்புரையுமாகவே வெளியிட்டார். சென்னையில் வாழைப் பழ வியாபாரிகளான திருவாளர்கள் M. R. கோவிந்தசாமிநாயுடு, கன்னையநாயுடு என்னும் சகோதரர்கள் இவ்விதழைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து இவ்வுரையை நன்கு விரிவாக எழுதுமாறு கேட்டுக்கொண்டனர். அவர்களே இவ்வுரையின் அச்சிடும்பணியில் அமர்ந்து தீபிகை உரையை வெளிக்கொணர்ந்தனர். தீபிகையுரை அவ்வப்போது சில காரணங்களால் தாமத முற்றபோது அவ்விரு சகோதரர்களும் சுவாமியை விரைவுபடுத்தி மேலும் எவ்விதத் தடையுமின்றி அதனை முடிவுறச் செய்தனர். 1930ஆம் ஆண்டு திருவாய்மொழியைத் தவிர மற்ற மூவாயிரம் பாசுரங்கட்கும் தீபிகை முடிவுபெற்றிருந்தது.

திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களுக்கும் பல வியாக்கியானங்கள் எழுந்திருந்தனவாகையால் அந்த ஆயிரம் பாசுரங்களுக்கும் சுவாமி திவ்யார்த்த தீபிகையுரை எழுதாமல் இருந்தார். பல நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திருவாய்மொழிக்குத் தீபிகையுரை எழுதத்தொடங்கினர். அச்சமயம் சுவாமி வேதத்தில் பயிற்சி செய்து கொண்டிருந்ததால் வேதத்திற்கே காலமெல்லாம் கழிந்தன. எனவே திருவாய்மொழியின் தீபிகையுரை சற்றுத் தடைப்பட்டது. தேவக்கோட்டை T. பார்த்தசாரதி ஐயங்கார் என்பவர் வழக்கறிஞராக வேலை பார்த்து வந்தார். அவருக்கு அச்சசம் ஒன்று உண்டு. அவ்வழக்கறிஞர் சுவாமியிடம் சிறந்த ஈடுபாடுகொண்டவர். பலவித வேலைகளினுல் தீபிகையுரை தடைப் பட்டே இருந்த சமயம் ஓரிரவு சுவாமியின்கனவில் அவ்வழக்கறிஞர் மகிழ மாலையை அணிந்து கொண்டு நம்மாழ்வாரைப் போலக் காட்சித்தந்து திருவாய்மொழிக்குத் தீபிகையுரை விரைவில் எழுதி முடித்துவெளியிட வேண்டுமென்று கூறிமறைந்தார். அந்நிகழ்ச்சிக் குப்பின் வெகுவேகமாக தீபிகையுரை எழுதப்பட்டு வெளியிடப் பட்டது. தீபிகையுரை பெரும்பாலும் வெளிப்பயணங்களிலேயே எழுதப்பட்டது என்பது குறிக்கொள்ளத்தக்கது.

நாலாயிரம் பிரபந்தத்திற்கும் தீபிகையுரைவெளி வந்தவுடன் திருவாளர்கள் மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, தமிழ்த்தாத்தா என்றெல்லாம் புகழப்படும் உ.வே. சாமிநாதஐயர் அவர்கள், சேது சமஸ்தான மகாவித்துவான் இராநாதபுரம் இரா. இராகவையங்கார் சுவாமிகள் மற்றும் பல பெரியார்கள்



**ஸ்வாமி** (16 வயதில்)

தீபிகை யுரையைப் பற்றி மதிப்புரைகளை வெளியிட்டுள்ளனர். இரா. இராகவையங்கார் அவர்களின் மதிப்புரையை மட்டும் கீழே காண்போம்.

"நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்த வியாக்கியானங்கள் அறிதற்கரியனவாய் அதிக வடமொழிக் கலப்புடையனவாயிருத்தலை நோக்கி நம் தமிழ் மக்கள் எளிதினுணர்ந்து கொள்ளும் வண்ணம் இனிய தமிழ் நடையில் நூற்பொருளை நன்கு விளக்கி இவ்விரிவுரை நிற்றலைக்கண்டு நாடோறுங்கழி பேருவகையடையா நின்றேன். இவ்வாசிரியரது உரைநடை வடமொழி தென்மொழிகளில் இவர்கட்குள்ள அரியபெரிய பயிற்சியையும் நுணுகிய ஆராய்ச்சியின் திறத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. தமிழ் வல்லுநர் பலர் இவ்விரிவுரையைக் கற்று மிகவும் அன்பு கூர்ந்து பாராட்டுதலையும் யான் பலவூர்களிற் கண்டுளேன். இவ்வினிய தமிழ் விரிவிரையின் பெருந்தகுதியை நோக்கி இவரை '**திவ்ய ப்ரபந்தப் பேராசிரியர்**' என்றே சிறப்பித்துக் கூறுவே னெனின் அது கற்றூர் பலர்க்கும் உடன்பாடேயாம். இருமொழிப் புலமையும் நூற்கடலாழ் பொருள்களைப் பிறர்க்கெடுத்துரைக்கும் வன்மையும் பாஷ்யம் போல நூல்கட்டு விரிவுரை யெழுதுந்திறனும் கவியியற்றும் பெற்றியும், இவ்வாசிரியர்பால் நிறைந்து விளங்குகின்றன. இத்தகைய பெரியார் இன்னும் பல அறிவு விளக்க நூல்களை இயற்றி உலகிற்கு உபகரித்து நீடூழி வாழுமாறு பரதெய்வத்தின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்"

—**ரா. இராகவையங்கார்**'[29]

இவ்வுரை வெளிவரத் தொடங்கிய போதே மதுரையின்கண் நடைபெற்று வந்தச் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு ஆசிரியரான மகா வித்துவான் திரு. நாராயணையங்கார் ஸ்வாமிகள் தீபிகையின் உரையைப் பற்றி மிகவும் கொண்டாடியெழுதி சுவாமிக்குச் **செந்தமிழ்ச் செல்வர்** என்னும் விருதை அளித்தார்.

தீபிகையுரை இலக்கணக் குறிப்புக்களுடன் அமைந்து சுவாமியின் புலமையைப் புலப்படுத்துகின்றது. மற்ற வுரையாசிரியர்களை ஆங்காங்குக் காட்டியுள்ளனர். பன்னீராயிரப்படி உரைகாரர் யாப்பைத் தனியே விளக்குகிறார். சுவாமி ஒவ்வோரிடத்திலுமு இலக்கணங்களை விளக்கிச் செல்கிறார்.

---

29. தானே எழுதிய தன் சரிதை, ப. 157-158

திவ்யார்த்த தீபிகை யுரையின் சிறப்பினை ஒரிரு சான்று களால் கீழே காணலாம்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் "துவளில் மாமணி மாடமோங்கு" (6-5-0) பதிக அவதாரிகையில் பரமாசாரியரான நம்பிள்ளையின் ஈடுமுப்பத்தாறுயிர வியாக்கியானத்தை, சுவாமி விளக்கமாகவும் தெளிவாகவும் எளிய நடையோடும் விளக்குகிறார்.

## நம்பிள்ளையின் பேருரை-ஈடுமுப்பத்தாறுயிரம்

"ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் பிறந்த ஸமயத்தில் ஜ்யோதிர் வித்துக்களை அழைத்து இவள் ஜீவிக்கும் படிகளென்? என்று கேட்க; 'இவள் ஜீவிக்கும் படிகளில் ஒரு குறையில்லை; ஸார்வ பௌமனுயிருப்பானொருவனைக் கைப்பிடிக்கவும், கடவள்' என்றார்கள். அப்படியே இப்பெண் பிள்ளை (பராங்குசநாயகி) பிறந்த போது இவள் திருத்தாயாருள்ளிட்டார் நிதாநஜ்ஞரா யிருப்பாரை அழைத்து இவள் ஜீவிக்கும் படிகளெங்ஙனே யென்று கேட்க: எல்லாம் நன்றுய்த்தலைக் கட்டக் கடவது. ஆனாலும் இவளுக்கு ஓர் அபம்ருத்யுவுண்டு; அது தப்பினாளாகில் ஸுகமே ஜீவிக்கும்; அதாவது திருத்துலைவில்லி மங்கலத்தில் கொடுபோகாதே யொழியப் பெறில் இவளைக் கிடைக்கும் என்றார்கள். இவள் ஜீவியா தொழியிலும் திருத்துலையவில்லிமங்கலத்தில் கொடு போகா தொழியவல்ல குடியன்றே! இவள் அங்கே புக்கு முடியவமையும் என்றிருப் பார் சிலரிறே. பிராட்டி வநவாஸரஸ மநுபவியாத வன்றிறே இவள் திருத்துலைவில்லி மங்கலத்தில் புகாதொழிய வல்லளாவது" என்று.

இப்படிப்பட்ட மிக வீறு நடைபோடும் பேருரையின் கருத்தையே சுவாமிகள் தம் **தீபிகையுரையிலே** விளக்கமாகவும், தெளிவாகவும், எளிய நடையிலும் உரைத்திருப்பதைக் கீழே காண்போம்.

"ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் (ஸீதை) பிறந்தபோது சோதிடர்களை வரவழைத்து 'இவளுடைய அத்ருஷ்ட பாகங்கள் (எதிர்காலம்) எப்படியிருக்கிறது? சொல்லுங்கோள்' என்று தாய் கேட்க; சோதிடர்கள் பார்த்து 'இவளுடைய பாக்கியம் மிக நன்றாயிருக்கிறது; ஒரு குறையுமில்லை. ஸார்வ பௌமனுயிருப்பானொருவனுக்கு மனைவியாக வாழ்க்கைப் பாடுவள்; ஆனால் ஒரு கண்டமுண்டு—(அதாவது) வநவாஸம்

அநுபவிக்க நேரும் என்றார்களாம். அப்படியே, நம்மாழ்வா ராகிற பராங்குச நாயகி பிறந்தபோதும், இவளது திருத் தாயார் முதலானோர் சோதிடர்களையழைத்து பாக்கிய(பேறு) விசேஷங்களைப்பற்றி விசாரிக்கையில் அவர்கள் சொன்ன தாவது 'எல்லாம் நன்றாகவே இருக்கிறது' 'இவள் உயர்வற வுயர் நலமுடையவனை அயர்வறுமமரர்களதிபதியால் மயர்வற மதிநலமருளப் பெறுவள்; இவள், உலகம் நிறைந்த புகழ் பெறுவள். தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலை கள் சொல்லுவள்' என்று இங்ஙனே பலவும் சொல்லிவிட்டு, ஆனால் இவளுக்கு ஓர் கண்டமுண்டு; அது என்னென்னில்; இவள் துலைவில்லிமங்கலத்திலே ஈடுபடும்படி நேரும்; அது இவளுக்குப் பெரிய கண்டமாகவே முடியும்; அது தப்பினால் சுகமே வாழலாம்' என்றார்களாம். சோதிடர்கள் ஸீதா பிராட்டிக்குச் சொன்ன கண்டமும் தப்பிற்றில்லை; ஆழ்வாருக் குச் சொன்ன கண்டமும் தப்பிற்றில்லை. ஸாமான்ய த்ருஷ்டி (ஸாதாரணப் பார்வை) யாலே இவை கண்டமென்னத் தகுமே அல்லது விசேஷ த்ருஷ்டி (தனிப்பார்வை)யாலே இவையிரண்டும் பெரும்பேறு என்னப்படுமன்றோ, பிராட்டி வநவாஸம்புக்கு ''தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்'' ளென்று திருவாய்மொழியாலும் ''இதிஹாஸ ச்ரேஷ்டமான (மிக உயர்ந்த) ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றம் சொல்லுகிறது'' என்று ஸ்ரீவசனபூஷணத்தாலும் லோகோத் தரமாகக் கொண்டாடப்பட்டாள். ஆழ்வாரும் துலைவில்லி மங்கலத்தில் புகுந்து மிக்க பெரும்புகழ் பெற்றார்.''[30]

மேலும் நம்பிள்ளையின் உரையைக் காட்டிலும் சுவாமியின் உரை எளிதாகப் பாமரர்கள் புரிந்து கொள்ளும் இயல்பினைப் பெற்றுள்ளது.

திருவாய்மொழியின் (2. 4 0.) அவதாரிகையில் ஈட்டிலுள்ள ''காசை யிழந்தவனுக்கும், பொன்னை யிழந்தவனுக்கும், ரத்நத்தை இழந்தவனுக்கு மொத்திரா திறே க்லேசம்'' என்னும் வரியின் பொருளைத் திவ்யார்த்த தீபிகை உரையின் வாயிலாகத் தெளி வோமிங்கு.

''ஒருவன் ஒருநாள் ஒரு வெள்ளிக்கட்டியை இழந்து விடுகிறான்; அப்போது ஒரு ஆர்த்தி (துன்பம்) யுண்டு; அவனே

30. தானே எழுதிய தன் சரிதை, ப. 77-78

மற்ருெருநாள் ஒரு பொன்கட்டியை இழந்து விடுகிருன்; அப்போது உண்டாகிற ஆர்த்தி முன்னிலும் விஞ்சியதாகும். அவன்ருனே மற்ருெரு நாள் ஒரு சிறந்த ரத்நஹாரத்தை (மாணிக்க மாலையை) இழந்து விடுவாஞயின் அப்போது உண்டாகிற ஆர்த்தி அறவிஞ்சியதாயிருக்கும்; இழக்கப் படுகிற பொருளுக்குத் தக்கவாறு ஆர்த்தியின் தன்மை இருக்கு மென்று இதனல் தேறுகிறது.''[31]

மேலே குறிப்பிட்ட ஈட்டுவரியைப் படித்த மட்டில் பொருளின் ஆழ்ந்த தன்மை புலனுகாது. சுவாமியின் தீபிகை உரை கொண்டு தெளிவதே சிறந்த வழியாகும்.

மற்ருெரு இடத்தில் நம்மாழ்வாரின் துன்ப நிலையைப் படிப் படியாக உணர்வோம்:

திருவாய்மொழி (8-2-2) பாசுரத்தின் ஈட்டு உரையில் ''வேண்டிற்றெல்லாந்தரும் என்கிற இடத்தில் உக்திமாத்ரமே' என்ருெரு தமிழன் நிர்வஹித்தான்'' என்று நம்மை ஊகிக்க விடுகிருர். உரையாசிரியர் கவிலிச் செல்வமும் செவிச் செல்வமும் பெற்ற சான்ருேர்களல்லது இவ்வரியின் பொருளை அறிந்து தெளிவது மிகவும் அரிது. இதை உய்த்துணர்ந்தே நம் சுவாமிகள் தம் தீபிகையுரையில் எளிய நடையில் தெளிவு பெற வெளியிட்டுள் ளார்; ஈண்டு அதைக் காண்போம்.

''வேண்டிச் சென்றென்று பெறுகிற்பாரில்
என்னுடைத் தோழியர் நுங்கட்கேலும்
ஈண்டி துரைக்கும்படியை யந்தோ
காண்கின்றிலேனிட ராட்டியேன் நான்

என்னும் பாசுரத்திற்கு உரையாசிரியர்கள் மூவகையாகப் பொருள்கள் கூறுகின்றனர். மூன்ருவதான பொருள்தான் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு சுவாமியின் தீபிகை யுரை நமக்கு அப்பொருளைத் தெளியவைக்குமிங்கு.

...... 'வேண்டிச்சென்று ஒன்று பெறுகிற்பார் இல்' என்று பதம் பிரித்து, அப்பெருமானிடஞ் சென்று ஒன்று வேண்டிப்பெற நினைந்தவர்களில் அது பெற்ருரில்லை; வேண்டிற்றெல்லாந் தரும்

---

31. திவ்யார்த்த திபிகை, திருவாய்மொழி (2-4-0) ப. 32, 1974.

வள்ளல்'' என்று விணைப்ரஸித்தியே(புகழே) யொழிய அவனிடம் பெற்றதில்லை என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

இல் — இலர் என்றபடி

அந்தோ —''நீங்கள் கேளாவிட்டாலும் நானே சொல்லியாகிலும் ஒருவாறு ஆற்ற வேண்டியிருக்க, வாய் திறந்தொன்று சொல்ல வொட்டுகிற தில்லையே நான் படுமிடர், ஐயோ என்கிறாள்''

என்பதாகும்.[32]

**அன்போடு அழகிய மணவாளச் சீயர்**
**பின்போரும் கற்றறிந்து பேசுகைக்காத் — தம்பெரிய**
**போதமுடன் மாறன் மறையின் பொருளுரைத்தது**
**ஏதமில் பன்னீரா யிரம்**

(உபதேசரத்தினமாலை 45)

என்று அழகிய மணவாளச் சீயரைப் பற்றியும் அவருடைய உரையின் பெருமையையும் கடைக்குட்டி ஆசாரியரான மணவாள மாமுனிகள் தம் உபதேசரத்தின மாலையில் பணித்துள்ளார். அவ்வாறு சுவாமிகளும் பதவுரையாகவும் உள்ளுறை பொருளாகவு மாகிய சிறந்த நெறியினைப் பிடித்துத் தம் உரையை வெளியிட்டுள் ளார். அழகிய மணவாளச் சீயரின் நடை சுவாமியின் பதவுரையில் காண்பது போல இருப்பினும் வேற்றுமைகள் மிகவும் உண்டு பன்னீராயிரப்படி உரைகாரர் பொதுவாகத் தமிழ்ச் சொல்லுக்கு வடசொல்லும், வடசொல்லுக்குத் தமிழ்ச் சொல்லும் புணர்த்து வது அவர்தம் தனித்தன்மையாக விளங்குகிறது. ஆயினும் பெரும் பாலும் வட மொழியைக் கைக் கொண்டே தம்முடைய உரையை இயற்றியுள்ளார். அவருக்கு எதிர்மாறாக சுவாமி வட சொல் மிக்குப் பெய்யாமல் தமிழிலேயே உய்த்துணருமாறு செய்யும் தன்மை அவருக்கேயுள்ள தனித்திறமையை வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு பாசுரங்கட்கும் இலக்கணக்குறிப்புக்களைக் காட்டு கிறார் சுவாமி. அவற்றில் சில இடங்களைச் சான்றுகளுடன் கீழே காண்போம்.

**''சிறியாயோர் பிள்ளையுமாய் உலகுண்டோராலிலை மேல்**
**.. ........................................ நறையூர் நின்ற நம்பியோ!''**

(பெரிய திரு 7,2,4,)

32. திவ்யார்த்த தீபிகை 2nd edi, ப 18, 1953,

இங்கு, சிறியாயோர் பிள்ளையுமாய் = மிகச்சிறு குழந்தையாய் என்பது பொருள்.

சிறியாய் = 'சிறுமை என்னும் பண்புப் பெயரில் மை விகுதிகெட்டு, 'று' என்பதிலுள்ள உகரம் சிகரமாகத்திரிந்து, சிறுமையென்னும் பொருளையே காட்டும். ஆய என்பது ஆய் எனத்தொக்கு நின்றது[33]

**தனிநெஞ்சம் முன்னவர் புள்ளே கவர்ந்தது தண்ணந்துழாய்க்**
**கினிநெஞ்ச மிங்குக் கவர்வது யாமிலம் நீநடுவே**
**முனிவஞ்சப் பேய்ச்சி முலை சுவைத்தான் முடிசூடுதுழாய்ப்**
**பனிநெஞ்ச மாருதமே எம்மாதவி பனிப்பியல்வே.''**

(திருவிருத்தம் 4)

''இப்பாட்டில் எம்பெருமானை யுத்தேசித்து முதலடியில் 'அவர்' என்று பன்மையாகச் கூறி மூன்றாமடியில் 'முலை சுவைத்தான்' என்று ஒருமையாகக் கூறினது வழுவாகாதோவெனின்; ஆகாது. வழுவமைதியாம்; ஒருமைப் பன்மை மயக்கம். எம்பெருமான் பிரிந்துபோன படியைக் கருதிக் கோபம் தோற்றுமாறு முதலில் 'அவர்' என்று உயர்த்திக் கூறினாள்; அப்பெருமான் முன்பு செய்த (பூதநா நிரஸநமாகிற) உபகாரத்தைக் கருதிக் கோபம் தணிந்து மூன்றாமடியில் 'சுவைத்தான்' என இயல்பாக ஒருமையாற் கூறினாள் என்க.[34]

**காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில் இந்நாள்**
**பாண் குன்றநாடர் பயில்கின்றன இதெல்லா மறிந்தோம்**
**மாண் குன்றமேந்தி தண்மாமலை வேங்கடத்தும்பர் நம்பும்**
**சேண் குன்றஞ் சென்று பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே**

(திருவிருத்தம்-8)

'குன்றமேந்தி' என்பதில் 'ஏந்தி' என்றது வினையெச்சம் அன்று; 'இ' என்னும் கருத்தாப் பொருள் விகுதி பெற்ற பெயர்ச் சொல்; ஆனது பற்றியே 'ஏந்தித்தன்' என இரட்டிக்கவில்லை; உயர்திணைப்பெயரின்முன் வலி இயல்பு.

உம்பர் நம்பும் வேங்கடத்துச் சேண்குன்றம் — எல்லாவுலங்களுக்கும் மேற்பட்டதான பரமபதத்திலுள்ள நித்ய ஸூரிகளும் விரும்பி விரைந்து வந்து தொழுவதற்கு ஸமீபமாம்படி உயர்ந்ததும்

---

33. திவ்யார்த்த தீபிகை. பெரியதிருமொழி 3rd edi ப. 92, 1956.
34 திவ்யார்த்த தீபிகை. திருவிருத்தம் 6th edi ப. 15, 1976.

சிறந்ததுமாயுள்ள திருமலைச் சிகரம் என்றபடி பரமபதத்தில் தாங்கள் அனுபவிக்கிற பரத்வகுணத்திற்காட்டிலும் திருமலையில் எம்பெருமான் அனுபவிக்கிற ஸௌலப்ய ஸௌசீல்ய குணம் சிறந்ததென்று அங்குள்ளார் இவ்விடத்தை விரும்புவரென்க.

'நம்பும் மேவும் நசையாகும்மே' — என்பது தொல்காப்பியம் — 'மலையேறி எலி பிடிக்க வேண்டி என்னைப் பிரிந்து போகக் கருதுகின்றீரோ?. என்ற பரிஹாஸமும் இதில் தொனிக்கும்[35]

திண்பூஞ்சுடர் நுதி நேமியஞ் செல்வர் விண்ணாடனைய
வண்பூ மணிவல்லி யாரே பிரிபவர் தாம் இவையோ
கண்பூங் கமலங் கருஞ்சுடராடி வெண்முத்தரும்பி
வண் பூங்குவளை மடமான் விழிக்கின்ற மாயிதழே

(திருவிருத்தம் 9)

'யாரே' என்றதில் யார்' என்ற வினா எதிர்மறை குறித்தது; ஏகாரம் வாக்கியாலங்காரம். முத்து-முத்துப் போன்ற கண்ணீரைச் சொல்லுதலால் உவமையாகு பெயர்

'மான் விழிக்கின்ற' என்றது மான்போல் விழிக்கின்ற என்று பொருள் படுதலால் உவமைத் தொகை. விழிக்கின்ற அன் சாரியை பெருத பலவின்பால் முற்று; விழிக்கின்றன என்றபடி.

'மாயிதழ்' என்பதில் மா என்பது உரிச் சொல்லாதலால் அதன் முன் யகரந்தோன்றிற்று. 'இடையுரி வட சொலின் இயம்பிய கொளா' தவும்'' (நன்னூல்) என்ற புணரியல்களுக்குப் புறனடைச் சூத்திரம்.[36]

சிறிய திருமடலில்,

'செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு' என்னும் வரிக்கு ஆசிரியர் கூறும் எடுத்துக்காட்டு:

'நறுமாலைச் சாத்தற்கு' என்று பாடமோத வேண்டியதை விட்டு 'நறுமாலை சாத்தற்கு' என்று தப்பான பாடம் ஓதி வந்தனராகையால் இவ்வாக்கியத்தின் பொருளை உள்ளபடி அறியா தொழிந்தனர் பலர்; 'சாஸ்தா' என்ற வடசொல் 'சாத்தன்' எனத்திரிந்து கிடக்கிற தென்பதையறியாமல் ''செங்

35. திவ்யார்த்த தீபிகை, திருவிருத்தம், 6th edi ப 24, 197
36. திவ்யார்த்த தீபிகை திருவிருத்தம் 6th edi ப. 26 1976

குறிஞ்சித் தாரார் நறுமாலை சாத்திக் கொள்கிறவனுக்கு" என்று கற்றறிந்த பல பெரியோர்களும் பொருள் சொல்லக் கேட்டிருக்கிறோம் அங்ஙனமன்று.

செங்குறிஞ்சித் தாரார் நறுமாலையையுடைய (சாத்தற்கு) சாஸ்தா என்று பிரஸித்தமான (புகழ் பெற்ற) தேவதாந்தரத்திற்கு என்று உண்மைப் பொருளாம்.

சாத்தான் + கு = சாத்தற்கு. இவ்வகைப்பொருளில் "மாலைச் சாத்தற்கு" என்றே பாடமோதவேண்டும் என்கிறார் சுவாமி. அமர கோசத்தில் "ஸர்வஜ்ஞஸ்ஸுகதோ புத்த:" என்று தொடங்கி "முநீந்த்ர: ஸ்ரீ கநச் சாஸ்தா" என்று புத்த தேவதைக்குப் பெயர்கள் படிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்

பெரியவாச்சான் பிள்ளைவுரையில் ஒரு'திருத்துழாய் பரிமாறுத தேவதையாக வேணுமோ? என்கை' என்று மட்டுமேயுள்ளது. திருப்பாவையில்

"செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்" என்றுள்ளது.

"தீக்குறளைச் சென்றோதோம்" என்னும் பாடம் தவிர்க்கக் தக்கது, இங்குக் குறள் என்று சொல்வடிவமன்று குறளையென்றே சொல்வடிவம் சந்தியில் இரட்டிப்பு வராது, இயல்பேயாம். கோட் சொல், நிந்தை, வம்புப் பேச்சு, பொய்யுரை இவற்றுக்குத் தீக் குறளை யென்று பெயர்" என்று சுவாமி விளக்கந் தருகிறார். பெரிய திருமொழியில் (3-4-2)

"நான்முகனுள் மிகைத்தருக்கையிருக்கு வாய்மை"

என்றுள்ளது. "மிகத் தருக்கை' என்று பலர் பாட மோதுவ ரேனும் அது ஒவ்வாது; 'மிகைத்தருக்கை' என்றே ஓதுக."[37], மிகையாவது ஆதிக்யம். அதனாலுண்டான தருக்கு—செருக்கு, என்று பல பிழைகளைத் திருத்திப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இதற்குக் காரணம் வடமொழி, தென்மொழிகளை நன்குக் கசடறக் கற்றதனாலும் "பெரியார்க் காட்பட்டக் கால் பெறுத பயன் பெறு மாறு" என்ற திருவாய்மொழிக் கிணங்க சுவாமிகள் தம் முன்னோர் களிடம் அடிபணிந்து செவிச் செல்வத்தை அளவில்லாமல் பெற்ற தனாலுமேயாகும்.

---

37. திவ்யார்த்த தீபிகை, பெரியதிருமொழி 3-4-2. 2nd, Vol ப. 412, 1929



அரையர் சேவை (ஸ்வாமி)

தாம் வெளியிடும் நூல் ஒவ்வொன்றும் உபந்யாஸம் செய்ப வர்களுக்கு மிகவும் உதவியாக இருத்தல் வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையை உடையவர் சுவாமிகள். அவர் தாமே ஒரு சமயம் "இன்றைக்கு உபந்யாஸம் செய்யும் வித்துவான்கள் பலர் என்னுடைய புத்தகங்களைப் படித்து அவற்றையே உபந்யாஸம் செய்வதாக எனக்கு எழுதுகிறார்கள். அவர்களையெல்லாம் எனது சிஷ்யர்களாகக் கொள்ளலாம்"[38], என்று கூறியுள்ளார்.

## சென்னை உபந்யாஸ சபையால் ஈடுபடுதல்

சுவாமியின் வாழ்க்கையில் உபந்யாஸம் செய்யும் பணி முக்கியமான நிகழ்ச்சியாக, தம் பதினேழாவது வயதிற்கு முன்பே இடம் பெற்றிருந்தது. இவ்வுபந்யாஸங்கள் காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயிலிலும், சொன்னவண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி) கோயிலிலும், நம்மாழ்வார், மணவாள மாமுனிகள் ஸந்நிதிகளிலும் நடைபெற்று வந்தன. அவருடைய உபந்யாஸத்தை விரும்பிக் கேட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஆகவே எல்லா விழாக்காலங்களிலும் (உத்ஸவங்கள்) அவர் தம் சொற்பொழிவை இனிதே நடத்தி வந்தார்.

சுவாமி தோற்றிவைத்த 'வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலை, 1930 ஆம் ஆண்டு வரை எவ்விதக்கவலையுமின்றி நன்கு நடந்து கொண்டிருந்தது. பாடசாலையின் நிருவாகத்திற்கும் செலவுகளுக்கும் நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவர் 1920 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை உதவி வந்தார். அந்தச் செட்டியார் காலத்திற்குப் பிறகு நிலையான 'வருமானமின்றிப் பாடசாலை இன்னலுக்குட்பட்டது. வட நாட்டில் பல செல்வந்தர்களை அணுகியும் பயனில்லாது வருந்திய போதில் திருவாளர் கோவிந்தசாமி நாயுடு சகோதரர்கள் தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற முயன்றனர். சுவாமியை நிலையாகச் சென்னையில் இருத்தி அவருடைய உபந்யாஸங்களைப் பரப்ப எண்ணங் கொண்டிருந்தனர் அச்சகோதரர்கள். அவருடைய சொற்பொழிவுகளை நகரமெங்கும் பரவச் செய்து அதன்மூலம் வரும் வருவாயைப் பாடசாலையின் நிருவாகத்திற்குச் செலவிட வழிவகுத்தனர். இவர்கள் தம் எண்ணங்களை சுவாமியினிடத்தில் தெரிவித்தனர். அவை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருப்பினும் காஞ்சி பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளுக்குச் செய்யும் கைங்கர்யத்தை இழக்க நேருமென்று எண்ணி சுவாமி அந்தகர

38. அ—6.

வாழ்க்கையை ஏற்க மறுத்தார். இறுதியாக அந்தச் சகோதரர்கள் வாரம் இருமுறை அதாவது சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அவருடைய உபந்யாஸங்களை நிகழ்த்தும்படி சுவாமியைக் கேட்டுக் கொண்டனர். ஒருவாறு அவ்வேண்டுகோளுக்கிசைந்து சுவாமி சனிக்கிழமைகளில் மாலையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலையிலுமாக உபந்யாஸம் செய்து வந்தார். 1931 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில் சென்னை உபந்யாஸ ஸபையில் ஈடுபாடு தொடங்கியது. இந்த ஈடுபாடு சென்னையிலும் மற்றும் பற்பலவிடங்களிலும் உயர்ந்த பதவிகளில் வாழும் பெரியார் பலரின் அருளையும் ஆசிகளையும் பெருமதிப்புக்களையும் பெறவித்திட்டது.

சுவாமியின் உபந்யாஸ வளர்ச்சியில் முக்கியப் பங்கு கொண்டவர்கள் ஸ்ரீமான்கள் எஸ் வரதாசாரியர் (நீதிபதி) ஸ்வாமி, மஹர்ஷி வாஸுதேவாசாரிய ஸ்வாமி, மேற்சொன்ன இரு சகோதரர்கள், எம் ஸுதர்சனமையங்கார் ஸ்வாமி ஊ. ரா. ஸ்ரீராமுலு செட்டியார் அவர்கள், திருவாளர்கள் டி. எஸ் நடேச சாஸ்திரியார் (வழக்கறிஞர்) அவர்கள், A ஷண்முக ஸுந்தர முதலியார் அவர்கள் (சென்னை B K P சபாவின் தலைமைச் காரிய தரிசி) ஆவர்.

1934 ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்த 'வேதாந்த தீபிகா' என்னும் மாத இதழில் ஸ்ரீமான் வாஸுதேவாசாரிய சுவாமிகளின் குறிப்பினைக் கீழே காண்போம்: —

"பிரதிவாதி பயங்கரம் அண்ணனுடைய ஸந்ததியில் தோன்றியவரும் அந்தத் திருவம்சத்திற்கு ஏற்ற ஞான அனுட்டானங்கள் நிரம்பப் பெற்றவரும் காஞ்சி நகரத்தில் எழுந்தருளியிருப்பவரும் நாடெங்கும் பரவிய நற்புகழ் பெற்றவருமான ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களும் அவருடைய கல்வித்திறத்திலும் உபந்யாஸ சைலியிலும் க்ரந்தலேகந வைகரியிலும் ஈடுபடாதவர்களும் பெரும்பாலும் இருக்கமாட்டார்களென்றெண்ணுகிறேன். இந்த ஸ்வாமி ஸம்ஸ்கிருத பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் இயற்றி வெளியிட்டிருக்கின்றவும் நாளைக்கும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றவுமான பற்பல அரும்பெரும் நூல்களினால் இவருடைய உபயபாஷா ப்ராவீண்யம் ஒப்பற்றதென்பது உலகறிந்ததாகும் ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளிலும் ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளிலும் அநேக பாகங்களுக்கு இந்த ஸ்வாமியின் அருமையான வ்யாக்கியானங்கள் வெளி வந்து பண்டிதர்கள் பாமரர்களென்கிற

வாசியில்லாமல் எல்லோருக்கும் மிகப் பயன்பட்டுக் கொண்டிருப்பது பற்றி நாம் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. தவிரவும் ஸ்ரீ காஞ்சியில் வேதவேதாந்த வைஜந்தீ என்கிற ஸம்ஸ்கிருத பாடசாலையை ஸ்தாபித்து அதன் மூலமாகப் பல ஸ்ரீவைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு உபயவேதவேதாந்த ப்ரவசந கைங்கர்யத்தை ஆச்சரியமாக இந்த ஸ்வாமி நடத்தி வருகின்ற விசேஷமும் ப்ரஸித்த மானதே.................................
1931 ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமி இந்த ஸபையில் (பகவத்கதாபிரசங்க சபா) உபந்யாஸங்கள் செய்தருள வரவழைக்கப் பட்டார்.

1931 ஷ ஆகஸ்டு மாதத்தில் ஸ்வாமி ராமாயண உபந்யாஸம் நடத்த ஆரம்பித்தார். புஸ்தகம் வைத்துக் கொள்ளாமலும் குறிப்புகளுமில்லாமலும் கங்கா ப்ரவாஹம் (கங்கைப்பெருக்கு) போல் ஸ்வாமி ஸாதித்துவரும் உபந்யாஸங்களைக் கேட்டு அதிசயப்படாதவர்கள் யாருமில்லை. வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், பிள்ளைப் பெருமாளையங்கார் பாடல்கள் திருக்கோவையார் முதலான தமிழ்க்கிளவி நூல்கள் காவ்ய நாடக அலங்கார ச்லோகங்கள் ஸகல ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் ச்ருதி இதிஹாஸ புராணங்கள் ஆகிய இவ்வளவையும் இனிமையாகப் பொழிந்து கொண்டு ஸ்வாமி நிகழ்த்தும் உபந்யாஸங்கள் மிகவும் அருமையானவை இப்படிப்பட்ட அமைப்புடன் ஸ்ரீராமாயண விசேஷார்த்த உபந்யாஸம் இதுவரை எங்கும் கேட்டதில்லையென்றே பலரும் அபிப்பிராயப் படுகிறார்கள் ..........................................................................
............................ ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய ஹம்ஸ ஸந்தேச காவியத்தின் ஸாரப்பொருள் இரண்டு உபந்யாஸங்களில் வெகு ரமணீயமாக எடுத்துரைக்கப்பட்டது.....................
............சனிக்கிழமைகளில் மாலை 6 மணி முதல் 8மணி வரையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் இவ்வுபந்யாஸங்கள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வாரம் விடுமுறையாகும். கீழ் நடந்த மூன்று வருஷங்களிலும் மார்கழி மாதத்தில் முப்பது நாளும் திருப்பாவை விசேஷார்த்த ஸ்வாபதேசார்த்த அந்யாபதேசார்த்த உபந்யாஸங்கள் வெகு அருமையாக ஸ்வாமியால் நடத்தப்பட்டன. உபய பாஷையிலும் ஸகல க்ரந்தங்களிலும் உபய வேதாந்தங்களிலும் மிகவும் பாராட்டத் தகுந்த வல்லமை பெற்று ஆங்காங்குப் பொருத்தமான மேற்கோள்களை விளக்கிச் சிறியவர்களுக்கும் நெஞ்சில் நன்கு பதியுமாறு எளிதாகவும் அழகாகவும், கம்பீரமாகவும் அமுத மொழிகளை

அளித்து வருகின்ற அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் இப்படியே பல்லாண்டு பல்லாண்டாக எழுத்தருளியிருந்து உலகினரை உய்விக்கவேண்டுமென்று எம்பெருமானைப் பிராத்திக்கின்றேன்''[39]

சுவாமி எம்மதத்தவரும் விரும்பிக் கேட்கும்படி உபந்யாஸங்களை நிகழ்த்திவந்தார். அனைவரும் விரும்புமாறு உபந்யாஸங்களை நிகழ்த்த வழிவகுத்தவர் திருவாளர் டி. எஸ். நடேச சாஸதிரி என்பவர். இவர் பகவத் கதா பிரசங்க சபா (B.K.P. சபா)விற்குத் துணைத் தலைவராகப் (Vice—President) பணியாற்றி வந்தார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்கிப் பரந்த மனத்துடன் சுவாமி ஒருவர் மனமும் கோணாது சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார்.

ஒருமுறை சபையில் திருமழிசைப் பிரானின் வரலாற்றைப் பற்றிச் சொல்லிவந்தார். அதைக் கேட்ட சாஸ்திரி அவர்கள் ஓரிரு வாரங்கள் உபந்யாஸங் கேட்பதற்கு வராமலேயிருந்து பிறகு வரத்தொடங்கினர். அவ்வாறு அவர் மீண்டும் வரத் தொடங்கிய காலத்தில் தனியாக சுவாமியை அழைத்து,

> "திருமழிசையாழ்வார் சரித்திரத்தை ஏற்கனவே நான் கேளாதவனல்லேன்; என்னுடைய தமையனர் புஞ்சாபகேச சாஸ்திரியாரென்பவர் ஹரிகதா காலஷேப நிபுணர். இதே தொண்டமண்டலம் ஸ்கூல் ஹாலில் அவரும் திருமழிசையாழ்வார் சரித்திரத்தை ஹரிகதா காலக்ஷேப முறையில் நாலைந்து தடவை சொல்லக் கேட்டிருக்கிறேன். பண்டிட் லக்ஷ்மணசார் அவர்களிடத்திலும் கேட்டிருக்கிறேன். அவர்கள் சிவபெருமானைப் பற்றிச் சிறிது குறைவாகச் சொல்ல நேருமிடங்களில் பாட்டுக்களைப் பாடித் தளுக்காகப் போய் விடுவார்கள். தாங்கள் கற்பனையாக வொன்றும் சொல்லவில்லையென்பதும், உள்ளதையே சொல்லியிருக்கிறீர்களென்பதும் எனக்குத் தெரியாமையில்லை. ஆனாலும் என்னைப் போன்ற சைவப்பற்று உள்ளவர்களும் பலர் இங்கு வந்து ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருப்பதால் எங்களைத் தலை தொங்காதபடிக்குப் பேசினல் நலமாயிருக்குமென்று ஸன்னிதானத்தில் விஜ்ஞாபனம் செய்து கொள்ளுகிறேன்."[40]

---

39. தானே எழுதிய தன் சரிதை, ப. 162-163.
40. தானே எழுதிய தன் சரிதை ப. 167

என்று கேட்டுக்கொண்ட பிறகு 'பொய்யிலாத மணவாளமாமுனி' என்று குலாவப்படுகின்ற மாமுனிகளின் திருவுள்ளப்பாங்கினை சுவாமி நினைவுப்படுத்திக் கொண்டு அவருடைய வழியிலேயே உபந்யாஸங்களை நிகழ்த்த உறுதிகொண்டார். திரு நடேச சாஸ்திரி அவர்கள் சுவாமியைப் பற்றி ஆங்கிலத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

> **"Although our Swamigal is born in an ardent exponent of the Sri Vaishnava Sampradayam he has absolutely no prejudice against others. In fact, the Swamigal's habit is to deliver upanyasams which would be liked and eagerly enjoyed by people of all sects. I believe that the present publication will be greatly useful in making us understand the esoteric Thathvas of Sri Vaishnava Sampradayam. Bhaktas are aware that any number of such books cannot do full justice to the Swamis upanyasams. It is to be hoped that by the grace of God, several such books will come out in the future. Our Swamigal also should have the full span of life and glorify our Sabha for a long time. Bhagavad Bhakthi and Bhagavatha Bhakthi should increase and Dharma should get firmly by established. This is my humble prayer."**

ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு :

> "நமது ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் தோன்றி அந்த ஸம்ப்ரதாயத்தையே ப்ரவசனம் செய்பவரானாலும் இதர ஸம்ப்ரதாயங்களில் பகையோ பழிப்போ, சிறிதும் உடையவரன்று; எல்லா மதத்தினர்களும் விரும்பி ஆவலோடு கேட்கும்படியான உபந்யாஸங்களையே ஸ்வாமி செய்வது வழக்கம். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலுள்ள மருமமான தத்துவங்களை யுணருவதற்கு ஸ்வாமியின் நூல்கள் மிகவும் உபயோகமானதென்று என்னுடைய நம்பிக்கை. ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் எத்தனைப் புத்தங்கள் வெளியிட்டாலும் முடியாதவையென்பது பக்தர்களுக்குத் தெரியும். பகவத் க்ருபையினால் இப்படியே அநேக புஸ்தகங்களும் மேன்மேலும் வெளிவரவேணும். ஸ்வாமிகளும் தீர்க்காயுள் வாழ்ந்து நீண்ட காலம் நமது சபையைச் சிறப்பிக்கவேணும். உலகில் பகவத் பக்தியும் பாகவத பக்தியும் ஓங்கி தருமமும் நிலைபெற வேணும். இதுவே எனது பிரார்த்தனை"[41]

---

41. தானே எழுதிய தன் சரிதை, ப. 168—169

சென்னையில் சபையின் மூலமாக நடந்த ஸ்வாமியின் உபந்யாஸங்கள் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவை. ஸ்ரீராமாயண உபந்யாஸம் இருமுறை நடைபெற்று பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. ஸ்ரீபாகவதம் இருமுறை நடைபெற்று முடிவடைந்தபின் ஸ்தோத்ர ரத்னம், சதுச்ச்லோகீ, அஷ்டச்லோகீ, அமலனாதிபிரான், திருமந்த்ரார்த்தம், ஆசார்யஹ்ருதயம் பகவத் கீதை, பகவத் விஷயம், ஸ்ரீவசனபூஷணம் முதலிய உபந்யாஸங்களும் வெற்றிகரமாக இனிதே நடைபெற்றன. பொது. உபந்யாஸங்களும் (கைசிக மஹாத்மியம் போன்றவை) ஸ்வாமியால் அவ்வப் போது நடத்தப்பட்டன.

1936 ஆம் ஆண்டிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை வேளையில் பகவத் விஷய உபந்யாஸம் நடத்துவதெனத் தீர்மானம் செய்து, திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு தொடக்கமாகத் திருவாய்மொழி தொடங்கி இடையராமல் நடைபெற்று வந்தது திருவாய்மொழி ஆறும்பத்து திருவேங்கடமுடையானுடைய பாசுரங்களானவையாலே புக்த கோடிகள், திருமலையில் 'உலகமுண்ட பெருவாயா' சாத்துமுறை நடக்கவேண்டுமெனப்பாரித்து, அவ்வண்ணமே திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரின் துணை கொண்டே சாத்துமுறை நடத்தப்பட்டது. இங்கே குறிப்பிடத்தக்கது. இதே போல் ஏழாம்பத்தில் 'கங்குலும் பகலும்' என்னும்பதிகம் திருவரங்கனைப் பாடும் பாசுரங்களானவையாலே ஸ்ரீரங்கத்தில் அவ்வுபந்யாஸ சாத்துமுறை நடந்தேறியது. நாச்சியார் திருமொழி உபந்யாஸத்தின் போதும் ஆண்டாள் பாரித்த

**நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்**
**நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்துபராவி வைத்தேன்**
**நூறுதடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்**
**ஏறுதிருவுடையான் இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ**

(நா. திரு. 9. 6)

என்னும் பாசுரப்படியே எம்பெருமானுர் அப்பாரிப்பை நிறைவேற்றி 'நம் அண்ணரே!' என்று ஆண்டாள் தம் திருவாயினால் அழைக்கப்படும் பெருமையை அடைந்தார். அதே போல் நம் ஸ்வாமியும் ஆண்டாளின் பாரிப்பைப் பூர்த்தி செய்து தம்முடைய திருப்பெயரையும் நிலைநிறுத்திக் கொண்டார்.

## திருப்பாவை உபந்யாஸம்

மார்கழி மாதம் வந்தாலே ஒரு தெய்விக நறுமணம் நாடெங்கும்—ஏன் உலகமெங்கும் கமழ்கின்றதை நாம் கண்ணுரக் களித்துக் கொண்டுதானிருக்கிறோம் தெலுங்கிலும் ஆந்திரர் 'பண்டக நெல' என்றே அழைப்பர். அம்மாதத்தில் தெய்விகச் சிந்தனையே அதிகமாக இருக்கும் இதற்குக் காரணம் கண்ண பிரான் கீதையில் 'மாஸானாம் மார்க்க சீர்ஷோஹம்' (மாதங்களில் மார்கழி மாதமாவேன்) என்று தானே சொன்னதனாலே போலும்!

சென்னையில் ஸ்வாமி உபந்யாஸம் சொல்லுங்காலத்திலிருந்தே மார்கழி மாதத்தில் திருப்பாவை உபந்யாஸம் காலையில் ஓரிடத்திலும் மாலையில் மற்றோரிடத்திலும் நடைபெற்று வந்தது. திருப்பாவையைப் பற்றிச் சிறுவரும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மையில் உபந்யஸிப்பவர் ஸ்வாமி. ஸ்வாபதேசார்த்தம் எனப்படுகின்ற உள்ளுறை பொருளுடன் பலவிதச் சான்றுகளுடன் திருப்பாவையின் பெருமையை ஸ்வாமி எடுத்துரைக்கும் ஆற்றல் இந்த இருபதாம் நூற்றாண்டில் எவர்க்குமில்லை.

இம்மாத உபந்யாஸத்தில் மகுடமாகத் திகழ்வது 'அரையர் ஸேவை' என்பது. அரையர் ஸேவை ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி முதலிய திவ்ய தேசங்களில் இன்றும் நடைபெற்று வருகிறது. மார்கழி மாதத்தில் ஒரு நாள் அரையர் போன்று தலையில்குல்லாய் அணிந்து கையில் தாளத்துடன் பாசுரங்களை அபிநயம் பிடித்து தேவகானத்தில் பாடுவது கண்கொள்ளாக்காட்சி. அக்காட்சியைக் காண்பதற்காக 'அரையர் ஸேவை எப்போது?' 'அரையர் ஸேவை எப்போது?' என்று யாவரும் கேட்டுக்கொண்டு அனைவரும் தவறாமல் உபந்யாஸத்தைக் கேட்க வ்ருவர். இந்த அரையர் ஸேவையின் மூலம் ஸ்வாமி அரையர் பரம்பரையில் பிறக்காத குறையைத் தீர்த்துக் கொள்வதாகத் தாமே கூறியுள்ளார்.

சுவாமி திருப்பாவையில் ஆராய்ச்சிகள் பல நடத்தி உபந்யாஸம் நடத்தியுள்ளார். ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பொருள்களுடனும், கருத்துக்களுடனும், ஸ்வாபதேசம் என்கிற உள்ளுறை பொருள்களுடனும் உபந்யஸிக்க வல்லவர் நம் சுவாமி ஒருவரே தகுதியுடையவர். வேதமனைத்துக்கும் வித்தாகிய திருப்பாவையை வேதத்திலிருந்தும் மற்றும் இதிஹாஸ புராணங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி சுவாமி சொற்பொழிவாற்றும் போது இன்பத்தேன் வந்துபாய அனைவரையும்

மெய் மறக்கச் செய்வர். எம்பெருமானார் பரமாகவும் திருப்பாவையை சுவாமி உபந்யஸிக்க வல்லவர்.

எம்பெருமானார்க்குப் பல சிறப்புத் திருநாமங்கள் உண்டு. அதாவது சுவாமி எம்பெருமானார், உடையவர், ஸ்ரீபாஷ்யகாரர், கோயிலண்ணன் முதலியன. இவற்றுள் தலையாயத் திருநாமம் 'திருப்பாவை ஜீயர்' என்பது.

''மாறன் செந்தமிழ் வேதத்தின் செம்பொருளை நாடோறும் வந்து உரைத்த'' மணவாளமாமுனிகளை ''முப்பத்தாறாயிரப் பெருக்கர்'' என்றும் ''ஈட்டுப் பெருக்கர்'' என்றும் வைணவ உலகம் போற்றி வணங்கி வருகிறது. அதுபோன்று, பலமுறை ஆராய்ந்து திருப்பாவையின் சொற்செறிவையும், பொருட் செறிவையும் நன்கு அறிந்து உலகிற்கும் காட்டித்தந்த சுவாமியை. சுவாமி எம்பெருமானார் திருவுள்ளப்பாங்கிற்கும் நம்பிள்ளையின் திருவுள்ளக் கிடக்கைக்கும், மணவாளமாமுனிகள் திருவுள்ள உகப்பிற்கும் பொருத்தமாக சுவாமி ஆற்றிவரும் பெருந் தொண்டுக்கு ஸ்ரீவைஷ்ணவ உலகம் செய்யக்கூடிய கைம்மாறு தான் என்னே! உடையவரின் சிறப்பு திருநாமமான திருப்பாவை ஜீயர் என்னுமதில் '**திருப்பாவை**' என்ற சொல்லையும், நம்பூர் வரதராஜாசாரியரின் சிறப்புத் திருநாமமான நம்பிள்ளையின் திருப்பெயரில் '**நம்**' என்ற சொல்லையும், மணவாளமாமுனிகளின் சிறப்புத் திருநாமமான '**ஈட்டுப் பெருக்கர்**' என்னுமதில் '**பெருக்கர்**' என்ற சொல்லையும் ஒன்று சேர்த்து சுவாமியை '**நம் திருப்பாவைப் பெருக்கர்**' என்று கொண்டாடுவதே மிகவும் பொருத்தமாகும்.''[42]

ஸ்வாமி வெளியிட்ட இறுதி நூல் ''ஹாஸ்யக் கதைகளும் பக்திக் கதைகளும்'' என்பது. இந்நூல் 1983ஆம்ஆண்டு மே திங்களில் நாற்பது கதைகளைக் கொண்டு வெளிவந்தது. இந்நூல் உபந்யாஸம் செய்கின்றவர்களுக்கு மிகவும் பேருதவியாக உள்ளது.

## அண்ணங்கராசாரிய சுவாமிகளின் இறுதிக்காலம்

அயராது உழைத்த அண்ணங்கராசாரிய சுவாமியின் திருமேனியில் தளர்ச்சி அதிகமாகி (தாம் செய்யும் கைங்கர்யத்திற்கு இடையூறு வருமோ எனக் கருதி)க் கூவிக் கொள்ளுங் காலம் இன்னம் குறுகாதோ'' என ஏங்கியிருந்தார். பரமபதத்தையும்

---

42. ஸ்ரீராமானுஜன் 270, ப. 7—10, 10—2—1971

விரும்பாத அவர் தம் திருமேனியின் இறுதி நிலைமையை எண்ணி எம்பெருமானின் திருவருளை எதிர்பார்த்திருந்தார்.

21—6—1983 அன்று, இந்த நாடறிய மாறன்மறைப் பொருளை நன்குரைத்த ஈடுமுப்பத்தாறுயிரத்தை வெளிப்படுத்திய வடக்குத் திருவீதிப்பிள்ளையெனும் ஆசாரியரின் சாத்துமுறை ஆகும். விரைவிலேயே அச்சாத்துமுறையை முடித்துக் கொண்டு வருமாறு தம் சுவீகாரத் திருமகனுர் ஸ்ரீமான் ரங்கநாதசாரியரிடம் பணித்தார். அன்றே திருமாலுக்குப் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் எனும் பெரியாழ்வாருடைய சாத்து முறையுமாகும். 'ஆனிதன்னில் சோதி' நாளாம். காஞ்சீ தேவப்பெருமாள் (வரதராஜப்பெருமாள்) தமக்குப் பல்லாண்டுபாடிய பெரியாழ்வாருக்குப் புள்ளின் மீதேறிக் காட்சித் தந்தார். அவரோடு தமக்கு இந்த இருபதாம் நூற்றுண்டில் பல்லாண்டு பாடிய ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியருக்கும் திருவீதிப் புறப்பாட்டில் ஸேவை (காட்சி) தந்து அந்த ஞானப் பிழம்பைத் தன்னிடத்தே சேர்த்துக் கொண்டு 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம்' என்று பாரித்த நம்மாழ்வாரின் திருவாக்கின்படி சுவாமி தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்து மீண்டும் பரமபதத்தில் தொண்டு செய்ய இந்நிலவுலகை 21—6—1983 அன்று நீத்தார்.

## சுவாமியின் புகழ்

சுவாமி மறைந்த செய்தி காட்டுத் தீபோல் மளமளவென்று வானொலி, தொலைக்காட்சி, நாளேடுகள் முதலிய நவீனக் கருவிகளால் உலகெங்கும் பரவின. அவருடைய பூதவுடல் மறைந்ததேயன்றிப் புகழுரைகள் மலிந்தன. அவருடைய திருமேனியை 'ஆளவந்தார்படி' 'ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம்' ஆகிய ஈமச்சடங்கு வைணவ முறைப்படி ஆயிரக்கணக்கான மக்கள் திரளிலே பெரிய திருவிழாக் கோலம் பூண்டது போல் முடிந்தது.

வைணவ மரபில், மறைந்த பதின்மூன்றும் நாளன்று வேதச் சாத்து, திவ்வியப்பிரபந்தச் சாத்துமுறை முதலியன முறைப்படி நடைபெற்றவுடன் சரம சுலோகமியற்றிஅதை வாசித்தல்வழக்கம்.

சரம சுலோகம் என்பது—ஒருவர் மறைந்த நாளின் கிழமை, திதி, மாதம் ,நக்ஷத்திரம், அவருடைய ஆசான்பெயர், அவருடைய தகப்பனுர் பெயர் முதலியவற்றைக் குறிப்பிட்டு இயற்றப்படும்

வடமொழிச் சுலோகமாகும். இந்தச் சரம சுலோகத்தை சுவாமி தாமே தமக்கு இயற்றியது மிக வியப்பைத் தருவதாகும்.

'தானே எழுதிய தன் சரமகவி' என்னும் தலைப்பின் கீழ்க் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் வித்வான் நரசிம்மாசாரிய சுவாமி இவ்வரலாற்றை 'கீதாசாரியன்' மாத இதழில் வெளியிட்டுள்ளார் அது பின்வருமாறு.

சுவாமி ஆறுமாதத்திற்கு முன்னமே (15—2—82) ஒரு கடிதத்தின் வாயிலாகத் தமக்கு மிகவும் நெருங்கிய நண்பரான பி. பி. (P B) அநந்தாசாரிய சுவாமிக்கு (வழக்கறிஞர்) மற்றை யோரால் நினைத்துப் பார்க்கவும் இயலாதவாறு எழுதியது மிகவும் அற்புதம். சரமசுலோகம் பூர்வார்த்தம், உத்தரார்த்தம் என்று இரு பிரிவாயிருக்கும். இச்செய்தி அப்போது ஓரிருவர் தவிர வேறெவருக்கும் தெரிய வேண்டிய வாய்ப்பில்லை. சுவாமி பரம பதித்தவுடன் ஸ்ரீமான் குன்னப்பாக்கம் வித்வான் தி.அ.வெங்கடா சாரிய சுவாமி சரம கவியை இயற்றியிருந்தார். அது அச்சுக்கூடம் சென்று அச்சாகியும் விட்டது. இவர் இயற்றிய சரமகவி **'ஸ்ரக்தரா'** என்னும் விருத்தத்தில் அமைந்தது ஆனால் சுவாமி தாம் தமக்கு இயற்றியது **'சார்த்தூல விக்ரீடிதம்'** என்னும் விருத் தத்தில் அமைந்திருந்தது. ஸ்ரீமான் வெங்கடாசாரிய சுவாமி செய்த கவிதை அநந்தாசாரியருக்குத் தெரிந்ததாகப் புலப் படவில்லை. அவர்தமக்கு சுவாமி 15—12—82 அன்று எழுதிய ஸ்ரீ முகத்தை (கடிதம்) அஞ்சலில் அனுப்பி வைத்தார். அக்கடிதத்தின் நகல் இதோ:

''ஸ்ரீமதுபயவே P.B.A. ஸ்வாமி திருவடித்தாமரைகளில் அடியேன் P B.A. தாஸன் தெண்டன் ஸமர்ப்பித்துச் செய்யும் விண்ணப்பம். ஒரு ஆச்சர்யமான கனு. திருவல்லிக்கேணியில் ஏதோவொரு புதிய மண்டபத்தில் பெரிய கூட்டம் கூடி யிருக் கிறது. தேவரீர் ஆங்கிலத்தில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் விஷய மாகச் சில லா பாயிண்டுகள் (Law paints) எடுத்துரைக்கிறது. 250 நபர்கள் குழுமியிருக்கின்றார்கள். ஸ்ரீரங்கவாசிகளும் பலர். ஸ்ரீ உ.வே. K. வரதசாரியர் ஸ்வாமி, கோயில் சதாபிஷேகம் ஸ்வாமி முதலானோரும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஒரு ஸ்வாமி கனவேகமாக வந்து ஒரு பெரியவர் பரமபதித்தாகச் சொல்லி திதி, வார, நக்ஷத்ர, கோத்ரங்களைச் சொல்லிச் சரம ச்லோகம் எழுதித் தரவேணுமென்கிறார். சற்றிருக்க, ஆகட்டு

மென்றேன். உடனே யாரோவொருவர் "தேவரீர் ஆயிரம் பேர்களுக்குச் சரமச்லோகம் கொடுத்திருக்கிறது. தேவரீர் பரமபதித்தால் சரமச்லோகம் எழுதுவாரில்லை. அது முன்னே யாகட்டும்" என்கிறார். 'இது என்ன அஸமஞ்சஸம்' என்கிறார் சதாபிஷேகம் ஸ்வாமி. அப்போது நம் வரதாசாரியர் ஸ்வாமி 'பூர்வார்த்தம் வேண்டாம்; உத்தரார்த்தம் மட்டும் சிறிது வேண்டியது தான்' என்கிறார். உடனே அடியேன் 'வாத்ஸ்ய ஸ்ரீ ப்ரதிவாதி பீகரகுமரோர்வம்சோதிதோ அண்ணங்கரா சார்ய: பத்மவிபூஷணோ குருத்ருசா (மேலே) நித்யாம் விபூதிம் என்று சொல்லவிருக்கிறேன் வாயை அடக்கி 'ஸ்வாஸ்த்யம் வரிஷ்டம் பஜேத்' என்று செவிப்பட்டது. இதுயார்சொல்வது என்கிறேன். நம் வரதாசார்யர் குரல் தெரியவில்லையா? 'அடியேன் தான் வரதன்' என்கிறார் கரகோஷத்துடன். கனு முடிந்தது. இதை ஒரு பரமானந்தமாக எண்ணுகிறேன் .இந்த விண்ணப்பத்தை வரதாசார்ய ஸ்வாமிக்கு அவச்யம். காண்பிக்கவேணும்—தாஸன் ப்ர. அண்ணு"[43]

वात्स्यश्री प्रतिवादि भीकरगुरोर्वंशोदितोऽण्णङ्करा
चार्यःपद्मविभूषणो गुरुदृशा स्वास्थ्यं वरिष्ठं भजेत् ॥

மேற்கண்ட கடிதத்திலுள்ள உத்தரார்த்தத்தை அப்படியே வைத்துக்கொண்டு பூர்வார்த்தம் அமைத்துச் சரமசுலோகத்தை வெளியிடுவது [சிறந்தது எனத் தீர்மானித்துப் பூர்வார்த்தம் ஸ்ரீமான் நரஸிம்மாசாரியரால் புனையப்பட்டு மறுபடியும் அச்சுக்குக் கொடுத்தனுப்பட்டது.

## பிற நாளேடுகளிலும் மாத இதழ்களிலும் அண்ணங்கராசாரியசுவாமியின் புகழ்[44]

### ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்திற்கு, குறிப்பாகத் தென்னுசார்ய ஸம்ப்ரதாயத்திற்கு இந்த நூற்றுண்டில் தலை சிறந்த ப்ரவர்த்தக ராகத் திகழ்ந்த ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஆனி மீ 7உ (21-6-83) விசாக நக்ஷத்திரத்தில் பெரியாழ்வார் சாத்துமுறையன்று பரமபதமடைந் தார். ஸ்வாமியின் பலதரப்பட்ட பெருமைகள் உலகமறிந்தவை.

43. கீதாசார்யன், 58 ப. 42, ஜுலை 1983
44. கீதாசார்யன் 58, ப. 16-32 ஜுலை 1983.

"சொல்லின் செல்வர்" "மஹாமஹோபாத்யாயர்" முதலான விருதுகள் அவரை அலங்கரித்துப் பெருமை பெற்றன. ஜனாதிபதி விருதையும் அடைந்தார். பலபாஷைகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் அவர் ஒருவரே. தென்மொழி வடமொழிகளில் நிகரற்ற புலமையும், கவிபாடும் திறனும், உபய வேதங்களையும் பாஷ்யங்களையும் வியாக்யானங்களையும் ஸ்தோத்ரங்களையும் கசடறக் கற்று, கேட்போர் அனைவரையும் பிணிக்கும் பதினாயிரக்கணக்கான உபந்யாஸங்களையும், ஆயிரக் கணக்கான நூல்களையும், அருளியவர் வேறு எவருமிலர் என்பதைச் சபதமிட்டுச் சொல்லலாம்.

## யதிராஜ பாதுகா

மேருமலை சரிந்துவிட்டது; ஒரு மாபெரும் வைஷ்ணவஜோதி மறைந்துவிட்டது. ஆயினும் அந்த ஜோதி பரப்பிய ஒளி இருந்து கொண்டே இருக்கும். ஸ்ரீகாஞ்சீ மஹா வித்வான் மஹாமஹோபாத்யாய ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி இன்று நம்மிடையே இல்லை என்று நினைத்துப் பார்க்கவும் இயலவில்லை. தமது 94 ஆண்டு வாழ்க்கையில் மஹாஸ்வாமி 'நமது பூர்வாசாரியர்கள் யாவரும் அறிந்து வைத்திருந்த யாவற்றையும் இவர் ஒருவரே அறிந்துள்ளனரே!' என்று வியக்கும்படியான ஒரு ஞானஸம்ருத்தியைப் பெற்று தமது பலபல 1276 என்று கணக்கிடப்பட்டுள்ள நூல்களின் மூலமும் எண்ணற்ற தமது ப்ரவசனங்கள் மூலமும் அந்த அறிவொளியை நாமெல்லாம் அநுபவிக்கும்படி வாரிவழங்கக் கொண்டிருந்தார். மணியோசையை ஒத்த அந்தக் குரல் ஒடுங்கி விட்டதை நினைக்க நெஞ்சம் அதிர்கிறது.

## ஸப்தகிரி (ஜூலை 1983)

### சுடரொளி பேரொளியானது

உலகில் செயற்கரிய செயல்களைச் செய்பவர்களைப் பெரியார் என்கிறோம். ஒவ்வொரு பெரியாரும் ஒவ்வொரு துறையிலேயே உயர்ந்து காணப்படுவர். ஆனால் பல துறைகளிலும் உயர்ந்தவர், பல மொழிகளிலும் தெளிந்தவர், பெரியோர் பலரின் ஆற்றல்கள் பலவற்றையும் ஒருங்கே பெற்றவர், கலைகள் பலவும் கைவரப் பெற்றவர் எனப்படும் ஒருவரைக் காணுதல் என்பது அரிது.

அவர்தான் அவனியெலாம் கொண்டாடும் அருங்கலை விநோதராம் அண்ணங்கராசாரியார்.

சுவாமிகள் எவ்வாறு உயர்ந்தார்? 'அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்' என்று வள்ளுவர் வாக்குக்கேற்ப அயராது உழைத்தார். எனவே முயற்சி இவருக்குப் பெருமையைத் தந்தது. நாளொன்றுக்கு ஐந்து மணிநேரம் மட்டுமே உறங்குவாராம்! வரும் கடிதங்கட்குத் தம் கைப்படவே உடனுக்குடன் கடிதம் எழுது வார். தனது இறுதிக்காலம் வரை அதாவது 93 வயது வரை அல்லும் பகலும் எழுதிக் கொண்டும் படித்துக் கொண்டும் இருந்த அவரின் உழைப்புத் திறனை என்னென்பது! இவர் பண்பின் உறை விடம், பழகுதற்கு எளியவர்; மனந்திறந்து பாராட்டும் இயல் பினர்; தம்மை அடைந்தாரைப் பாதுகாக்கும் புரவலர்.

இத்தகு ஆற்றலும் சிறப்பும் பெருமையும் கொண்டு திகழ்ந்த அன்னாரின் அண்மை மறைவு வைணவ உலகத்திற்கு மட்டுமல்ல; சமய உலகிற்கும், பாரத மண்ணிற்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்

M. **சீதாராமன்**, காஞ்சிபுரம்.

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

### தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஜ்யோதி மறைந்தது

மஹாமஹோபாத்யாய காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. ப. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி புகழ்மிக்க ஸ்ரீவைஷ்ண வர்களில் ஒருவர். ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு அரும்பாடு பட்டுள்ளார்.

உபந்யாஸம் செய்ய ஆரம்பித்தால் ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள், ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் எல்லா வற்றையும் கடல்மடை திறந்தாற் போல தட்டுத் தடங்கலின்றி உதாஹரிப்பார். பூரணமாக அத்யயனம் பண்ணியவர்.

ஸ்ரீதேவாதிராஜன் ஸந்நிதியில் ஆழ்வார் அருளிச் செயல் கோஷ்டியில் அந்வயிக்காத நாள் கிடையாது பேரருளாளன் திருவீதிப் புறப்பாட்டுக்கு எழுந்தருளுவதற்கு முன்பே ஸித்தமாகக் காத்துக் கொண்டிருப்பார். ஒரு நாளாவது ஒரு க்ஷணமாவது விளம்பித்து (நேரம் கழித்து) வந்தார் என்பதில்லை. சரீரபாத பர்யந்தம் இதை விரதமாகக் கொண்டிருந்தார். மணவாள மாமுனிகளிடம் இவருக்குள்ள பக்தி அபரிமிதமானது. மாமுனிகளை உபாஸித்து அவரைப்போல் இவரும் **விசதவாக்சிகாமணி**யாகத் திகழ்ந்தார். இவ்விதமுள்ள தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஜ்யோதி மறைந்துவிட்டது. இது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

## தினமணி

### பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் காலமானார்

வைணவ இயக்கத்தின் நடமாடும் பேரகராதியாக விளங்கிய அப்பெரியாருக்கு பாரதப்பரிஷத் என்னும் அலகாபாத் நிறுவனம் 'மஹாமஹிமோபாத்யாய' என்ற பட்டத்தை வழங்கிற்று. 1965 ஆம் ஆண்டில் ராஷ்ட்ரபதி அவருக்கு விருது வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ், தெலுங்கு, சமஸ்க்ருதம் இந்தி ஆகிய பன்மொழிகளில் தேர்வுடைய புலமையுடையவராக அவர் விளங்கினார்.

''பிரதிவாதி பயங்கரம்'' என்ற சிறப்பான பாரம்பரிய மரபில் வந்து தமிழ்மண்ணில் நெடுங்காலம் வைணவம் வளர்த்த அண்ணா' ஆழ்வார்கள் ஆச்சார்யர்களின் அருளிச் செயல்களை மக்கள் விளக்கிக் கொண்டு பயனடைய ஏராளமான நூல்களை எழுதிக் குவித்தார்.

''திவ்யார்த்த தீபிகை'' என்பது அவரால் மணிப்ரவாளத்தில் எழுதப்பட்ட மிகப் பெரிய நூல்.

தமிழகத்திலும் ஆந்திரத்திலும் வட மாநிலங்களிலும் ஏராளமான அபிமானிகளைப் பெற்றிருந்தவர் அவர்.

மார்கழி மாதந்தோறும் சென்னைக்கு விஜயம் செய்து உப்புட்டூர் ஆழ்வார் செட்டி சத்திரத்தில் ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை விளக்கப் பேருரை நிகழ்த்தி வந்தார்.

மொழிகள் பலவற்றில் கடல் மடை திறந்தாற்போல் பேசக் கூடிய ஆற்றல் படைத்தவர்.

ஸ்ரீ வில்லி புத்தூர், ஸ்ரீ ரங்கம் ஆகிய திருக்கோயில்களில் நிலவி வரும் ''அரையர் ஸேவை'' என்ற மரபுவழி நாட்டிய மாடவும் அறிந்தவர். அவரே அரையராக உடையணிந்து நாட்டிய பாவத்தோடு தெய்வீக அன்பை விளக்கியிருக்கிறார்.

## ஆனந்த விகடன்

### மறைந்த மேதை

அண்மையில் தமது 93 வது வயதில் மறைந்த உ. வே. பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள் இந்த

நூற்றுண்டு கண்ட அதிசய மனிதர்களில் ஒருவராவார். நடமாடும் ஒரு நூல் நிலையமாகத் திகழ்ந்த அவர் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்திலும் இலக்கியத்திலும் கரை கண்ட மேதை, பன்மொழி விற்பன்னர், நூலாசிரியர், பத்திரிகையாளர், சிம்மமெனக் கர்ஜிக்கும் குரல்வளம் நிறைந்த சமயச்சொற்பொழிவாளர்.

1979 மார்ச்சு மாத ''கீதாசார்யன்'' இதழுக்கு சுவாமி அளித்த பேட்டியில் சில.

''எல்லா பாஷைகளிலும் என்னுடைய கையெழுத்துக்கள் நன்ருக இருக்கும். என்னுடைய ஆங்கில எழுத்தைக் கண்டவர்கள் தேவரீர் ஒரு B A. வா என்று கேட்கிருர்கள். அவர்களிடம் நான் P.B.A. என்று சொல்லுகிறேன்.''

''இதுவரை வடதேச யாத்திரைகள் மட்டும் 23 தடவை சென்றிருக்கிறேன். ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்கள் 108-ல் இப்பூவுலகில் இருப்பவை 106. அவற்றுள் ஸாளக் கிராமம், திருப் பிரிதி தவிர மற்ற 104 திவ்ய தேசங்களையும் ஸேவித்திருக்கிறேன்.''

**கல்கி**

**கேள்வி :** பிரதிவாதி பயங்கரம் என்று ஏன்பெயர் வந்தது?

**பதில் :** 94 வது வயதில் பழுத்த பழமாக வைகுண்ட பதவி அடைந்த அண்ணங்கராசாரியார் பிரதிவாதி பயங்கரம் என்ற வம்சத்திலே உதித்தவர். அதாவது ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் உயர்வுபற்றிய இம்மரபினரது வாதங்கள் முன் எவரும் நிற்க முடியாது. அத்தனை வலுவானவை என்று அர்த்தம். வேத, சாஸ்திர, புராண, பக்தி இலக்கியங்களைக் கரைத்துக்குடித்து இவற்றைப்பொருத்த மட்டில் நடமாடும் என்சைக்ளோ பீடியோ என்று கருதப் பட்ட ஞானி. எந்த வரியைச் சொன்னாலும் பாடலை முழுமையாகக் கூறிவிடுவார். 18 மொழிகளைக் கற்றதுடன் ஏராளமான நூல்களை அவற்றுள் நாலாயிர திவ்ய ப்ரபந்தத்திற்கு எழுதிய உரை எழுதியவர். மிகச் சிறந்ததெனமதிக்கப்படுகிறது. ஸ்ரீராமாநுஜன் என்ற ஸ்ரீ வைஷ்ணவப் பத்திரிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

**குமுதம்**

**கேள்வி :** பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் உபந்யாசம் கேட்டிருக்கிறீர்களா?

**பதில் :** கேட்காதது; அவர் உபந்யாசம்.கேட்டது அவரை மிஞ்சிய வேதவிற்பன்னர் கிடையாது என்ற புகழ் (ஒரு ரகசியம் எதிரும் புதிருமான பெரியவர்கள் — ஒருவர் சைவர் மற்றவர் வைணவர் — ஒரே ஒரு விஷயத்தில் மன மொத்துச் சொன்னார்கள் **அண்ணங்கராசாரியர் ஒரு சமுத்திரம்**)

## **THE INDIAN EXPRESS** (published on 22.6.1983)

## ANNANGARACHARIAR DEAD

**Mahavidvan Sri Prativadi Bhayankarm Annangarachariar Swami, doyen among Vaishnava Scholars, passed away on Tuesday evening at his residence at Kancheepuram. He was 94.**

**Approfound scholar both in Sanskrit and Tamil, he was a great exponent of the Sri Vaishnavaite tenets of Sri Ramanuja. He popularised the works on the Alwars and Acharyas by his Scintilating discourses.**

**He was a prolific writer and has left a number of commentaries on the works of Alwars and Acharyas like Vedanta Desika and Manavala Mamunigal.**

**His work 'Divyartha Deepika' is a monumental work on the Tamil works of the Alvars.**

**He was considered a walking encyclopaedia on Vedic and puranic lore. He was recipient of the Presidents Award in 1965 and the title of Mahamahimopadyaya from the Bharat Parishad, Alahabad.**

**He was also a linguist and gave discourses in Tamil, Telugu, Sanskrit and Hindi.**

**He had a large circle of disciples. His discourses on Andal's Thiruppavai in the month of Margazhi used to draw large number of devotees.**

**On one of the days during the month, he used to perform the 'Arayar seva' himself, donning appropriate costumes.**

**He is survived by two daughters and an adopted son.**

## THE HINDU (published on 22.6.1983)

### ANNANGARACHARYA DEAD

Sri Prathivathi Bhayangaram Annangaracharya, an eminent Vedic Scholar and exponent of Sri Vaishnavism, died at his residence in Little Kancheepuram this evening, after a brief illness. He was 94 and is survived by two daughters and an adopted son.

Considered an encyclopaedia in Vedic and Puranic lore. Sri Annangaracharya was born in a family of scholars. Through discourses all over the country in Tamil, Telugu and Hindi he popularised the works of Alwars and Acharyas.

A prolific writer, he was the author of 1, 276 books in Tamil, Telugu and Sanskrit and well known among them was Divyarth. Deepika' a commentary on Naalayira (4000) Divya Prabhandam He was a linguist and was proficient in as many as 18 languages

He was recipient of the President's Medal for Sanskrit in 1967 and the title of Mahamahimopadhyaya by Bharat Parishad Allahabad

He had a large circle of disciples, and his discourses particularly in Madras during the month of Margazhi, wheres largely attended.

For over 50 years, Sri Annangaracharya was the Editor of Sri Ramnujan, monthly journal devoted to Sri Vaishnavism.

இவ்விதமாக அவர் மறைந்த பின்னும் அவருடைய புகழ் பன்மடங்கு திக்கெட்டும் பரவியுள்ளது அவரது வாழ்நாட்களில் அவருக்குள்ள பெருமை பற்றிப் பல பெரியார்கள் வாயிலாக இவ்வுலகம் நன்கறிந்ததே அவருடைய மற்ற நூல்கள் பற்றியும் புகழ்ந்தோர் பலர் அவர்களில் ஒரிருவரின் எண்ணங்களையாவது இங்குக் குறிப்பிடுவது மிகவும் இன்றியமையாததாகும்

## ஸ்ரீமான் உ. வே. திருநகரி எம்பார் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியின் ஸ்ரீமுகம்

திருநாங்கூர்
12-10-50

......அந்த (திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை) உரையின் சொல்லின்பங்களையும் பொருளின்பங்களையும் அந்த (தோடா கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, வண்புருடோத்தமம் பெரிய ஸ்வாமி) ஸ்வாமிகள் ஆச்சரியமாகப் புகழ்ந்து கோஷ்டியிலேயே அருளிச் செய்வது வழக்கம். பூருவாசாரியர்களின் திருவுள்ளக் கருத்தை உள்ளபடி யுணர்ந்து பதவுரையும் விசேஷ வுரையும் ஸ்வாபதேச வுரையும் அமைந்திருக்கு மழகைக் கொண்டாடாதவர் ஒரு குக் கிராமத்திலாவது கிடைப்பரோ? ஸ்வாமியின் திவ்யார்த்த தீபிகை யுரை அன்றுதொட்டு இன்றுவரையில் மூன்று நான்கு பதிப்பு ஆகி யிருக்கிறது. பெரிய வித்வான்களும் இவ்வுரையினுதவிகொண்டே விசதமாக உணர்ந்து தெளிவு பெறுகிறார்கள்.

இது திவ்வியப்பிரபந்தங்களுக்கு மாத்திரமன்றே ஸ்வாமியின் உரையில்லாத ஸம்ப்ரதாய கிரந்தம் ஒன்றுண்டோ? உபயபாஷை களிலும் ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் போதுபோக்காக அமைந்துள்ள ஸகல கிரந்தங்களுக்கும் தேனும்பாலுமமுதுமான உரையன்றோ ஸ்வாமியிட்டருளியிருக்கிறது............................ ஸ்வாமி எழுதுகிற ஒவ்வொரு புத்தகமும் வாசிக்கக் கையிலெடுத்துக் கொண்டால் ஊணுறக்கமும் மறந்து கடைசி வரையில் வாசித்து விட்டேயன்றோ வேறுகாரியம் பார்க்க வேண்டி யதாகிறது. ஒரு விஷயத்தை விமர்சிக்க எடுத்துக் கொண்டால் எத்தனை ப்ரமாணங்கள்! எத்தனை யுக்திகள்! எத்தனை வ்யுத் பத்திகள்! எவ்வளவு ஆச்சரியமாக எழுதப்படுகின்றன வென் பதைப் பொறுமையாளர்களின் உள்ளமும் உணர்ந்து தீருமே.

தாஸாநுதாஸன்

தி. எம்பார் ஸ்ரீநிவாஸாசாரியன்

திருநாங்கூர்.

---

45. மெய்ப்பொருள் — கணேச அச்சுக் கூடம், சென்னை, 25-10-1950, ப. 50-51

## உ. தமிழாசிரியர் V. S. தோதாத்ரி ஐயங்கார் அருளிய திருமுகம்

உலகம் போற்றும் பெரியார் — வைணவவுலகின் அடிகள் இருமொழிக் கடற்குறுமுனிவர் — ஈரிரண்டு மொழிப் புலவர் — பன்னாட் பழகிப் பல அனுபவங்கள் நிரம்பியவர் ஸ்ரீ உ வே பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி யருளிய உரைப் புத்தங்களை உயர்ந்த துணைகொண்டு, பொழுது போக்கை ஆழ்வாரருளிச் செயல்களிலே கழித்தனன். அவ்வப்பொழுது ஆங்காங்குள்ள பெரியார்களின் காலக்ஷேப கோஷ்டிகளில் ஸ்ரீஸ்வாமியின் திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை யுரைக்கு நிகழும் பாராட்டுக்களையும் பொருமை யகற்றி யனுபவித்த வனடியேன். அத்தீபிகை யுரையினையும் பெரியோர் சொல்ல முதத்தினையும் மேற்கொண்டு பலர்க்கும் பாடங்களும் சொல்லி வருகின்றனன். இந்நிலவுலகில் நிலவும் புகழ்பெற்ற மஹா மஹோபாத்யாய டாக்டர் தாக்ஷிணாத்ய கலாநிதி சாமிநாதையரவர்கள் இத்திவ்யார்த்த தீபிகையுரையினைச் சென்னிக் கணியாகச் சேர்த்திப் போற்றியிருப்பது உலகமறிந்திருக்கவும் அவிழ்ச் சுவையல்லது தமிழ்ச் சுவை சிறிதுமறியாதவரும் ஸம்பிரதாய மென்பதனையே கேட்டறியாத வருமாகிய சிலர் உபதேசரத்தின மாலையின் இரண்டாம் பாட்டின் (கற்றோர்கள் தாகப்பர்......) கருத்திற்கிணங்க ஏதேனும் வரைகின்றாரெனின் அது நின்மலமான ஆகாயத்தின் மீது தன்கையினால் சேற்றை வாரியிறைக்கும் மஹா மேதாவியின் செயலொக்கு மத்தனையன்றோ.

இங்ஙனம்<br>
**V. S. தோதாத்ரி ஐயங்கார்**<br>
15-10-50

---

46. மெய்ப்பொருள் வாழ்ச்சி ப. 59 - 61

# TRIBUTES TO VIDWAN ANNANGARACHARYA
(The Hindu dated 10-8-51)

NEW DELHI Aug 8

The six-day celebration to mark the Shashtiabdapoorthi of Vidwan P.B. Annagaracharya Swami of Kancheepuram concluded this evening when, at a largely attended public meetings in Gita Bhawan, tributes were paid to the missionary zeal with which the Swami has been expounding Indian Philosophy. A purse was presented to him by the citizens of Delhi as a token of their reverence and administration.

Mr K.M. Munshi, Minister for Food and Agriculture, presided. Dr. K.S. Krishnan, Chairman of the Organising Committee, welcomed the guests at the meeting which commenced with invocation by Srimathi Saroja Vijayaraghavan. Mr. Munshi spoke in highly appreciative terms of the scholarship of Sri Annangaracharya.

Later Vidwan Annagaracharya delivered a lecture, partly in Sanaskrit and partly in Tamil, his subject being the Essence of the Gita.

Mr. S.R.S. Raghavan, Secretary of the Commitee, proposed a vote of thanks.

Mr. M. Anantasayanam Iyengar, Deputy speaker of Parliment speaking at a reception given by the Cultural Association last evening to Sri Annangaracharya, said that the advent of freedom, they now had ample opportunity of re-discovering the real culture of India and getting back to the study of Sanskrit, the store-house of inspiration and knowledge.

The Swami spoke at length in Sanskrit on ' South India's contribution to Sanskrit literature'' quoting slokas to explain the unique contribution to Sanskrit literature of Sri Alavandar. Sri Ramnuja, Vedanta Desika and others.

Dr. Surendranath Sastri, Professor of Sanskrit, Hindu College. who presided, pointed out that the contribution of South India

to Sanskrit literature lay embedded in the religious works of the great Acharyas

Sri Venkatarama Ghanapatigal of Madura, who welcomed the Swami, said he was one of the grestest living scholars of Sanskrit and it was a treat to hear him speak in Sanaskrit.

Mr. Ananthasayanam Iyenger said the south gave birth to the Bhakti cult and Acharyas like the great Ramanuja made Digvijayas to the north and conquered it not by force of arms but by culture *Today they had a glimpse of that personality in Sri Annagaracharya Swami who had brought with him that culture* In him they saw simplicity combined with dignity and the spiritual effulgence of the great acharyas of old. In free India they had ample opportunity of re-conquering the real culture of India. He referred to the small beginnings made by the Cultural Association the impart Sanskrit knowledge to others and appealed to learn the language in large numbers.

After paying tribute to the Swami as a powerful orator not only in Tamil and Telugu but also in Sanskrit and Hindi and as a great scholar widely read in the works of the Acharyas. Mr. Iyengar prayed that the Swami might be spared to them for many more years of useful work

3 *"காஞ்சீபுரம் மகாவித்துவான்* **P. B. A.** *ஆசார்ய சுவாமிகளின் உரை நூல்களைக் கண்டும் கற்றும் கேட்டும் உலகமெல்லாம் களிப்புறுகின்றது. அவற்றில் குறை கூறுவோரது சிற்றுரைகளால் சுவாமிகளின் பாற்கடல்போற் பரந்த பெருமைக்குக் கலக்குறுதலும் புரைபடுதலும் ஏற்படாதென்பது உறுதி.*

**"காய்தலு வத்த லகற்றியொரு பொருட்கண்**
**ஆய்தலறி வுடையார் கண்ணதே — காய்வதன்கண் ?**
**உற்றகுணந் தோன்றாதாகு முவப்பதன்கண்**
**குற்றமுந் தோன்றாக கெடும்"[47]**

**தி. பொ. பழனியப்பப் பிள்ளை, B. O. L.**
*திருப்பதி.*

47. *மதிப்புரை மாலை — விக்டோரியா அச்சுயந்திர சாலை, திருப்பத்தூர்,* 1950, *ப*-22

4. ..........................................................

நாடுசெய் தவத்தால் நலமொடு திகழும் அண்ணங்கராசார்யர் அகங்கனிந்தளித்த திவ்யப்ரந்த தீபிகையுரைகளில் வளந்திகழ் எளிய வடசொற்றழுவி இனிய தீந்தமிழ் இணைந்து சொல் அழகைப்பண்டிதர் கண்டு பரவச முறுவர்;

**''அந்தமில் மறைகளில் ஆழ்ந்த அரும் பொருள்**
**செந்தமி ழாகத் திருத்திய பெரியார்**
**அண்ணங்கரார்யர் அருட்கண் பெற்று**
**உண்மைப்பொருளை உள்ளவா றுணர்ந்து**
**அருந்தமிழ்த் தொண்டினை யாற்ற முற்படலே**
**ஆயவுரை யாளர்க் கமைந்த காரியமால்;**

**அருங்கலை விநோதர் அண்ணங்க ரார்யரின்**
**பேசு று திவ்யப்ரபந்த தீபிகை யுரை**
**மலையிலிட்ட விளக்கென மன்னுக;**
**தெய்வச் செந்தமிழ் செழித்தினி தோங்குக''[48]**

இங்ஙனம்
**முத்து வேங்கடாசலமையர்**
(மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்பரீக்ஷகர்)

ஆக, ஆயிரக் கணக்கான கல்வியிற் சிறந்த சான்றோர்களும் புலவர்களும், கவிகளும் ஒன்று கூடிப் பல நூற்றாண்டுகளில் செய்யக் கூடிய சாதனைகளை ஒருவராகவே சுவாமி சாதித்திருப்பது கொண்டு இவரை இராமானுசர், மணவாள மாமுனிகள் போன்ற மகாசாரியர்களின் மறுபிறப்பென்றே கூற வேண்டும். அவர் ஆற்றிய சொற்பொழிவுகளும், இயற்றிய நூல்களும் இன்னும் பல்லாண்டு காலம் இவ்வுலகில் வைணவம் தழைத் தோங்கச் செய்யுமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. வைணவவுலகம் 'தலையல்லால் கைம்மாறிலேனே' என்ற திருவாக்கை நினைந்து செயல் படுவதைத் தவிர வேறு உதவி அவர்க்குச் செய்ய முடியாது. என்பது முக்காலும் உண்மை. வைணவ வுலகைப் பொறுத்த மட்டில் ''அண்ணங்கராசாரியரின் நூற்றாண்டு'' என்றால் அது மிகையாகாது; சாலப் பொருந்தும்.

48. மதிப்புரை மாலை, ப. 23-25

## சுவாமியின் வாழ்க்கையில் அதிசயங்கள்

சுவாமியின் வாழ்க்கையில் பல அதிசயங்கள் நடந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் மிகவும் நயமூட்டுவன. ஓரிரு எடுத்துக் காட்டுகளுடன் அவற்றை இங்குக் காண்போம்.

## அபம்ருத்யுவுக்குத் தப்பிப்பிழைத்த அதிசயம்[49]

"திருநாடு சென்றவர்கள் மீள்வதில்லை யென்ற கொள்கைக்கு மாறாக அடியேன் மீண்டு வந்ததோர் அதிசய வார்த்தையை ஆப்தர்களறிய விஜ்ஞாபிக்கிறேன். நாதத்வாராவிலிருந்து ஆவணி மாதப்பிறப்பன்று (17-8-58) மாலை ஸபரிவாரனாய்ப் புறப்பட்டு ஸித்தபூரென்கிற மாத்ருகயா க்ஷேத்திரம் செல்லா நின்றேன். ஸாயம் ஆறரை மணிக்கு ரைல் ஏறியாயிற்று. எமக்கு ஸ்பெஷல் போகி வண்டி யிருந்தாலும் ஆக்ராவிலிருந்து மீட்டர் கேஜ் பாதைக்கு ஏற்பச் சிறுவண்டித் தொடர் அமைந்ததனால் அதில் பெருந்திரளோடு கூடியிருக்கப் பாங்கில்லாமல் ஸௌகரியத்தை உத்தேசித்து வேறொரு வண்டியில் இருந்து வந்தேன். அதிலும் நம்மவர்கள் சிலர் உடனிருந்தார்கள். அதில் ஜனஸங்கம் அதிகமாக ஏற்பட்டதனால் நம்முடைய ஸ்பெஷல் வண்டிக்கே போய்ச் சேருவோமென்றெண்ணி அந்த வண்டி, யிலிருந்து இறங்கி விட்டேன். அந்த ஸ்டேஷன் சிறியதாகையாலே நமது ஸ்பெஷல் வண்டித் தொடர் ப்ளாட்பாரத்தைக் கடந்து அப்பால் சிறிது தூரத்தில் (என்ஜின் பக்கத்தில்) நின்றிருந்தது. அவ்வளவுதூரம் நான் நடந்து செல்வதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது. அப்போது இரவு பத்தே கால் மணி. எப்படியாவது நமது வண்டியில் ஏறிவிட வேணுமென்னுமாசையினால் சிறிது வேகமாகவே நடந்து சென்று வண்டியின் வெளியிலுள்ள கீழ்ப் படியின் மீதேறி இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டேன். இதுவோ சிறுவண்டித் தொடர்; அதற்கேற்பப்படியும் மிகச் சிறிது. வண்டித் தொடரோ கனவேகமாக ஓடுகின்றது. நமது ஸ்பெஷல் வண்டிகள் நான்கில் ஏறக்குறைய எண்பது பேர்கள் சயனித்திருக்கிறார்கள். வெளிப்படியில் நின்றபடியே கதவைத் திறவுங்களென்று நான் கத்துகிறேன். உயிர்ப்பிச்சை கொடுங் களென்றும் கூச்சலிடுகிறேன். அந்த பயங்கரமான கூக்குரல் கேட்டுப் பலர் கண் விழித்தெழுந்து ஜன்னல் வழியாய் என்னைப்

---

49. ராமாநுஜன் 116-117 p p. 15 17

பார்த்துங் கூட ஒருவராலும் கதவைத் திறக்க முடியவில்லை. எதிர்ப்பக்கத்தில் மட்டும் திறக்கும்வழி வைத்துக் கொண்டு இந்தப் பக்கத்தைப் பூட்டியேயிருந்தபடியாலும் எளிதில் பேர்க்க முடியாத கனத்த மூட்டைகளை வழியிடையே அடுக்கியிருந்த படியாலும் கதவு திறக்க முடியாமலே போயிற்று. ஸ்டேஷன் விட்டு ஐந்தாறு மைல் தூரத்திற்குமேல் வண்டி போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஸமயத்தில் வெளியிடத்தில் நானெப்படி நிற்கிறேன், எப்படி அங்கு வந்தேன் என்பது உள்ளிருப்பவர் களுக்குப் புரியவில்லை. எனக்கோ கையிலும் காலிலும் வலி மாண்டு விட்டது. கால் சரிவுற்றது. கையும் தளர்ந்து விட்டது. 'கீழே சரிந்து விழவேண்டிய நிலைமையாய் விட்டது. அந்த விடத்தில் கீழ்ப்பாகத்தை நோக்குங்கால் கிடுகிடு பாதாள மாயிருக்கின்றது. நானே புத்தி பூர்வமாகக் குதித்தாலும் அவசாத் சரிந்து விழுந்தாலும் ஒரு அஸ்திகண்டங்கூட ஒருவர் கையிலும் கிடைக்க வழியிராது பகவான் நமக்கு இப்படிப்பட்ட அபம்ருத்யுவையா தலையிலெழுதினுனென்று எண்ணுதன பலவும் மெண்ணியாயிற்று த்வயாநுஸந்தானமும் ஆசார்ய பாதாரவிந்தத்யானமும் செய் தாயிற்று. ஒரு மணியவகாசத்தில் க்ரமேண நினைத்தாக வேண்டிய பலபல விஷயங்களை ஒரே நிமிஷத்தில் நினைத்துவிட்டேன். கடைசியான நினைவை மட்டும் இங்கு விஜ்ஞாபிக்கிறேன். வராஹ சரமச்லோகப்படி ''அப்போதைக்கிப் போதே சொல்லி வைத்தே'' னென்றிருப்பார்க்கு அந்திமஸ்ம்ருதி ஆவச்யகமன்று என்று ஸம்ப்ரதாயார்த்த மிருந்தாலும் அந்திமக்ஷணத்தில் நமக்கு மணவாள மாமுனிகளின் திருவடி சிந்தனை ப்ராப்த மாகுமா வென்று அடியேன் அடிக்கடி நினைப்பதுண்டு. அந்தச்சிந்தனையோடு இப்போது நமக்கு அவஸானம் நேருகின்றதே யென்று ஒரு மஹத்தான ஸந்தோஷமுண்டாயிற்று. இன்னமும் ஒன்று நினைத்தேன்; (அதாவது) ' க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்'' என்று உள்ளது; மணவாளமாமுனிகளே! அடியேன் க்ருத்க்ருத்யனுக இல்லையே! இன்னமும் எவ்வளவோ கர்த்தவ்ய சேஷமிருப்பதாக நினைத்திருக்கு மடியேனை இப்படி அபம்ருத்யுவுக்கு ஆளாக்கவோ திருவுள்ளமாயிற்று? என்று இது தான் அந்திமஸ்ம்ருதியாக நிகழ்ந்தது. அதே க்ஷணத்தில் ஒரு உபாயம் ஸ்புரித்தது. அபாயம் நேர்ந்தால் வண்டியை நிறுத்த சங்கிலியைப் பிடித்திழு என்று வண்டிதோறும் பிரசுரம் செய்யப் பட்டிருப்பது நினைவுக்கு வந்தது. உள்ளேயிருப்பவர்களை நோக்கிச் சங்கிலியைப் பிடித்திழுங்கள் என்று கத்தினேன். நம்முடைய க்ரந்தமாலா ஏஜண்டாகிய சென்னை ஜி ரங்கைய நாயுடு சங்கிலியைப் பிடித்திழுத்தும் வண்டி நிற்கவில்லை. வண்டியோ ஒரு

நிமிஷத்தில் ஒரு மைல் ஓடுகின்றது. எப்படி நான் தரித்து நின்றே னென்பது எனக்கே தெரியவில்லை ப்ரஹ்மாஸ்த்ரமும் வாய் மடிந்ததே யென்று துடிக்கிறேன் க்ருஷ்ணகிரி வெங்கட லக்ஷ்மியம்மாளென்பவள் ஹாஹா வென்று கத்திக் கொண்டே சங்கிலியைப் பிடித்துக்கொண்டு தொங்கலாடி நிற்க உடனே வண்டி நின்றது. என்னுடைய ஆவியும் நிலையில் நின்றது. இந்த அம்மாள் ப்ரதிவாதி பயங்கராசார்ய ஸமாச்ரயணம் பெற்ற வளாகையாலே உயிர்ப்பிச்சையளிக்கும் பாக்கியம் இவளுக்கு எட்டியது போலும்.

வண்டி நின்றவுடனே நான் கீழே இறங்கிவிட்டேன். விரஜா தீரத்தில் நின்று மிறங்கினேனென்பதில் ஐயமில்லை. சில அதிகாரி கள் ஓடிவந்து என்னை கார்டு வண்டியில் ஏற்றிவிட உடனே வண்டி புறப்பட்டு விட்டது, அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்ற பிறகு ரைல்வே அதிகாரிகள் செய்ய வேண்டிய விசாரணையைச் செய்து தெளிவுடன் சென்றார்கள். மறுநாள் காலை எட்டு மணிக்கு ஸித்த பூர் வந்து சேர்ந்தோம்.''

ஸ்வாமி பல முறை யாத்ரைகள் சென்றிருக்கிறார். ''அடியார் குழாங்கூட ஆசையுற்ற'' ஸ்வாமி திவ்யதேச யாத்ரைகளில் கண்ட அனுபவத்தை ''யாத்ராம்ருதம்'' என்று மகுடமிட்டு தாம் சென்ற இடங்களைக் கோத்து சுலோகமாக வெளியிட்டுள்ளார். மேற்கண்ட அனுபவத்தை ''பிறந்தவாறும் வளர்ந்தவாறும்'' என்னும் தலைப் பின்கீழ் ஒரு கட்டுரையைப் புனைந்து 'ஸ்ரீராமாநுஜன்' இதழுக்கு 20-8-58ல் த்வாரகா..சன் முன்பே எழுதி யனுப்பப்பட்டதாக ஸ்வாமி தெரிவிக்கிறார்.

1940 ஆம் ஆண்டிலிருந்து 1969 ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு முறை வடதிசையில் உதயபூர் ராஜ்யத்திலுள்ள ஸ்ரீநாதத்வாரா என்னும் க்ஷேத்ரத்தை ஸ்வாமி சேவித்துள்ளார்.[50]

ஸ்வாமி 1920-இல் 45ரூபாய் கொடுத்து ஒரு பெரிய கடியாரம் வாங்கினார். அதன்பிறகு அதற்கு ஒரு நாள் கூட 'ஆயில்' தட வினது இல்லை. ஐந்து அல்லது எட்டு நாட்கள் வெளியூர் போக நேர்ந்தால் சாவி கொடுத்து விட்டுச் சென்று திரும்பினால் தன் கடமையை வழுவறச் செய்து கொண்டு இருக்கும். வீடு பூட்டி யிருக்கிறதாகவோ, வாசலில் கேசவன் தூங்குகிறானே, அவரும்

50. ஸ்ரீராமானுஜன் 326

தூங்கிருரோ என்று கிடப்பதில்லே. இத்தகைய நிலேமையை ஸ்வாமி வியந்து இப்படியொரு பணிவிடைக்காரன் நமக்குச் கிடைக்கமாட்டாஞே? என்று தோன்றி ஒரு பெரியவரைக் கேட்க, அவர் 'அறிவற்றதாகப் பிறந்தாலொழிய இத்தகைய பாரதந்த்ரியம் வாய்க்காது'' என்ருர். இதனேக் கொண்டு ஸ்வாமியும் ஆசாரி யர்கள் 'அசித்வத் பாரதந்திரியம்'என்றதாக ஸ்வாமி எண்ணுவர்[51]

சுவாமியின் ஆராய்ச்சியில் சில துளிகளே இங்குக் காண்போம்.

ஆழ்வார்களின் அருளிச் செயலேப் பலமுறை அலசி அலசி ஆராய்ச்சி செய்தவர் ஸ்வாமி. இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஸ்ரீராமானுஜன் பத்திரிகையிலும் தனிப்புத்தங்களிலும் வெளி வந்துள்ளன இவற்றில் 'ஆழ்வார்களுகந்த இராமன்' 'ஆழ்வார் கள் புகழ்ந்த கண்ணன்'[52] என்பவை மிகவும் ரஸமானவை. இந்தத் தொகுப்பு நாலாயிரம் பாசுரங்களிலிருந்து செய்யப்பட்டது.

உலக வழக்கிலுள்ள சொற்களேயும் சுவாமி ஆராய்ச்சி செய்துள்ளார். 'லோக வ்யவஹார சிக்ஷா' என்னும் தலேப்பின் கீழ் மூன்று வாக்கியங்களேப்பயன்படுத்துகிருர். இம்மூன்றில் இரண்டு தமிழ்ச் சொற்கள்; மற்ருென்று வடமொழி வாக்கியம்.

## 1. இலவசமாகக் கொடுத்தான்

'இலவசம்' என்றும் சொல் உலக வழக்கில் இருந்து வருகிறது. அதாவது ஒருவன் ஒன்றை விலேயில்லாமல் இனுமாகக் (வெறுமனே) கொடுத்தால் இதைப் பெற்றுக் கொண்டு 'இது எனக்கு இலவசமாகக் கிடைத்தது, என்று சொல்லி அகமகிழ் கிருன். 'இலவசம்' என்பது சொல்வடிவமன்று; இலேவசம் என்பதே சொல்வடிவமாகும்.

ஒருவன் மற்ருெருவனேக் கடனுக ஐந்துரூபாய் கேட்டுக் கொண்டிருந்தான். கடனுகக் கொடுத்தால் மீண்டும் வராது என எண்ணித் தனக்குத் தோன்றிய ஏதோ ஒரு தொகையைக் கொடுத்தனுப்பி விடுவோமென்று எண்ணி வெற்றிலேயில் ரூபாய் இரண்டை வைத்துக் கொடுத்தனுப்பினுன். பெற்றுக் கொண்டவன் தான் 'கடனுகக் கேட்டதாகவும் அதற்குக் கொடுத்தவன் கடன் கொடுத்து தனக்கு வழக்கமில்லே; கொடுப்

51. ஸ்ரீராமானுஜன் 379, ஆவணி 19-76 ப. 15)
52. ஸ்ரீராமானுஜன் 275, 10-8-71 பக். 1-35

பதைப் பெற்றுச் செல்லும் என்று சொல்லி அனுப்பினுன். பெற்றுக் கொண்டவன் தான் பெற்றதை 'இது எனக்கு இலவச மாகக் கிடைத்தது' என்று சொல்லிக் கொண்டான். இதற்கு ஸ்வாமி பெரியாழ்வார் திருமொழியிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குகிறுர். "உலகில் வெற்றிலையில் வைத்துக் கொடுப்பது கடனன்று; இனும் என்பது யாவரும் அறிந்ததாகும். ஆகவே இலவச மென்றது வெற்றிலை வழியாக என்றதாயிற்று. வெறு மனே இலையென்றுல் வெற்றிலையைக் காட்டுமோ வென்று சங்கிக்க வேண்டா; பரிபாஷையில் (மரபு மொழி) வெற்றிலைப் பாக்கை அடைக்காய் என்கிறோம்; 'கையடைக்காயும்,' 'அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்' என்பன பெரியாழ்வார் பிரயோகங்கள். அடை என்னும் சொல் பொதுவாக இலைக்குப் பெயர்; காய் என்பதும் பொதுவாகக் காய்களுக்குப் பெயர். ஆனுலும், மரபின் வகையால் அடையென்பது வெற்றிலையையும் காய் என்பது பாக் கையும் சொல்லுவது நிர்விவாதம். இங்ஙனமே இலவசமென்ற பொதுச்சொல் விசேஷித்து வெற்றிலையைக் குறிக்கத்தட்டில்லை"[52]

## ௨. மடிஸார் பாய்கிறது

இது அர்த்தமற்ற தவருன சொல் தீர்த்தம் (குடிநீர்) சாற்றமுது(ரஸம்) முதலானவை ஸாதிக்கும் (பரிமாறும்) போது ஒரே தாரையாக விழாமல் வேறு வேறு தாரைகளாகவும் பெரு கினுல் அப்போது மடிஸார் பாய்வதாகச் சொல்லி வருகின்றனர். இங்கு உண்மையான சொல்வடிவம் மறுதாரை பாய்கிறது என்பதேயாம்.[53]

## ''ஒரு வேடிக்கை துக்கடா''

ஒருவர் நால்கால் மண்டபமொன்றைக் காட்டி இது என்னுடையதென்று சொல்லி அதை அடகு வைத்து நாலாயிரம் ரூபா கடன் வாங்கினராம். அதைப் பொருதவொருவன் இவரிடம் வந்து 'இதில் ஏதேனும் பங்கு கொடுத்தால் ஸரி; இல்லை யானுல் இது ஏமாற்றமென்று தெரிவித்து விடுவே'னென்றுனும். 'அடா! கையிலாகாத முண்டமே! உனக்கு ஸாமர்த்தியமிருந்தால் பதினுறுகால் மண்டபத்தை அடகுவைத்துப் பதினுயிரம் ரூபா வாங்கே' என்றுராமவர்.[54]

---

53 ஸ்ரீராமானுஜன் 38, பிப்ரவரி 1952)

54 ஸ்ரீராமாநுஜன் 260, 261, ஆகஸ்டு-செப்டம்பர் 1970

வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவையவைதோ
றணங்கும் பலபல வாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்

என்னும் நம்மாழ்வாரின் திருவிருத்தப் (96) பாசுரத்திற்கிணங்க சுவாமியின் ஆராய்ச்சிகள், அவருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அவர் பெரியார்களிடம் கொண்ட பக்தி முதலிய பல துறைகளினுல் கொண்ட அனுபவத்தைச் சொல்லிலோ, எழுத்திலோ எடுத்தியம்ப இயலாது. அவர் இவ்வுலகுக்கு ஆற்றிய தொண்டினைப்பற்றி விளம்புவதும் 'பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.' அவரைப்பற்றி அவரவர்கள் நோக்குப்படி 'என்னெஞ்சினுல் நோக்கிக் காணீர்' என்னும் கணக்கிலே தலைக் கட்டுவதைத் தவிர வேறென்றும் அறிகிலோம்

## ஸ்வாமியின் ஸமாச்ரயணத் தனியன்

श्रीवत्स वंशाम्बुधि पूर्णचन्द्रं श्रीरङ्गनाथार्य तनूजरत्नम् ।
तत्पादयुग्मांबुज भृङ्गराजं अण्णङ्गराचार्यमहं प्रपद्ये ॥

ஸ்ரீவத்ஸாம்புதி பூர்ண சந்த்ரம் ஸ்ரீரங்கநாதார்ய தநூஜ ரத்னம் |
தத்பாதயுக்மாம்புஜ ப்ருங்கராஜம் அண்ணங்கராசார்யமஹம்
ப்ரபத்யே ‖ [55]

## ஸ்வாமியின் சரமச்லோகங்கள்

रुद्रोद्गारिणि वत्सरे दिनकरे शुक्राङ्गते पूर्वके
पक्षे विष्णुदिने षडष्टिद्विनिष्कमासेनु सद्वासरे ।
वात्स्यश्रीप्रतिवादि भीकरगुरोर्वंशोदितोऽण्णङ्करा
चार्यः पद्मविभूषणो गुरुवरो नित्यां विभूतिं ययौ ॥

ருத்ரோத்காரிணி வத்ஸரே திநகரே சுக்ரங்கதே பூர்வகே
பக்ஷேவிஷ்ணு தினே சடத்விடுடுநிஷ்மாஸானு ஸத்வாஸரே |
வாத்ஸ்ய ஸ்ரீப்ரதிவாதி பீகர குரோர்வம் சோதி தோண்ணங்கரா
சார்ய : பத்மவிபூஷணோ குருத்ருமா நித்யாம் விபூதிம் யயௌ ।

---

55. கீதாசார்யன்-58 ஜுலை 1983, அட்டையின் இரண்டாம் பக்கம்

रुद्रोत्कारि शुक्र शुक्लद्वादश्यां भौमवासरे।
अण्णङ्गरार्यः श्रीवात्स्यः स्वाचार्यचरणाश्रयात् ॥

**ருத்ரோத்காரி சுக்ரசுக்லத்வாதச்யாம் பௌம வாஸரே**
**அண்ணங்காசார்ய ஸ்ரீவாத்ஸ்ய : ஸ்வாசார்ய சரணுவகாத் ।  56**

## ஸ்வாமியின் வாழி திருநாமம்

*கச்சிநகர் வந்துதித்த கவிப்பெருமான் வாழியே*
*கற்பவர்தம் மனமுருகக் கருத்துரைப்போன் வாழியே*
*சிச்சன் தன்ஞருயிரை சேமிப்போன் வாழியே*
*சீர்வசன பூடணத்தின் சிறப்புரைப்போன் வாழியே.*
*இச்சையுடஞசார்யனிதய மீந்தோன் வாழியே*
*எழிற்கலைகள் திருநாவில் இலங்க நின்ருன் வாழியே*
*அச்சுதன் தாளிணை பணிந்தே அருள்பெற்ருன் வாழியே*
*அண்ணங்கராரியன் தன் அடியிணைகள் வாழியே.*

**ஆரணநூல் வாழ அருளிச் செயல்வாழ்;**
**தாரணியோர் தாமமுடன் வாழ — ஏரணிசீர்**
**மன்னுபுகழ் அண்ணங்கராசாரியனும் மாகுருவே!**
**இன்னுமொரு நூற்ருண்டிரும்.**

**ஸ்ரீமதே ஸௌம்ய ஜாமாத்ரு முநிபாதாப்ஜஸேவிநே**
**அண்ணங்கரார்ய வர்யாய நித்யஸ்ரீர் நித்யமங்களம்.**

श्रीमते सौम्य जामातृ मुनिपादाब्जसेविने ।
अण्णङ्गरार्य वर्याय नित्यश्रीर्नित्य मङ्गलम् ॥

*ஆழ்வாரெம்பெருமாஞர் ஜீயர் திருவடிகளே சரணம்*

*அண்ணங்கரார்ய திருவடிகளே சரணம்*

---

56. *கீதாசார்யன்* 58, *ஜுலை* 1983 *பின் அட்டையின் உள்பக்கம்*

# பிழை திருத்தம்

| வரி | பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 22 | 18 | चान्द्रका | चन्द्रिका |
| 1 | 19 | புலதை | புலமை |
| 2 | 19 | இழமா | இதழை |
| 3 | 19 | சைர்ம | சர்மா |
| 28 | 19 | ரஹஸ்யர் | ரஹஸ்யம் |
| 24 | 20 | ஸ்ரீமன் | ஸ்ரீமான் |
| அடிக்குறிப்பு | 21 | * இன்றைக்கும் .................. ...வருகிறது | 22-ம் பக்கத்தின் அடிக்குறிப்பாக வர வேண்டும் |
| 30 | 22 | ம் இருபதாம் | தம் இருபதாம் |
| 9 | 23 | சரிதை'' ம் | சரிதை''யும் |
| 29 | 23 | வயதிலேலே் | வயதிலேயே |
| 30 | 23 | கால் | காதி |
| 7 | 24 | நூல்களிளு டுதல் | நூல்களிடுதல் |
| 8 | 24 | பிரபந்தங்கக்கு உரையிடு | பிரபந்தங்கட்குஉரை யிடுதல் |
| 1 | 25 | நனகு | நன்கு |
| 5 | 26 | இல்லூருக் கரு | இல்லூருக் கரு |
| 23 | 31 | ஒருரையை | ஒருரையை |
| 19 | 33 | நூல்கட்டு | நூல்கட்கு |
| 33 | 33 | ஒவ்வோரிடத் திலுஈ | ஒவ்வோரிடத்திலும் |
| 1 | 34 | ஒரிரு | ஓரிரு |
| 35 | 34 | பாடுவள் | படுவள் |
| 16 | 36 | கவினிச் | கவிச். |
| 21 | 36 | சென்றனைறு | சென்றென்று |
| கீழிருந்து 4வது வரி | 37 | இடங்களைச் | இடங்களைச் |

| வரி | பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 38 | சிகரமாகத் | இகரமாகத் |
| 6 (பாசுரம்) | 38 | யுன்ளே | புன்ளே |
| 23 | 38 | திண்ணவே | திண்ணணவே |
| 30 | 38 | மேற்பட் தான | மேற்பட்டதான |
| 7 | 40 | சாத்தான் + கு | சாத்தன் + கு |
| 10 | 40 | ஸ்ரீசுநச் | ஸ்ரீகனச் |
| 3 | 43 | வைஜந்தி | வைஜயந்தி |
| 7 | 44 | தெரியாமை யில்லை | தெரியாமலில்லை |
| 20 | 45 | by | — |
| 20 | 46 | ஏழாமபத்தில் | ஏழாம்பத்தில் |
| 10 | 48 | பலமைுற | பலமுறை |
| 31 | 50 | வரதசாரியர் | வரதாசாரியர் |
| 33 | 50 | பரமபதித் தாகச் | பரமபதித்ததாகச் |
| 8 | 51 | பிகரகுமரோர் | பிகரகுரோர் |
| 24 (தலைப்பு) | 51 | நாளேடு களுலும் | நாளேடுகளிலும் |
| 23 | 52 | வாரி வழங்கக் | வாரிவழங்கிக் |
| 27 | 55 | நூல்களை | நூல்களை எழுதியவர் |
| 28 | 55 | எழுதிய உரை எழுதியவர் | எழுதிய உரை மிகச் |
| 22 | 56 | Presidents | President's |
| 11 | 57 | Divyarth | Divyartha |
| 18 | 57 | Wheres | Where |
| 30 (செய்யுள்) | 61 | தோன்றுக | தோன்றுக் |
| கடைசிவரி | 65 | கேசவன் | சேவகன் |
| 19 | 66 | 'இலவசம்' என்றும் | 'இலவசம்' என்னும் |
| 17 | 68 | ஸ்ரீவத்ஸாம் புதி | ஸ்ரீவத்ஸ வம்சாம்புதி |
| கடைசி வரி | 69 | அண்ணங்கி ரார்ய | அண்ணங்கராரியர் |



குரு அச்சகம் திருவல்லிக்கேணி சென்னை-5 போன் : 844371